

# தமிழரசு

1-7-1988 ரூ. 1






கோவையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டை 18.6.1988 அன்று பிரதமர் ராஜீவ் காந்தி துவக்கி வைத்தார்.



கோவையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஐந்தாவது மாநாட்டையொட்டி தமிழ்நாடு செய்தி மக்கள் தொடர்புத்துறை அமைத்திருந்த பொருட்காட்சியை ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்ஸாண்டர் ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ்.எஸ். சித்து, தலைமைச் செயலாளர் திரு எம்.எம். ராஜேந்திரன் ஆகியோர் பார்வையிட்டனர்.

# 19

தமிழரசு இதழ் தனது பதினெட்டு ஆண்டுப் பயணத்தை முடித்துப் பத்தொன்பதாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்களுக்குத் தொடர்ந்து ஆதரவளித்து வரும் எழுத்தாளர்கள், விளம்பரதாரர்கள் வாசகர்கள், முகவர்கள் ஆகியோருக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



— ஆசிரியர்

## தமிழரசு பத்தொன்பதாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது...


**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2019

விபவ - ஆனி 17

மலர்: 19 இதழ்: 1

1-7-1988


# அரசு அலுவலர்களுக்கு அரசின் சலுகைகள்! தலைமைச் செயலாளர் அறிவிப்புகள்

(9-ஆம் பக்கம்)



**✱ நிர்வாகத்தில் தூய்மை ✱ வேலைவாய்ப்பு - தொழில் வளர்ச்சிக்கு முதலிடம்**

**✱ ஏழை எளிய மக்களுக்குப் பாதுகாப்பு**

# தமிழக மக்களுக்கு பிரதமர் வாக்குறுதி


**மாண்புமிகு பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் ஜூன் 18, 20, 21, தேதிகளில் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். 18-ஆம் தேதி கோவையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டினை தொடங்கி வைத்தார். ஜூன் 20, 21 இரு நாட்களிலும் ஐந்து மாவட்டங்களில் சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்தார். தமது பயணத்தின்போது ஐம்பது இலட்சம் மக்களைச் சந்தித்தார் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இந்தப் பயணத்தின்போது பிரதமர் ஆற்றிய உரையிலிருந்து முக்கிய பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.**

✱ குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டபோது தமிழ்நாட்டில் நிர்வாகத் துறையில் தூய்மை, தொழில் வளர்ச்சி, ஏழை எளிய மக்களுக்குப் பாதுகாப்பான ஆட்சியாக இருக்க வேண்டும் என கவர்னரிடம் கூறினோம். கவர்னரும் அதைச் செய்து இருக்கிறார்.

✱ தமிழகத்தில் ஆயிரக்கணக்கான பைல்கள் அப்படியே கிடப்பில் கிடந்தன. அதை வெளியில் கொண்டு வரவேண்டும் என கவர்னரிடம் கூறினோம். கடந்த 4 மாதங்களாக வேலை துரிதமாக நடந்து வருகிறது.

✱ தமிழ்நாட்டில் கடந்த 3 மாதத்தில் 600-க்கும் மேற்பட்ட மூடிக் கிடந்த நலிந்த தொழிற்சாலைகள் ஓடத் துவங்கி உள்ளன. கிராமப்புறப் பெண்கள் 25 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பளிக்கத் திட்டமிடப்பட்டு உள்ளது.

✱ 19 ஆயிரம் பெண்கள் முதியோர் பென்ஷன் பெற்று உள்ளனர். காமராசர் பெயரில் 27 கோடி ரூபாய் செலவில் தாழ்த்தப்பட்டோருக்கான வீடு கட்டும் திட்டம் செயல்பட உள்ளது. உடல் ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பில் 3 சதவீத இட ஒதுக்கீட்டைச் செயல்படுத்தக் கூறி உள்ளேன்.





முன்சீப் மாஜிஸ்திரேட்கள் பணிகளுக்குத் தகுந்த நபர்களைத்தேர்ந்தெடுக்கும் பணி துவங்கி உள்ளது.

* தமிழகத்தில் சிறிய பெரிய நகரங்கள் புறக்கணிக்கப்பட்டு வந்து உள்ளன. நகர்ப்புறங்களை உலக வங்கி உதவியுடன் மேம்படுத்த ரூ. 600 கோடியில் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் மதுரை உட்பட 10 நகரங்கள் பயன்பெறும்.


இந்தத் திட்டத்தின் மூலம் குடிசைப் பகுதிகளுக்குக் குடிநீர், மின்சார வசதி கிடைக்கும். இந்தத் திட்டத்தை அமல்படுத்தும்வேலை துவங்கிவிட்டது. இரண்டு ஆண்டுகளில் இந்தத் திட்டத்தின் மூலம் நகரங்களில் பெரிய புரட்சிகரமான மாறுதல் ஏற்பட உள்ளது. இதை அருகில் உள்ள நகரங்களுக்கும் விரிவாக்க கவர்னரிடம் கூறி உள்ளேன்.

* கவர்னர் ஆட்சி என்பது மத்திய அரசின் கொள்கைகளைப் பிரதிபலிக்கும் ஆட்சியாகும். இந்த ஆட்சியில் புதிய வேகம், புதிய செயல்பாடு, புதிய திறமை ஆகியவை உள்ளன. அதற்குக் காரணம் கவர்னர் மத்திய அரசின் கொள்கைகளை அமல் செய்கிறார் என்றாலும், தமிழகத்தின் அன்றாட நிர்வாகத்தில் நாம் தலையிடுவது கிடையாது.

* இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் கடமை நமக்கு உள்ளது. அதற்குப் பொருளாதார மறுமலர்ச்சி எற்பட வேண்டும். தமிழகத்தில் அதற்கான முயற்சி மற்றும் திட்டம் தீட்டுமாறு கவர்னரிடம் கேட்டு உள்ளேன். தற்போது தொழில் வளர்ச்சியில் மறுமலர்ச்சி ஏற்பட்டு உள்ளது. தமிழநாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் நலன்களுக்காகப் புதிய திட்டங்களைத் தீட்ட கவர்னரிடம் கூறி உள்ளேன். நடப்பு ஆண்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ரூ. 150 கோடி செலவிடப்படும். தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் குடிநீர், மின்சாரம் கிடைக்கத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

* தமிழக அரசில் பின் தங்கியவர்கள், தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள் ஆகியோர் நலனைக்





# மக்கள் கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கும் மாவட்ட நிர்வாகம்

**திட்டமிடுவதிலும் வளர்ச்சிப் பணிகளிலும் நல்ல பலன் கிடைக்கக் கூடிய வகையில் மாவட்ட நிருவாகத்துக்கு ஒரு முன்மாதிரியை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வடித்துக் கொடுக்கவேண்டும்.**

**மாவட்டப்பணிகள் அனைத்துக்கும் பொறுப்பு வகிப்பதாகவும், அதே நேரத்தில் மக்கள் கோரிக்கைகளை ஏற்றுச் செயல்படுவதாகவும் மாவட்ட நிர்வாகம் இருக்க வேண்டும்.**

**மக்களின் பிரதிநிதிகளும், மக்களும் இணைந்து பணியாற்றி வளம் காண வேண்டும்.**

**மக்கள் பிரதிநிதிகளும், அதிகாரிகளும் இணைந்து செயல்படுகின்ற முறை தேசிய அளவிலும், மாநில அளவிலும் மட்டுமின்றி மாவட்ட அளவிலும் பயன்தரத்தக்கது.**

**ஆனால் இதிலும் அந்தந்த வட்டாரத் தேவைகளுக்கேற்ப, மூன்று நான்கு விதிமுறைகளைக்கையாண்டு பார்ப்பது நலம்.**

**தாக்கல் செய்யப்பட்ட நான்கு வகையான மாதிரி மாவட்ட வளர்ச்சித் திட்டங்களை ஆராய்ந்து பார்க்கலாம். தற்போதைய ஊராட்சி முறை குறித்தும் கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.**

**மாவட்ட அளவில் திட்டம் வகுக்கும் போர்டுகள் அமைப்பது அவசியமா என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆய்வு செய்ய வேண்டும். மாவட்ட நிர்வாகச் சீர்திருத்தம் பற்றி யோசனை கூறும்போது ஏழை எளியவர்கள் நலனை முதன்மையாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.**

**—பிரதமர் ராஜீவ் காந்தி**

**[கோவையில் ஜுன் 18ஆம்தேதி தொடங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் ஆற்றிய உரையில்]**

---

கவனிக்க ஒரே துறைதான் உள்ளது என கவர்னர் கூறினார். தாழ்த்தப்பட்டோர் மலைவாழ்மக்களைக் கவனிக்க தனித் துறையும், பின் தங்கியவர்கள் நலன் கவனிக்க தனித்துறையும் எனப் பிரிக்க முடிவு செய்துள்ளோம். இதனால் அவரவர் நலன் உரிய முறையில் பாதுகாக்கப்படும்.

* தமிழகத்தில் கவர்னர் ஆட்சிக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. பல்வேறுதரப்பு மக்களும் பாராட்டுகின்றனர். இன்னும் சிறிது காலம் கவர்னர் ஆட்சி நீடிக்க வேண்டும் என்றும் கோருகின்றனர். அந்த அளவுக்கு நல்ல முறையில் ஆட்சி நடத்தி வரும் கவர்னர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டரைப் பாராட்டுகிறேன்.

* கவர்னர் ஆட்சி ஏற்பட்டபோது, விதவைகள் பென்சன் கேட்டிருந்த 19 ஆயிரம் பேருக்குக் கடந்த இரண்டு மூன்று மாதங்களில் பென்சன் வழங்க உத்தரவிடப்பட்டு உள்ளது.


* நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்தப் பிரச்சினை தீர்வுக்கு நீண்டகாலத் திட்டம் அவசியமாகிறது.


* கிராமப்பகுதிகளில் வேலைவாய்ப்பை அதிகரிக்க தீவிர முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக பல சிறப்புத் திட்டங்கள் கொண்டுவருவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

தமிழகத்தை மீண்டும் முன்னணி இடத்தில் இருக்கச் செய்து, மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க உதவ வேண்டும். இவற்றைச் செய்ய மக்கள் ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கூறியதுபோல, கங்கை









மதுரை-மேலூரில் அமரர் கக்கன் சிலை திறப்பு

நதிப்புறத்துக் கோதுமைப் பண்டத்தைக்காவிரியின் வெற்றிலைக்கு மாற்றிக்கொள்வோம். சிங்க மராட்டியர் கவிதைகளுக்குச் சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம். காவியம் செய்வோம்; ஓவியம் செய்வோம் என்றெல்லாம் கனவு கண்ட புதுமை இந்தியாவை உருவாக்குவோம். நமது வேற்றுமையில் ஒற்றுமை என்ற கொள்கை மாறாமல் செயல்படுவோமாக!

மேட்டூரில் நிருபர்களுக்கு, மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ் காந்தி பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

* சிலிகான் தொழில்நுட்பத்தில் முன்னேறிய மற்ற நாடுகளுடன் நாமும் இணைவதில் பெருமை அடைகிறேன். இந்தியத் தொழில்நுட்பத்தை வளர்ப்பதன் மூலம் வெளிநாட்டுத் தொழில்நுட்ப இறக்குமதியைக் குறைக்க முடியும். தேசிய சிலிகான் நிறுவனத்துடன் இந்த ஆலையை இணைப்பது பற்றி அரசு விரைவில் அறிவிக்கும். உள்நாட்டுத் தொழில்நுட்ப வளர்ச்சியைக் காணவே நான் இந்த ஆலைக்கு விஜயம் செய்துள்ளேன். இதுபோன்ற முழுமையான தொழில்நுட்பம் நமக்கு ஊக்கமளிக்கக்கூடியது. தேசிய அளவில் இந்த ஆலையை பெரிய நிறுவனமாக மாற்றும் முன்பு, சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பற்றியும் பார்ப்பது முக்கியம். இது குறித்து ஆராய சம்பந்தப்பட்ட துறையை அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

* இனி வருங்காலத்தில் இந்தியத் தொழில்நுட்பத்தை ஆராய்ந்த பிறகே வெளிநாட்டுத் தொழில்நுட்ப இறக்குமதி பற்றி அரசு முடிவு செய்யும்.

சூரிய ஒளியிலிருந்து 35 வாட் மின்சாரம் தயாரிக்கும் பேனலை மாண்புமிகுபிரதமர் அவர்கள் திறந்து வைத்தார். இந்தப் பேனலை பெங்களூர் கனரக நிறுவனம் மேட்டூர் சிலிகான் வில்லையைப் பயன்படுத்தித் தயாரித்து உள்ளது. இது இந்தியாவிலேயே ஒரு புதுமுயற்சி என்பது குறிப்பிடத்தக்கது.

* இந்தியாவின் சுதந்திரப் போராட்டக் காலத்திலும், அதற்குப் பின்னாலும், தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறது. கல்வித்துறை, வேளாண்மைத்துறை, தொழில் துறைகளில் இந்தியா முழுமைக்கும் தமிழ்நாடு வழிகாட்டியாகத் திகழ்ந்தது.

* உதாரணமாக, சொல்ல வேண்டுமானால் உயாந்த ரக நெல் விளைச்சல் பரிசோதனையின் போது தமிழ்நாடுதான் வெற்றி பெற்றது. அதே



பழனி திருக்கோயிலில் பிரதமர்

போல எண்ணெய் வித்துத்துறை, கரும்புச் சாகுபடி மற்றும் இதர விவசாயத் துறையிலும் தமிழ்நாடு வழிகாட்டி இருந்திருக்கிறது.

* நான் தமிழ்நாட்டுக்கு வரும்போதெல்லாம் ஆளுநரின் ஆட்சியைத் தமிழக மக்கள் வரவேற்பதை காண்கிறேன். ஆளுநரும் அவரது சகாக்களும் சிறப்பான ஆட்சி நடத்துகிறார்கள் என்று தமிழ்நாடு மக்கள் பாராட்டுவதே இதற்குச் சான்று ஆகும். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன்.

* கடந்த காலத்தில் தொடங்கப்பட்ட நல் வாழ்வுத் திட்டங்களைத் தொடர்ந்து அமல்படுத்துவோம். சத்துணவுத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவோம். பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட திட்டங்களை வகுத்துச் செயல்படுத்துவோம்.



மேட்டூர் சிலிகான் தொழிற்சாலையில் பிரதமர்

* தமிழ்நாட்டில் ஏழ்மை மிகுந்துள்ளது. ஏழை எளிய மக்களுக்குத் தனி கவனம் செலுத்தி சிறப்புத் திட்டங்களை அமல்படுத்துவோம்.

* தமிழ்நாட்டில் 20 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளனர். 10 சதவீதம் தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் உள்ளனர். 70 சதவீதம் பின் தங்கிய மக்கள் உள்ளனர். இவர்களின் வளர்ச்சி முன்னேற்றத்திற்கு நாங்கள் சிறப்புத் திட்டம் தீட்டி அமல்படுத்துவோம்.

* சமுதாயத்தில் ஒரு பிரிவான பெண்கள் வளர்ச்சி அடையாமல் இருக்கிறார்கள். அவர்களின் வளர்ச்சிக்குத் திட்டம் தீட்டிச் செயல்படவேண்டும்.

* ஆளுநரின் நிர்வாகத்தில் இதுவரை விதவை பென்ஷன்தாரர்களின் சுமார் 19 ஆயிரம் விண்ணப்பங்கள் பைசல் செய்யப்பட்டிருக்கிறது.

* பாசனத்துறை மேம்பாட்டுக்காகப் பல்வேறு திட்டங்களை மாநில அரசு மேற்கொள்ளும்.

* கால அடிப்படையிலான தீவிர திட்டத்தின் கீழ், மாநலத்தில் 2,700 குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும்.

* தமிழ்நாட்டில் ஏற்கெனவே 80 சத நீர்ப் பாசன வசதிகள் பயன்படுத்தப்பட்டுவிட்டன. இந்த நிலையில் அது காவிரியைத்தான் நம்பியிருக்கிறது. எனவே, காவிரி நீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண தனது செல்வாக்கைப் பயன்படுத்தி மத்திய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

## தலைமைச் செயலாளர் அறிவிப்பு



# அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம்!

## மாதந்தோறும் ரூ.70

விலை உயர்வுக்கு ஏற்றவிகிதத்தில், தனது ஊழியர்களின் அகவிலைப்படியை தமிழக அரசு அவ்வப் போது உயர்த்தி வருகிறது. ஏற்கெனவே பலமுறை அகவிலைப்படியை உயர்த்தித் தந்த தமிழக அரசு, கடந்த மே 31-ஆம் தேதியன்று மற்றொரு அகவிலைப் படியை அறிவித்தது. அரசைச் சேர்ந்த 10 இலட்சம் ஊழியர்கள் இந்தப் பயனைப் பெறுகிறார்கள்.

இதன்படி 3 ஆயிரத்து 500 ரூபாய் வரை மாதச் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு 18 சதவிகிதமும், 3500 ரூபாய்க்கு மேல் வாங்குபவர்களுக்கு 13 சதவிகித மும் அகவிலைப்படி உயர்த்தப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, குறைந்தபட்சம் 26 ரூபாயும் அதிகபட்சம் 175 ரூபாயும் அரசு ஊழியர்களுக்கு, கூடுத லாகக் கிடைக்கிறது.

பல்கலைக்கழக மானியக் குழு சம்பள வீதத்தில் பணியாற்றும் கல்வித்துறை ஊழியர்களுக்கும் ஆசிரியர் களுக்கும் ரூ. 1,100 வரை சம்பளம் வாங்குகின்றவர் களுக்கு 34.5 சதவிகிதமும், 1100-க்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு 27.6 சதவிகிதமும் அகவிலைப்படி உயர்த்தப்பட்டுள்ளது.

அகவிலைப்படி 1988 ஜனவரி முதல் தேதியிலிருந்து கணக்கிடப்படுகிறது. அகவிலைப்படி உயர்வின் காரண மாக அரசுக்கு ஆண்டுக்கு 50 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படுகிறது.

புதிய அகவிலைப்படி ஜூன் மாதச் சம்பளத்துடன் அளிக்கப்படுகிறது. ஜனவரி முதல் மே வரை 5 மாதத் திற்குரிய அகவிலைப்படி உயர்வு தனியாகக் கணக் கிடப்பட்டு, ஊழியர்களுக்கு மொத்தமாக வழங்கப்பட் டுள்ளது.

ஊதிய உயர்வு அறிவிப்பைத் தொடர்ந்து மகிழ்ச்சி தரும் மற்றொரு அறிக்கையைத் தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு எம். எம். இராஜேந்திரன் 19-6-88 அன்று வெளியிட்டார். அது வருமாறு:

''தமிழக அரசு ஊழியர்கள் அனைவருக்கும் இடைக்கால நிவாரணம் ரூ.70 அளிக்கப்படும்.

''ஒட்டுமொத்தமான சம்பளம் ரூ.500 பெறுபவர் களுக்கு 35 ரூபாயும், ரூ. 500-க்குக் குறைவாகப் பெறு பவர்களுக்கு 25 ரூபாயும், பகுதிநேர அரசு ஊழியர் களில் 100 ரூபாய்க்கு மேல் சம்பளம்பெறுபவர்களுக்கு 15 ரூபாயும், 100 ரூபாய்க்குக் குறைவாகப் பெறுபவர் களுக்கு 10 ரூபாயும் இடைக்கால நிவாரணமாக வழங் கப்படும்.

''இந்தச் சம்பள உயர்வு ஜூன் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

''இதன் காரணமாக ரூ. 80 கோடி, அரசுக்கு அதிகம் செலவாகும்.

''ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் சம்பளம், ஊக்கத் தொகை ஆகியவற்றை நிர்ணயிப்பதற்காக அரசு சார் பில் ஊதியக்குழு நியமிக்கப்பட உள்ளது.

''அந்தக் குழு அளிக்கும் அறிக்கையின் அடிப்படை யில் அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப் படும்.''

## தலைமைச் செயலாளர் அறிவிப்பு

# ஆளுநர் கொடுத்த வாக்குறுதி நிறைவேறுகிறது

# கல்லூரி ஆசிரியர்களுக்கு புதிய ஊதிய விகிதங்கள்

தமிழ்நாட்டில் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் வேலைநிறுத்தம் காரணமாகப் பொது மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் தவிர்ப்பதற்காக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் இடங்களை நிரப்புவதற்காக வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள், புதிதாக வேலையில் தாற்காலிகமாக அமர்த்தப்படுவார்கள். நடைபெறும் வேலைநிறுத்தத்தில் பங்கு கொண்டதாகக் கைது செய்யப்பட்டு தாற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளவர்களின் மீது இலாகா ரீதியான விசாரணையும், போலீஸ் வழக்கும் நடைபெறும். அவர்கள் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டு நிரந்தரமாக வேலை நீக்கம் செய்யப்படும் பட்சத்தில் வேலைவாய்ப்பகம் மூலம் தாற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளர்கள் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு எம். எம். ராஜேந்திரன் 28-6-88 அன்று தெரிவித்தார்.

### ஊதியக்குழு தலைவர் ஒருவாரத்தில் அறிவிப்பு

அரசு அறிவித்திருக்கும் ஊதியக்குழுவின் தலைவர் உறுப்பினர்கள் பற்றிய அறிவிப்பு வெகு விரைவில் வெளியிடப்படும் என்றும், அநேகமாக அடுத்த சில தினங்களுக்குள் அறிவிப்பு வரலாம் என்றும் தலைமைச் செயலாளர் கூறினார்.

### தலைமைச் செயலாளர் அறிவிப்பு

வேளாண்மைப் பல்கலைக்கழகம், தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் நீங்கலாக மற்ற எல்லா பல்கலைக் கழகங்கள், கல்லூரிகளிலும் பணியாற்றும் பேராசிரியர்கள், ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழக மானியக் குழு (யூ.ஜி.சி.) அளித்த பரிந்துரையின்படி புதிய ஊதிய விகிதங்களை அமல்படுத்த தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

1986-ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியிலிருந்து இந்தப் புதிய ஊதிய விகிதம் முன் தேதியிட்டு வழங்கப்படும்.

மேற்கண்ட தகவலை, தமிழக அரசின் தலைமைச் செயலர் திரு எம். எம். ராஜேந்திரன் (28-6-'88) தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்தார்.

இதன் மூலம் பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஆளுநர் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படுகிறது. பல்கலைக் கழக மானிய ஊதியக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் வழங்கும் ஊதியத்தில் எண்பது சதத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. இருபது சதத்தை மாநில அரசு அளிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இருபத்தி ஒன்பது மாத கால நிலுவைத் தொகையை அளிப்பதற்குத் தமிழக அரசுக்குக் கூடுதலாக இரண்டு கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவாகும். மொத்த நிலுவைத் தொகையும் (இருபத்தி ஒன்பது மாத காலம்) 14 கோடியே 65

(46 ஆம் பக்கம் பார்க்க)

### அட்டைப்பட விளக்கம்:

பிரதமர் திரு ராஜீவ் காந்தி கடந்த ஜூன் 18, 20, 21 தேதிகளில் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்தார்கள்.

சூரிய வெப்பத்தை மின் ஆற்றலாக மாற்றிட உதவும் மூலப் பொருளாகிய சிலிகான் எனும் பொருளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை மேட்டூரில் அமைந்துள்ளது. பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் 20.6.88 அன்று மேற்படி தொழிற்சாலையை பார்வையிட்டார். அங்கு மரக்கன்று ஒன்றையும் நட்டார். அந்தக் காட்சிகளைப் பின்பக்க அட்டை சித்தரிக்கிறது.

# இந்த வேலை நிறுத்தம் தேவைதானா?

**மாநில அரசு அலுவலர்களில் ஒரு பிரிவினர் 22.6.88 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசு செயல்படுத்தி வரும் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களையும் வளர்ச்சிப் பணிகளையும் தடுக்கும் நடவடிக்கையாகும் இது. இந்த வேலை நிறுத்தத்தால் ஏற்படும் பாதகங்களை தமிழ்நாடு ஏற்றுக் கொள்ள இயலுமா? இந்த வேலை நிறுத்தம் நியாயந்தானா?**

## உண்மை நிலை என்ன?

### முக்கிய கோரிக்கை

1. மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம்
2. ஒரு மாத ஊதியம் - போனஸ்

### சலுகைகள்

- ★ இந்தியாவிலுள்ள பெரும்பாலான மாநிலங்களில் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் கிடையாது.
- ★ வழக்கமாக ஏழு முதல் பத்து ஆண்டுக்கு ஒரு முறை தான் ஊதியக் குழு அமைக்கப்படும். ஆனால், இப்பொழுது நான்கு ஆண்டுகளுக்குள்ளாகவே ஊதியக்குழு அமைக்க அரசு இசைந்துள்ளது.
- ★ 1976—77ஆம் ஆண்டில் தரப்பட்ட இடைக்கால நிவாரணம் ரூ.10மட்டும்தான். ஆனால் ஊதியக்குழுவின் பரிந்துரைகள் கிடைப்பதற்கு முன்னதாகவே 1-6-88 முதல் இடைக்கால நிவாரணமாக ரூ.70 முறைப்படுத்தப்பட்ட சம்பள விகிதம் பெறும் அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதுவரையிலும் இவ்வளவு உயர்ந்த அளவு இடைக்கால நிவாரணம் கொடுக்கப்பட்டதில்லை.
- ★ ஆசிரியர்கள் அரசு அலுவலர்களுக்கு இணையாக சம்பளத்தையும் மற்ற சலுகைகளையும் பெறுகிறார்கள்.

### மத்திய அரசு அலுவலர்கள் பெறாத நமது அலுவலர்கள் பெறும் சிறப்புச் சலுகைகள்

- ★ **எல்லா நிலைகளிலும் நகர ஈட்டுப்படி மிகக் கூடுதலாக அளிக்கப்படுகிறது. நமது அலுவலர்களுக்கு அதிக அளவாக ரூ.225 கிடைக்கிறது. ஆனால், மத்திய அரசு அலுவலர்கள் அதிக அளவாக ரூ.100 தான் பெறுகிறார்கள்.**
- ★ ஈட்டிய விடுப்பை ஒப்படைவு செய்து ரொக்கமாகப் பெற்றுக் கொள்ளலாம்
- ★ ஓய்வு பெறும் பொழுது ரூ.10,000/- ரொக்கமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
- ★ குடும்பநல நிதியாக ரூ.20,000/- பெறலாம்.

### உங்கள் சிந்தனைக்குச் சில உண்மைகள்...

- ★ **மக்கள் தொகை அடிப்படையில் கணக்கிட்டுப் பார்த்தால் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அரசு அலுவலர்கள் அதிகம். அதனால், மாநில அரசு அலுவலர்களுக்கு ஆகும் செலவு மிக அதிகமாகும்.**
- ★ தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் அனைத்தையும் நமது மாநில அரசே வழங்குகிறது. அலுவலர்களில் சில பிரிவினர் கூறுவது போன்று மாநில அலுவலர்கள் சம்பளத்தில் 80 சதவீதத்தை மத்திய அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுவதில்லை.
- ★ வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மீது காவல் துறையினர் அத்துமீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறப்படுவது உண்மை அல்ல. பெண்களும் மற்றும் மருத்துவ கவனிப்பு தேவைப்பட்டவர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள்.
- ★ ரூ.320 கோடி நிதி பற்றாக்குறை உள்ள இந்தச் சூழ்நிலையில் மேலும் சலுகைகளை எவ்வாறு வழங்க முடியும்?
- ★ பெரும்பாலான அலுவலர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் விருப்பமில்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வேலைக்கு வரும்போது உரிய பாதுகாப்பை அளிப்பது அரசின் கடமையாகும். அரசுக்கு யாரையும் பழிவாங்கும் எண்ணம் இல்லை. ஆனால், சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கும் பொறுப்பு உண்டு. எனவே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டவர்கள் மீது விதிமுறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ★ இப்பொழுது அளிக்கப்படும் இடைக்கால நிவாரணத்தால் ரூ.80 கோடி அளவுக்குச் செலவாகும். இந்த நிலையில் வளர்ச்சிப் பணிகளுக்கும் மற்றும் வறுமையைப் போக்கி நலிந்த பிரிவினரின் மேம்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையை அரசு அலுவலர்கள் சம்பளத்துக்காக செலவிட இயலாது.
- ★ இப்படிச் சில பிரிவினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதால் பொதுமக்களின் நலன்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளோர்களுக்கு நாம் விடுக்கும் வேண்டுகோள்-

  ''உடனடியாக வேலைக்கு திரும்புங்கள்'' என்பதாகும். அவர்கள் அப்படிச் செய்தால் அவர்கள தகுந்த முறையில் நடத்தப்படுவார்கள் என்று அரசு உறுதியளிக்கிறது.

**அரசு அலுவலர்கள் உண்மை நிலையை உணர்ந்து உடனடியாகத் தங்களது பணிக்குத் திரும்புவார்கள் என்று அரசு நம்புகிறது.**

**தலைமைச் செயலாளர்**

**தமிழ்நாடு அரசு**

சென்னை
25.6.88




# சாலைப் பாதுகாப்பு

சாலையில் நடக்கும் போது நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்.

வாகனமோட்டியானாலும் சரி, பாதசாரியானாலும் சரி சாலை விதிகளை மதிக்க வேண்டும்.

அலட்சியப்போக்கு ஆபத்தை உண்டாக்கும் என்பதை நாம் உணர வேண்டும்.

விவேகம் இருக்க வேண்டுமே தவிர, வேகம் என்பது சாலையைப் பொறுத்தவரை சரியல்ல என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும்.

''சென்னை நகரில் தினசரி ஒரு விபத்து நடக்கிறது. காலையில் வீட்டிலிருந்து புறப்படும் ஒருவர், மாலையில் வீடு திரும்பும் வரை அவர் உயிருக்கு உறுதி இல்லை. விபத்துக்கள் ஏற்படாதவாறு வாகனங்களை ஓட்டினால்தான் இத்தகைய விபத்துக்கள் குறையும்'' என்று சென்னை நகரக்காவல் துறை ஆணையாளர் திரு பி. துரை குறிப்பிட்டார்.

சாலைப் பாதுகாப்பு வார விழா 6-6-88 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில் தொடங்கியது.

சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு எல்.எம். மெனசிஸ் பேசுகையில், ''தற்போது சென்னை நகரச் சாலைகளை 6 இலட்சம் சைக்கிள் ஓட்டிகளும், 2.50 இலட்சம் இரு சக்கர வாகன ஓட்டிகளும், 1.30 இலட்சம் நான்கு சக்கரவாகன ஓட்டிகளும் பயன்படுத்துகின்றனர்'' என்றார்.

விழாவைத் தொடங்கி வைத்து சட்டம் - ஒழுங்கு இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு கே. ராஜசேகரன் நாயர்பேசுகையில், ''போக்குவரத்து விதிகள் குறித்துப் பள்ளிகளில் கற்றுத் தருவது அவசியம். இளம் பருவத்திலேயே சாலைப் போக்குவரத்து விதிகள் குறித்து உணர்ந்து கொள்வது நல்லது. இதுபோன்ற சாலைப் பாதுகாப்பு வார விழா, பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும்'' என்றார்.

பல்லவன் போக்குவரத்துக் கழகத் தலைவர் திரு சி. துரைராஜ் பேசுகையில், 'அண்மையில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரப்படி 39 சதவிகிதம் விபத்துக்கள் ஓட்டுநர்கள் மூலமும், 32 சதவிகித விபத்துக்கள் எதிரில் வரும் வாகன ஓட்டுநர்கள் மூலமும், 12 சதவிகித விபத்துக்கள் பாதசாரிகள் மூலமும், 11 சதவிகித விபத்துக்கள் பஸ் பயணிகள் மூலமும், 40 சதவிகித விபத்துக்கள் அதிக வேகம் மூலமும் ஏற்படுகின்றன.' என்று தெரிவித்த அவர், இவற்றைப் போக்க, 'ஓட்டுநர்களுடைய திறமை, போக்கு, சமூகப்பொறுப்பு ஆகியவை விபத்துகளைத் தவிர்க்க உதவும்' என்றார்.

இந்த விழாவுக்கு மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தியை, போக்குவரத்துத்துறை ஆணையாளர் திரு எம். பி. பிரானேஷ் படித்தார். தொடக்கத்தில் போக்குவரத்துத் துறை உதவி ஆணையாளர் திரு எல். ரஞ்சித்சிங் அனைவரையும் வரவேற்றார். உதவி ஆணையாளர் திரு ஆர். சந்தானம் நன்றி கூறினார். விழாவையொட்டி, சாலைப் பாதுகாப்புப் பற்றிய கண்காட்சி ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

சாலைப் பாதுகாப்பு வார விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சி 12-6-88 அன்று நடந்தது.


விழாவிற்குத் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் தலைவர் திரு. எம். ரகுபதி தலைமை தாங்கினார்.

ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ். எஸ். சித்து அவர்கள் கலந்து கொண்டார்.

12 வருடமாக விபத்தில் சிக்காமல் பஸ் ஓட்டிய டிரைவர்கள் 22 பேருக்குத் தலா ரூ.475 ரொக்கப் பரிசு வழங்கினார்.

அப்போது அவர் பேசும்போது கூறியதாவது:

''1986-ஆம் ஆண்டு 40 ஆயிரம் சாலை விபத்துக்கள் நடைபெற்றன. அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டிலும் சாலை விபத்துக்கள் கணிசமான அளவு குறைந்துள்ளன. சாலை



விபத்துக்களை மேலும் குறைக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும். டிரைவர்களுக்கு நல்ல முறையில் பயிற்சி அளிக்க வேண்டும். டிரைவர்களுக்கு லைசென்சு வழங்கும் முறையை மேலும் கடுமையாக்க வேண்டும். மதுப் பழக்கம் உடையவரா, இல்லையா என்பதையெல்லாம் பார்த்துதான் லைசென்சு கொடுக்க வேண்டும்.

'மண்டலப் போக்குவரத்து அலுவலகங்களில் ஒவ்வொரு டிரைவரின் முழு விவரங்களையும் வைத்திருக்க வேண்டும். அவர்களது லைசென்சைப் புதுப்பிக்கும்போதுஅதைச் சரி பார்க்க வேண்டும். பள்ளிக்கூட மாணவ - மாணவிகள் சாலை விதிகளை ஆரம்பக் கட்டத்திலேயே தெரிந்து கொண்டால், சாலை விபத்துக்கள் பெரிதும் குறைய வாய்ப்பு இருக்கிறது. பள்ளிக்கூடப் பாடத்திட்டத்தில்கூட சாலை விதி மற்றும் சாலைப் பாதுகாப்பு போன்றவற்றைச் சேர்க்கலாம்.

''விபத்தில் சிக்கியவர்களுக்குச் சிகிச்சை அளிக்க தனியார் நிறுவனங்களும் ஒத்துழைப்புத் தர வேண்டும். போலீசுடன் இணைந்து அவர்கள் செயல்பட வேண்டும். சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் விபத்து ஏற்பட்டு அதில் சிக்கியவர்களுக்கு உடனடி சிகிச்சை அளித்து அவர்களது உயிரைக் காப்பாற்ற ரூ. 7 கோடி செலவில் புதிய திட்டம் தொடங்கப் பட உள்ளது. இந்தத் திட்டத்தின் படி 46 ஆம்புலன்ஸ் வேன்கள் வாங்கப்பட்டு அவை அரசினர் பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவமனை, குழந்தைகள் நல மருத்துவமனை ஆகியவற்றில் நிறுத்தப்பட்டு இருக்கும். எங்காவது விபத்து ஏற்பட்டுபோலீசுக்குத் தகவல் தெரிந்தவுடன் அவர்கள் சம்பந்தப்பட்ட மருத்துவமனைக்குத் தொடர்பு கொண்டு ஆம்புலன்ஸ் வேனை உடனடியாக அனுப்பி வைப்பார்கள். இதன் மூலம் விபத்தில் சிக்கியவர்களை எளிதில், காப்பாற்றலாம். இந்த முறையை இன்னும் 3 வாரத்தில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.''

—நமது செய்தியாளர்

# நரிக்குறவர் நலம் பேணும் வங்கி

நாடோடிகளாய்த் திரியும் நரிக்குறவர்கள் தாங்களே ஓர் குடியிருப்பை அமைத்துக் கொண்டு நிரந்தரமாய் ஓரிடத்தில் வாழத் தலைப்பட்டுள்ளனர்.

புதுக்கோட்டையிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள ரங்கம்மாள் சத்திரம் என்னுமிடத்தில் முக்கியச் சாலையின் ஒரு மருங்கிலே இந்த நரிக்குறவர் குடியிருப்பு இருக்கின்றது. பல நிரந்தரக் கட்டடங்களிலிருந்தபோதும், இவை அனைத்தும் பாழடைந்த நிலையிலிருப்பதால், இவர்களே தங்களுடைய குடிசைகளைக்கட்டி வாழ்ந்து வருகின்றனர்.


இங்குள்ள 64 நரிக்குறவர் குடும்பத்தினரும் ஆண்டு முழுவதும் மணிமாலைகளையும், ஆடைகளையும் தயாரித்து விற்பனை செய்து காலம்தள்ளி வருகின்றனர். அறுவடைக் காலங்களில் அறுவடைப் பணிகளில் ஈடுபடுவதும் பயிரை நாசம் செய்யும் வயல் எலிகளைப் பிடிப்பதும் இவர்களது பகுதிநேரப் பணியாகும். எலி ஒன்றிற்கு 25 காசுகள் என இவர்கள் பெறும் ஊதியம், வாழ்க்கைச் செலவிற்குப் போதுமானதாக இருப்பதில்லை. எனவே, மணிமாலைகளைத் தயாரிக்கும் தொழிலையே அவர்கள் ஆண்டு முழுவதும் நம்பியிருக்க வேண்டியுள்ளது.



மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையின் பேரில் இங்குள்ள இந்தியன் வங்கிக் கிளை இந்த நரிக்குறவர்களுக்குத் தலா ரூ. 1000 கடன் வழங்கியுள்ளது. கடன்பெற்ற 64 குடும்பத்தினரும் மணிமாலைத் தொழிலை விரிவு செய்து, உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்திவிடுகின்றனர்.

**கோவையில் விழா**

# தியாகத்தை மதிப்போம்!



இந்திய விடுதலைக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் காணிக்கையாக்கிய வீரர்களை நினைவு கொள்ளவும், பெற்ற விடுதலையைப் பேணிக்காத்திட உறுதி ஏற்கவும், சுதந்திரத்தின் மாண்பினை இன்றைய தலைமுறைக்கு எடுத்துக்கூறவும், இந்திய விடுதலையின் 40-வது ஆண்டை ஒட்டி பல நிகழ்ச்சிகளை அரசு நடத்தி வருகிறது.

அதற்கிணங்க, வேலூர் சிறையில் வைக்கப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர்களை நினைவு கூரும் விழா தமிழ்நாடு அரசின் சார்பில் அண்மையில் நடத்தப்பட்டது. அதுபோன்றே கோவை சிறையில் வைக்கப்பட்டவிடுதலைப் போராட்ட வீரர்களை நினைவு கூரும் விழாவும், கோவை அரசுப் பொருட்காட்சியின் நிறைவு விழாவும் 11-6-88 அன்று கோவையில் நடைபெற்றது.

தியாகத் திருமகன் வ.உ.சி. அவர்கள் 1908-ஆம் ஆண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டார். அவர் சிறைப்பட்ட அறையை அண்மையில் அரசு கண்டுபிடித்தது. அந்த அறையில் வ.உ.சி. அவர்களின் நினைவாக நிறுவப்பட்ட கல்வெட்டினை மாண்புமிகு தமிழ் வளர்ச்சி உயர்நிலைக்குழுத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் திறந்து வைத்தார். சிறைச்சாலையின் முன்புறம் கோவை சிறையிலிருந்த தியாகிகளின் நினைவாக எழுப்பப்பட்ட நினைவுத் தூணையும், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என்.கோவிந்தன், இ.ஆ.ப. தலைமையில் செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப. முன்னிலையில் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சிவஞானம் திறந்து வைத்தார்.

பின்னர் விடுதலைப்போராட்டத் தியாகிகளும் பொதுமக்களும் விழா நடைபெறும் பொருட்காட்சி அரங்கத்திற்கு ஊர்வலமாக வந்தனர்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் திரு அ. ராஜமாணிக்கம் வரவேற்புரை ஆற்ற விழாத் துவங்கியது. தமது உரையில், இதுவரை 43 பொருட்காட்சிகளை அரசு நடத்தியுள்ளது என்றும் இதன் மூலம் அரசுக்கு நிகர வருமானமாக ரூ. 200.78 இலட்சம் கிடைத்துள்ளது என்றும் கூறினார்.

திருவாளர்கள் அய்யாமுத்து, எஸ். இராமசாமி ஐயர், ஜி. வி. இராமகிருஷ்ணன் ஐயர், பெரியார் ஈ.வெ. ராமசாமி, சி.பி.சுப்பையா, கே. பி. திருவேங்கடம், சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியார், எஸ். பத்பநாப ஐயங்கார், வ.உ. சிதம்பரனார், சுப்ரமண்ய சிவா, சி. என். கோபாலரத்னம் ஐயர், கே. ஆதிநாராயண ரெட்டியார், பி.எஸ். சுந்தரம், அருணாசல முதலியார், ஏ.ஆர்.வி. ஆச்சாரி, டி. கவுசல்யா தேவி ஆகிய தலைவர்கள் கோவை சிறையில் தண்டனை அனுபவித்தவர்களில் முக்கியமானவர்கள்.

இவர்களில் பதின்மரின் திருவுருவப் படங்களை டாக்டர் ம.பொ. சிவஞானம் திறந்து வைத்தார்.

பின்னர் விடுதலைப் போராட்ட வீரர்கள் சிறப்புரை ஆற்றினர்.

தியாகி திரு ஆர். ஏ. சண்முகத் தேவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

'நமக்கு சுதந்திரம் கிடைத்த அன்று கடைவீதிகளில் கொடி கிடைக்கவில்லையே என்று மக்கள் ஏங்கித் தவித்துக்கொண்டிருந்த அந்தக் காட்சியைக் காணும்போது நாங்கள் கஷ்டப்பட்டதெல்லாம் மறந்துபோனது.

'ஆனால் மக்கள் இன்று சுதந்திரத்தின் பெருமையை மறந்து விட்டார்கள். சுதந்திர தினம், குடியரசு தினம் இவற்றை சுதந்திரத்திற்காகப் போராடிய நாங்கள் தான் கொண்டாடி வருகிறோம். நேரு, பட்டேல் போன்றவர்கள், நாட்டு மக்களில் வயது வந்தோர்க்கெல்லாம் ஓட்டுரிமை வழங்க வேண்டும் என்று மகாத்மா

காந்தியைக் கேட்டுக் கொண்டார்கள். அப்படியே ஆகட்டும் என்று கூறி அண்ணல்காந்தி அவர்கள் ஓட்டுரிமை கிடைக்கச் செய்தார். ஓட்டுரிமை தந்த அவர் பிறந்த நாளையாவது கொண்டாடுங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

'எந்த நாட்டிலும் எத்தனை பேதம் இருந்தாலும் சுதந்திரத் திருநாளை அனைவரும் ஒன்றாகக் கொண்டாடுவார்கள். ஆனால் நம் தமிழ்நாட்டின் தலைவிதி எப்படியோ இருக்கிறது.

'தமிழ்நாட்டின் தலைசிறந்த மாணிக்கங்களைப் பெற்றெடுத்த மாவட்டம் கோவை மாவட்டம். அவர்களில் ஒரு சிலர் இங்கு படங்களாக வீற்றிருக்கிறார்கள். அந்த மகான்களின் சேவையை நம்மால்

'நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை மகாகவி பாரதி ஆகியோரின்பாடல்களைப் பாடிப்பாடி நீங்களும்நானும் பாமர மக்களைத் தட்டி எழுப்பிய அந்த நாட்களை நினைத்தால் உடல் புல்லரிக்கிறது. கஷ்டப்பட்ட தொண்டர்களில் இன்று எத்தனையோ பேர் இல்லை. உண்மையான தியாகம் செய்த எத்தனையோ குடும்பத்திற்கு இன்று பென்ஷனும் இல்லை.


'வாங்கிய சுதந்திரத்தைக் காப்பாற்ற வேண்டிய கடமை இப்போதைய சந்ததிக்கு உண்டு. எந்தக் கட்சியைச் சேர்ந்தவராய் இருந்தாலும் நான் ஒரு இந்தியன் என்ற உணர்வுடன்தான் இருக்க வேண்டும்.''

மல்லசமுத்திரம் தியாகி திரு. எஸ். பெரியண்ணன் தமது உரையில்,

றார்கள். நாங்கள் முடியாது என்று கூறி சிறைதண்டனையை அனுபவித்தோம். அலிபுரம் சிறையிலே தவ வாழ்க்கை வாழ்ந்தோம்' என்று குறிப்பிட்டார்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி பேசுகையில் கூறியதாவது :—

''சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு கோவை சிறையில் அடைக்கப்பட்ட தியாகிகளின் நினைவாக இன்று நினைவுத் தூண் வைத்துள்ளோம். வ.உ.சி. சிறையிலிருந்த அறையில் நினைவுக் கல்வெட்டு நிறுவியுள்ளோம். பல்லாயிரக்கணக்கான தியாகிகளில் நமக்குக் கிடைத்த ஒரு சில தியாகிகளின் படங்களை இன்று திறந்து வைத்துப் போற்றுகிறோம்.




மறக்கவும் முடியாது, மறக்கவும் கூடாது.

'பாறையாய்க் கிடந்த கோவையைத் தட்டி எழுப்பிய பெருமைக்கு உரியவர் தியாகி சி.பி. சுப்பையா அவர்கள். தியாகம் செய்ய வாருங்கள் என்று அனைவரையும் ஒன்று திரட்டியவர் தியாகி என்.ஜி. இராமசாமி அவர்கள். இப்படி ஒவ்வொரு தியாகிக்கும் ஒரு சிறப்பு உண்டு.

''நாங்கள் செய்த தியாகம் வீண் போகாமலிருக்க எல்லா நாளையும் கொண்டாட எல்லா கட்சிகளும் தலைவர்களும் முன்வர வேண்டும்''

தியாகி திரு கே. எம். மகுடபதி குறிப்பிட்டதாவது:

'அச்சமில்லை அச்சமில்லை என்று தெருக்களிலும் ஊர்களிலும் பாடிப் பாடி வந்தோம். மகாத்மாவின் கொள்கைகளை எடுத்துச் சொன்னோம்.

'வ.உ. சிதம்பரனார், பெரியார் ஈ.வெ. ராமசாமி, மூதறிஞர் ராஜாஜி இப்படி தன்னலம் கருதாது பாடுபட்ட மகான்களின் தியாகத்தால் விளைந்ததுதான் நாம் இன்று அனுவிக்கும் சுதந்திரம். வரவிருக்கும் சந்ததியினருக்கு உண்மையை உணர வைக்க இவ்விழா நடத்தப்படுகிறது.

'அலிபுரம் சிறையில் நானும் மற்றும் 6 தொண்டர்களும் சிறை வைக்கப்பட்டோம். மன்னிப்புக் கேட்டால் விட்டுவிடுகிறோம் என்

'சுதந்திரம் கிடைத்தபின் பிறந்த தலைமுறை சுதந்திரத்தின் அருமை பெருமைகளைத் தெரிந்துகொள்ள பல விழாக்களை நடத்துகிறோம். தண்டியில் மகாத்மா காந்தி அவர்கள் உப்பு எடுத்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியை மாண்புமிகு பிரதமர் அவர்கள் அண்மையில் மீண்டும் நடத்திக் காட்டினார். தமிழ்நாட்டில் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தலைமை ஏற்று நடத்திய உப்புயாத்திரையும் மீண்டும் நடத்திக் காட்டப்பட்டது. அன்று எந்த வழியாகச் சென்றார்கள், எங்கெங்கு தங்கினார்கள், என்னென்ன சாப்பிட்டார்கள் என்பதையெல்லாம் நினைவில் வைத்து அதே போன்ற யாத்திரை நடத்தப்பட்டது. உப்பு எடுத்த நிகழ்ச்சி

# கோவை விழாவில் உருக்கமான நிகழ்ச்சி

# திருப்பூர் குமரன் துணைவியாரின் இறுதி ஆசை

**கோ**வைச் சிறையில் வைக்கப்பட்டிருந்த விடுதலைப் போராட்ட வீரர்களை நினைவு கூரும் விழாவில் திருப்பூர் குமரனின் துணைவியார் திருமதி ராமாயம்மாள் உருக்கமிகு உரை ஒன்றை ஆற்றினார்.

திருமதி ராமாயம்மாள் தமது உரையின் தொடக்கத்தில் 'வந்தே மாதரம்' 'வந்தே மாதரம்', 'மகாத்மா காந்திக்கு ஜே' என்று குரலெழுப்பினார். கூடியிருந்த அனைவரும் அதே போல் குரல் எழுப்பினர். கல்மனத்தையும் கரைய வைத்துக் கண்களில் நீரை வரவழைத்த அவரது உரை வருமாறு:

''கல்யாணம் ஆகிறபோது எனக்கு 10 வயது. அவருக்கு (திருப்பூர் குமரனுக்கு) 19 வயது. இப்படி ஒரு கல்யாணம். அவர் 7 வருஷந்தான் இருந்தார். 4 வருஷம் கடையில் கணக்கு எழுதும் வேலை பார்த்து சம்பாதித்தார். 3 வருஷம் நாட்டுக்காகச் சேவை செய்யணும், மறியல் பண்ணணும், ஜெயிலுக்குப் போகணும்னு சொல்லிக்கிட்டு போராட்டத்திலெல்லாம் கலந்துகிட்டார்.

'நம்ம குடும்பத்தை மொதல்ல நெனைச்சுப்பாருங்க' அப்படின்னு நான் எவ்வளவோ சொன்னேன், நாட்டுக்காகத்தான் நாம் பாடுபடணும் அப்படின்னு சொல்லி



2 வருஷம் வீட்டுக்கே வராம இருந்தார். அம்மாவுக்கு, அப்பாவுக்குத் தேறுதல் சொல்லுங்கன்னு கணக்குப் பிள்ளையிடம் சொல்லி அனுப்புவார்.

நாட்டுக்காகப் பாடுபடணும் உயிரை விடணும்னு சொல்லிக்கிட்டு வந்த அவர் ஒருநாள், 'நீ ஊருக்குப்போய் ஒரு வாரம் இருந்துட்டு வான்னு சொன்னார். நான் போகமாட்டேன்னு சொன்னேன். இல்ல போய் இருந்துட்டு வான்னு' கட்டாயப்படுத்தி அனுப்பிச்சிட்டார்.

கொடிபிடிச்சுக்கிட்டு போராடப்போன அவர, போலீசு அடிச்சுக் கஷ்டப்படுத்துமேன்னு பயந்துபோன சென்னியப்ப முதலியார், அவர தன் வீட்டுல இராத்திரி பூட்டி அடைச்சிட்டாரு.

குளிக்கப் போகணும் அண்ணின்னு சொல்லி வெளியே வந்தார். அவரு தேசத்திற்காக வேலை செய்யணும்னு சத்தியவாக்கே வாங்கி வந்தவர். போலீசு அவரு மண்டைய உடைச்சாங்க. அப்பவும் அவரு கொடிய விடலே. சுயராஜ்யம் வாங்கியேத் தீருவேன்னு சத்தம் போட்டார்''.

—இவ்விதம் தமது துணைவரின் வீர வரலாற்றைக் கூறிய திருமதி ராமாயம்மாள் தமது விருப்பத்தையும் வெளியிட்டார்.

''திருப்பூர்ல அவருபேர்ல இருக்கிற பூங்காவில அவரு சிலைக்குப் பக்கத்திலே என்னைய அடக்கம் செய்யணும். அவரோட தொடர்ந்து நான் வாழறதுபோல இருக்கிறாப்பல எனக்கு ஒரு சிலை செஞ்சு வைக்கணும்'' திருப்பூர் குமரனின் துணைவியார் திருமதி ராமாயி அம்மாள் இவ்வாறு உரையாற்றியதைக் கேட்டு அக்கூட்டத்தில் இருந்த அனைவரும் கண்கலங்கினார்கள்.

---

ஒரு சாம்ராஜ்யத்தையே சரியச் செய்தது என்பதை இந்த சகாப்தத்தில் இருப்போருக்கு உணர்த்தினோம்.

'வேதாரண்யம் உப்பு யாத்திரை பழைய நிகழ்ச்சியை மீண்டும் நினைவுபடுத்த மட்டுமே நடத்தப்பட்டதல்ல. யாத்திரையின்போது மரக்கன்றுகளை நட்டார்கள். துப்புரவுப் பணி செய்தார்கள். சாலைகளை அமைத்தார்கள். அரிசனங்களுக்காகப் பணி செய்தார்கள்.

'வேலூர் சிறையிலும், அங்கு சிறை வைக்கப்பட்ட சுதந்திரப் போராட்ட தியாகிகளின் நினைவு போற்ற விழா எடுத்தோம்.

'இன்றைய விழாவிலே பொருட்காட்சியின் நிறைவு நாளும் இடம் பெற்றுள்ளது. செலவெல்லாம் போக 15 இலட்ச ரூபாய் சம்பாதித்தோம் என்று பெருமைபடக் கூறினார்கள். அதைவிடவும் உத்தம தியாகிகளின் நினைவைப் போற்ற ஒப்பற்ற நிகழ்ச்சியைத் தயாரித்துத் தந்துள்ளார்கள்.

'அரசு ஊழியர்கள் அவர்கள் அளவிற்கு எடுத்துச் செய்வார்கள். அதைத் தொடர்ந்து செய்ய வேண்டியது பொது மக்களாகிய நமது கடமை.''

விழாத் தலைமையேற்ற கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என். கோவிந்தன் தமது உரையில் தெரிவித்ததாவது :

'கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. சிறை வைக்கப்பட்ட அறையை வணங்கி விட்டு அதற்குப் பிறகு சிறைக்கு முன்புறம் தியாகிகளின் நினைவாக நிறுவப்பட்ட நினைவுத் தூணைத் திறந்து வைத்துவிட்டு இந்த நிகழ்ச்சியை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

''கோவை மாவட்டத்தில் தியாகிகள் உடல்நலனைப் பேண ஒருங்கிணைந்த சுகாதார அட்டை (Integrated Health Card) வழங்கத் திட்டமிடப்பட்டது. நகரப் பகுதியில் வாழும் தியாகிகளுக்கு அந்த அட்டைகளை வழங்கி விட்டோம். வருகிற ஆகஸ்டு மாதத்திற்குள் ஊரகப் பகுதிகளில் வாழும் தியாகிகளுக்கு சுகாதார அட்டைகளை வழங்க உள்ளோம்.

'கடந்த 60 நாட்களாக ஏறத்தாழ 10 இலட்சம் பேர் இந்தப் பொருட்காட்சியைப் பார்த்து மகிழ்ந்துள்ளார்கள். சென்ற ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு 2 இலட்சத்து 9 ஆயிரம் ரூபாய் கூடுதல் வருமானமாகும். சென்ற ஆண்டு 13 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் நிகர வருமானம் கிடைத்தது. இவ்வாண்டு 15 இலட்



சத்து 54 ஆயிரம் ரூபாய் கிடைத்துள்ளது.'' என்றார்

டாக்டர் ம.பொ. சிவஞானம் பேருரை நிகழ்த்தினார். அவர் தமது உரையில் தெரிவித்ததாவது:

''நாம் அந்தக் காலத்தில் வாழவில்லையே என்ற ஏக்கம் ஏற்படுவது இயற்கை. மிகப்பெரிய சோதனைகளுக்கெல்லாம் ஆட்பட்டு இவர்கள் சுதந்திரம் தேடித் தந்துவிட்டார்கள். அதைக் காப்பாற்ற வேண்டும். அவர்கள் தேடிக் கொடுத்த சுதந்திரத்தை அதே தலைமுறையினர் தவறவிடுவது நல்லதல்ல.

''இந்த சுதந்திரம் கட்டபொம்மன் காலத்திலேயே, சிப்பாய்ப்புரட்சி நடந்த காலத்திலேயே கிடைத்திருக்க வேண்டும். அப்படிக்கிடைத்திருந்தால் என்போன்றவர்கள் சிரமப்பட்டிருக்கத் தேவையில்லை. மக்கள் அன்று கைகொடுக்காததன் விளைவு 40 ஆண்டுகளுக்கு முன்புதான் நம்மால் சுதந்திரம் பெற முடிந்தது.

அமெரிக்காவிலிருந்தும் பிரான்சிலிருந்தும் வெள்ளையன் வெளியேறினான். ஆனால் பகைவனிடம் சமரசம் பேசி கைமாற்றி வழி அனுப்பி வைத்தவர்கள் நாம்தான். அந்தப் புனித சரித்திரத்தைக் கொடுத்தவர் காந்தி அவர்கள்.

சந்தேகிக்க முடியாத சத்திய வாழ்க்கை வாழ்ந்தவர் காந்தி. சுதந்திரம் கிடைத்த நேரத்தில் அவர் வங்கத்தில் இருக்கிறார். வகுப்புக் கலவரத்தால் பெண்களின் கற்பு சூறையாடப்படுகிறது. அப்போது மூதறிஞர் ராஜாஜிதான் அங்கு கவர்னர். அந்த சமயம் பத்திரிகைக்காரர்கள் காந்தியிடம் சென்று, 'டெல்லியில் மாபெரும் பவனி நடக்கிறது. நீங்கள் இங்கே இருக்கிறீர்களே என்று கேட்டார்கள்.

''அதற்கு காந்தி அவர்கள், படித்த மக்கள் வாழும் கல்கத்தாவில் ஒரு சில இந்துக்கள் முஸ்லீம் பெண்களின் கற்பையும், ஒரு சில முஸ்லீம்கள் இந்துப் பெண்களின் கற்பையும் சூறையாடிக் கொண்டுள்ளார்கள். உடம்பெல்லாம் நகை அணிந்து பெண்ணொருத்தி நள்ளிரவில், நடுவீதியில் சுதந்திரமாகச் செல்ல சமுதாயம் என்று அனுமதிக்கிறதோ, அன்றுதான் உண்மையான சுதந்திரம்' என்று கூறினார். பெண்களின் கற்புக்கு பாதுகாப்புத் தராத நாடு சுதந்திர நாடல்ல.

'95 வயது வரை இராஜாஜியும் பெரியாரும் வாழ்ந்தார்கள். எத்தனையோ விஷயத்தில் வேறுபட்டவர்கள். காந்தியின் இதயத்தில் இடம் பெற்றவர் பெரியார். நூற்க கற்க வேண்டும் என்றால் ஈரோட்டிலுள்ள பெரியார் நாகம்மையிடம் செல்லுங்கள் என்பார் காந்தி.

'ஒவ்வொருவருக்கும் ஒரு சரித்திரம் உண்டு. இவர்கள் எல்லோரையும் விட வயதால், சாதனையால் மூத்தவர் வ.உ.சி. அவருக்கு 40 ஆண்டு சிறைதண்டனை அளித்தார்கள். சொற்பொழிவு ஆற்றியதற்காக 20 ஆண்டு. அவரைப் போன்றே சொற்பொழிவு ஆற்றிய சுப்பிரமணிய சிவாவுக்கு சோறு போட்டதற்காக 20 ஆண்டு. இப்படி 40 ஆண்டு தண்டனை. ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றல்ல. ஒன்றன்பின் ஒன்றாக அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பு. அதுவும் இங்கல்ல அந்தமான் தீவில் அனுபவிக்க வேண்டும்.

திருக்குறளுக்கு உரை எழுதியவர், தன் சுயசரிதையைக் கவிதையாகவே எழுதியவர், வக்கீல் தொழிலை நடத்தியவர். அவருக்கு 40 ஆண்டுகள் தண்டனை. நீதிபதியைப் பார்த்து சிரித்துவிட்டு வெளியேறினார் என்று சர்க்கார் தஸ்தாவேஜு கூறுகிறது.

'படமாகிவிட்ட இந்தத் தியாகிகளின் ஆன்மா என் மூலம் அலறுகிறது என்று நினைத்துக்கொள்ளுங்கள். இந்தியா ஒரே நாடு என்று கூறுங்கள். சுதந்திரத்தைக் காப்பதற்கு விரதம் எடுத்துக் கொண்டு இந்தத் திடலை விட்டு வெளியேறுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்' என்று உணர்ச்சி மிகு உரையாற்றினார்.


பொருட்காட்சியில் சிறந்த அரங்குகள் அமைத்த துறைகளுக்கு செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி பரிசுகள் வழங்கினார்.

40-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு 40 பேருக்கு இலவசமனைப் பட்டாக்களை, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு என். கோவிந்தன் வழங்கினார்.


செய்தி மக்கள் தொடர்புத் துறை உதவி இயக்குநர் திரு கு. கோவிந்தராஜுலு நன்றியுரை நிகழ்த்தினார்.

விழாவின் இறுதியில் அரசுக்கலைஞர் கலைமாமணி குன்னக்குடி வைத்தியநாதன் அவர்களின் வயலின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

**வி. இராவணன்**




மருது பாண்டியர்



மருது பாண்டியர்களால் 18ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட காளையார்கோவில் ராஜகோபுரம்

“ இளைய மாவட்டமான பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் இணையற்ற முன்னேற்றம் கண்டு வருகிறது. அரசின் பல்வேறு திட்டங்கள் செவ்வனே செயலாற்றப்பட்டு வருகின்றன. நலிந்தோர்க்குக் கடனுதவி, வீட்டு வசதி, சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தில் பங்கு முதலான சமுதாய நலப்பணிகளில் தன்னிறைவு பெற்று வருகிறது. வேளாண்மை பெருக்கவும், வேலை வாய்ப்புத் தந்திடவும் விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ”

## இருபது அம்சத் திட்டத்தில் இணையிலா மாவட்டம்



## பசும்பொன் முத்துராமலிங்கம்

# இளைய மாவட்டத்தின் இணையற்ற முன்னேற்றம்

பெரும் மூலதனத்தைப் போட்டு அந்தத் தொழிற்சாலையைத் தொடங்கினார், பிறகு சரிவர நடக்காமல் கையைப் பிசைந்து கொண்டிருந்தார், அதன் உரிமையாளர். அப்போது அவருக்குக் கைகொடுத்து உதவியது அரசு. மூடிய தொழிற்சாலை திறக்கப்பட்டது!

குடும்ப வண்டியை ஓட்ட முடியாமல் திணறிக் கொண்டிருந்தார் ஒரு கூலித் தொழிலாளி. அரசும், அரசுடைமையாக்கப்பட்ட வங்கியும் தக்க சமயத்தில் உதவியதால், அவர் இப்போது சொந்தமாகச் சைக்கிள் கடை வைத்து, வறுமைப் பிடியிலிருந்து விடுபட்டார்!

அன்றாட வாழ்க்கைக்கே அல்லல் பட்ட மகளிருக்குக் கறவை மாடுகள் வாங்கக் கடனுதவி தந்ததையும், சமூகக் காடுகளில் மரக்கன்றுகள் நட்டு அதற்கு அவர்களைச் சொந்தக்காரர்களாக்கியதையும் எண்ணி மகிழ்ச்சியடையும் மகளிரைப் பார்க்கிறோம்!

### தக்க சமயத்தில் உதவி

ஆம். பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட வளர்ச்சிப் பணிகளை நேரில் கண்டு, அதனால் பயனபெற்ற மக்களைச் சந்தித்து அரசு ஆற்றியுள்ள-ஆற்றி வருகின்ற-ஆற்றப் போகின்ற பல்வேறு பணிகளைப் பார்க்கின்ற வாய்ப்ப (9.6.88) பத்திரிகை நிருபர்களுக்குக் கிடைத்தது.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ள சில பகுதிகளைச் சுற்றிப் பார்க்கிறோம்.

### சிவகங்கைத் தொழிற்பேட்டையில்!

'லேனா பேப்பர் கோன் தொழிற்சாலை' பெரும் மூலதனத்தில் 1982இல் தொடங்கப்பட்டது. இடையில் நலிவுற்று தொழிற்கூடம் இயங்காத சூழ்நிலை ஏற்பட்டது. மாவட்டத் தொழில் மையம் தக்க சமயத்தில் கைகொடுத்து உதவியதால் இது புத்துயிர் பெற்றது. இம்

**சிறப்புக் கட்டுரை**

மையத்தின் மூலம் ரூ. 30,000 உதவி கிடைத்தது. ஆலை இப்போது அமைதியாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இங்கு ஒரு நாளைக்கு 8000 'கோன்'கள் தயாரிக்கப்படுகின்றன. நூற்பாலைகளில் நூல் சுற்றுவதற்காகப் பயன்படும் இவை, தமிழ்நாடு தவிர, கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. ஒரு மாதத்தில் ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள 9 இலட்சம் 'கோன்கள்' தயாரிக்கப் படுகின்றன. தற்போது 10 பேர் இங்குப் பணியாற்றுகின்றனர். பெண்களுக்கும் இங்கே வேலை வாய்ப்பு தரப்பட்டுள்ளது.

### பட்டினி இல்லாம குடும்பம் நடக்குது!

கீழப்பூங்குடியில், வாழ வசதியற்ற ஏழை எளிய மக்களுக்குக் கறவைமாடுகள் வாங்கக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இருபது பேர் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ரூ. 3000 கடன் பெற்றுள்ளனர். இதில் ரூ. 1000 மானியமாகத் தரப்படுகிறது. இவர்கள் கடனை ஒழுங்காகக் கட்டியதால், ஒவ்வொருவரும் மூன்றாவது முறையாகவும் ரூ. 3000 கடனுதவி பெற்றிருக்கிறார்கள். இதேபோல 'தாட்கோ' மூலம் 23 பேருக்கு மாடுகள் வாங்க ரூ. 2,800 கடன் தரப்பட்டிருக்கிறது. இதில் ரூ.833 மானியமாகும்.

இவ்வாறு பயன்பெற்ற மக்களைச் சந்திக்கிறோம். வறுமைப் பிடியிலிருந்து விடுபட்டு, வாழ்க்கையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதை அவர்கள் முகத்தில் காண முடிகிறது. அறுபது வயதைக் கடந்த திருமதி வள்ளியம்மை கூறுகிறார்:

"நான் வாழ்க்கையிலே ரொம்பக் கஷ்டப்பட்டவ. களை எடுத்துக்



பனை ஓலையில் பாங்கான பொருள்கள் தயாரிக்கும் பாவையர்

கூலி வேலை செய்து சொற்ப வருமானத்திலே காலத்தெ தள்ளிக்கிட்டிருந்தேன். எங்க குடும்பத்திலே பத்துப் பேரு இருக்காங்க. வறுமை வாட்டியது. நல்ல சமயத்திலே அரசாங்கம் பணம் உதவி செய்தது. மூணு தடவை எனக்குக் கடன் கொடுத்திருக்காங்க. அதைக் கொண்டு மூணு மாடுகளை வாங்கியிருக்கேன். மாதம் ஐந்நூறு ரூபா வருமானம் கெடைக்குது. பட்டினி இல்லாம குடும்பம் நடக்குது.''

இந்த மூதாட்டி கூலி வேலை செய்தபோது, தான் பட்ட கஷ்டத்தை அப்போது நினைத்துக் கண்களைத் துடைத்துக் கொள்கிறார்

சைக்கிள் கடை வைத்திருக்குப் திரு வி. சுப்பையா (வயது 55, கூறினார்:

''நான் முப்பது வருஷமா சைக்கிள் தொழில் செய்து வர்றேன். சைக்கிள்களை ரிப்பேர் பண்ணி ஒரு நாளைக்குப் பத்து ரூபா சம்பாதிச்சேன். அஞ்சு பேர் உள்ள எங்க குடும்பத்துக்கு அது எந்த மூலை? சொந்தமா சைக்கிள் கடை வைக்கணும்னு ரொம்ப நாளா ஆசை. பணத்துக்கு எங்கே போவது? வெளியே கடனை வாங்கினா வட்டி கட்டறதுக்கே உழைக்க வேண்டியிருக்கும். அந்தச் சமயத்திலேதான், அதிகாரிகளை அணுகி மனுப் போட்டேன்'' என்று கூறும் இவர், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம், ரூ 5000 கடன் பெற்றுள்ளார். அதைக் கொண்டு ஏழு சைக்கிள்களை வாங்கியுள்ளார். இப்போது சொந்தமாகக் கடை வைத்திருக்கிறார்.

**திரு ஏ. மாதவன்**





**திரு வி. சுப்பையா**

ஒரு நாளைக்குச் செலவுகளெல்லாம் போக இவருக்கு முப்பது ரூபாய் வருமானம் கிடைக்கிறது.

''என் பொண்ணையும், பையனையும் நல்லா படிக்க வைக்கப் போகிறேன்'' என்று கூறும் இவர், தன் கனவு நனவாகிவிட்டதை எண்ணி மகிழ்ச்சியடைகிறார்.

இதே ஊரில், பெட்டிக்கடை வைத்திருக்கும் திரு ஏ.மாதவனைச் சந்திக்கிறோம். 65 வயதான இவர், முதலில் அரிசிக்கடை வைத்திருந்தாராம். நஷ்டம் ஏற்படவே, நட்டாற்றில் கைவிட்டது போல ஆகிவிட்டது இவரது நிலைமை. வயிற்றைக் கழுவ வேண்டுமே! வழி தெரியாமல் தவித்தார் இந்த முதியவர். அப்போது புத்துயிர் பெற்றதுபோல இருந்தது இவர் பெற்ற கடன். ஆம். இவருக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ஐயாயிரம் ரூபாய் கடன் கிடைத்தது. இந்தத் தொகையில் பெட்டிக்கடை ஒன்றை நடத்தி வருகிறார். ஒரு நாளைக்குச் செலவெல்லாம் போக ரூ. 20 கிடைக்கிறது. ''அரிசிக்கடை நஷ்டத்தை ஈடுசெய்வதுபோல, இந்த உதவி கெடைச்சிருக்கு'' என்கிறார் இந்த முதியவர்.

**உணவுப் பொருள்கள் தவறாமல் கிடைக்கின்றன.**

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில், பொது விநியோக முறை எப்படி நடக்கிறது?

இந்த மாவட்டத்தில் மொத்தம் 6 வட்டங்கள் உள்ளன. கிராமப்புறங்களில் 468 நியாய விலைக் கடைகளும், நகர்ப்புறங்களில 62 நியாய விலைக் கடைகளும் ஆக மொத்தம் 530 நியாயவிலைக் கடைகள் உள்ளன. ஏற்கெனவே 2,73,000 குடும்ப அட்டைகள் புழக்கத்தில் இருந்தன. இவற்றைப் புதுப்பித்து 2,17,184 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு விட்டன. இதுதவிர, புதிய குடும்ப அட்டைகள் கோரிய விண்ணப்பங்களின் பேரில் 48,332 விண்ணப்பங்களுக்குப் புதிய அட்டைகள் வழங்கும் பணி முடியும் தறுவாயில் உள்ளன. ஆக 2,65,516 குடும்ப அட்டைகளுக்கு உணவுப் பொருள் வழங்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

வட்ட வழங்கல் அலுவலர்களால் ஒவ்வொரு கடைக்கும் உணவுப் பொருள்கள் வழங்கும் பொறுப்பை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், இராம்கோ நிறுவனம், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவை பொறுப்பேற்றுள்ளன.

அத்தியாவசியப் பொருள்களை அரிசி, பாமாயில் போன்றவை தரம் பார்க்கப்பட்டு அனுப்ப வேண்டிய பொறுப்பு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்தது என்றால், இந்தப் பொருள்களை மாதிரிக்குச் சில மூட்டைகளைத் தணிக்கை செய்து கடைகளுக்கு லாரிகளுடன் அனுப்பவேண்டிய பொறுப்பு இராம்கோ நிறுவனத்தைச் சாரும்.

உணவுப் பொருள்களை வண்டிகளில் அனுப்பும்போது, எந்தவித முன்னறிவிப்பும் இன்றி, வழிமறித்து இடையில் சரிபார்க்க வட்டாட்சியர்களுக்கும், வட்ட வழங்கல் அலுவலர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்

கப்பட்டுள்ளன. இதனால் உணவுப் பொருள் சீராக வழங்க வழிகோலப் படுகிறது.

உணவுப் பொருள்கள் விநியோகிப்பதில் முறைகேடுகள் நடக்காத வண்ணம் கண்காணிக்கிறது, விழிப்புப் பணிக்குழு. புகார்ப் புத்தகம், புகார்ப்பெட்டி ஒவ்வொரு கடையிலும் வைக்கப்பட்டுள்ளன. புகார்கள் ஏதேனும் வந்தால், உடனே 'பறக்கும் படை அலுவலர்கள்' அங்கே பறந்து செல்கின்றனர்!

இளமையும், துடிப்பும் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர்.கோபாலன் ஐ.ஏ.எஸ். அவர்கள், அரசின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் வேகம் காட்டி வருகிறார். நுகர்பொருள் விநியோகத்தைப் பொறுத்தவரையில், இம் மாவட்டத்தில் உள்ள அனைத்து 530 கடைகளையும், 53 மண்டலங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றிற்கும் வருவாய்த்துறை, வளர்ச்சித்துறை,



**திருமதி வள்ளியம்மை**

கூட்டுறவுத்துறை ஆகிய மூன்று துறையினரைச் சேர்ந்த 53 பகுதி அலுவலர்களை நியமித்துள்ளார். குறிப்பிட்ட கடைகளுக்கு அவரவர்கள் தான் பொறுப்பு என்கிற முறையில் நியமனம் செய்து, நியாய விலைக் கடைகளைத் தீவிர, இடைவிடாத தணிக்கைக்கு உத்தரவிட்டு நடைமுறைப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**'கெடுபிடி இல்லை'**

ஒக்கூர் என்னும் கிராமத்திற்குச் செல்கிறோம். அங்கே உள்ள, ஒக்கூர் தொடக்கக் கூட்டுறவு வங்கி மூலம் நடைபெறும் ரேஷன் கடையைப் பார்வையிடுகிறோம். அங்கு உணவுப் பொருள்கள் வாங்க வந்த திருமதி செகப்பி என்பவரைச் சந்திக்கிறோம்.

''உணவுப் பொருள்கள் தடையில்லாமல் கிடைக்கிறதா?'' என்று கேட்டதற்கு அவர், ''எல்லாம் சரியா கிடைக்குது. எட்டு கிலோ அரிசி தர்ராங்க. மண்ணெண்ணெய், பாமாயில், கோதுமை எல்லாம் தர்ராங்க. முன்னெல்லாம் கெடுபிடி செய்வாங்க... ஆனா இப்ப அப்படி இல்லே'' என்று கூறும் இவர், ''உணவுப்பொருள் எடையெல்லாம் சரியா இருக்கு'' என்று இன்னொரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது கூறினார். இதேபோல திருமதி மீனாட்சி என்ற குடும்பத் தலைவியும், தாம் புதிய குடும்ப அட்டை வாங்கியுள்ளதாகவும், உணவுப் பொருள்கள் தடை இல்லாமல் கிடைக்கிறது என்றும் கூறினார்.

''பிறகு இதே ஊரில் உள்ள அன்னை இந்திராநகர் ஆதிதிராவிடர்க்கான குழும வீடுகளைப் பார்வையிடுகிறோம். ரூ. 2 லட்சத்து 4 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட இந்த வீடுகள் சிமெண்ட் பூச்சாலானவை, இந்த வீடுகளில் கழிப்பறை வசதியும் செய்யப்பட்டுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் இந்த வீடுகள் கட்டப்பட்டபோது, தற்போது இந்த வீட்டில் குடி இருப்பவர்களே வீட்டுக்கு இருவராக இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கூலியாகப் பணத்தோடு, அரிசியும், கோதுமையும் வழங்கப்பட்டன. சாலை போடுதல், சமூகக்கூடம் கட்டுதல், மின்வசதி போன்ற வேலைகள் தற்போது முடியுந் தறுவாயில் உள்ளன.

**ஒளிமயமான எதிர்காலம்**

கிராமப் புறங்களில் எரிபொருள்களுக்கு, விறகு கிடைக்கவும், சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தவும், தட்பவெப்ப நிலையைச்சீராக்கவும், கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு அளிக்கவும் ஏற்பட்ட சீரிய திட்டம் தான், சமூக நலக் காடுகள் திட்டம்.

இம்மாவட்டத்தில், இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 30 எக்டேர்களிலும், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் 20 எக்டேர்களிலும் ஒவ்வொரு வட்டாரத்திலும் செயலாக்கப்படுகிறது.

வறுமைக்கோட்டின் கீழுள்ள விவசாயிகளின் நிலங்களில் இத்திட்டத்திற்கான கன்றுகள் நாற்றங்கால்கள் மூலம் தயார் செய்யப்பட்டு, அரசுக்குச் சொந்தமான நிலங்களில் சம்பந்தப்பட்ட ஊராட்சித் தலைவர்களால் நடப்பட்டு வருகின்றன.

மரக்கன்றுகள் நட்டு முடிந்தவுடன், அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு அந்தந்தப் பகுதியிலுள்ள தகுதி வாய்ந்த மக்களிடமும், நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பத்திடமும் இலவச மரப்பட்டா வழங்கி ஒப்படைக்கப்படுகிறது. மூன்றாண்டுகள் வரை கன்றுகள் வளர்ந்து பயனளிக்கும் தறுவாய் வரை அவர்களுக்குப் பராமரிப்புக் கூலியும் தரப்படுகிறது. அதுமட்டுமல்ல, பலன்தரும் பொழுது அதனை அனுபவிக்கும் உரிமையும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

இதுவரை, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம், 340 எக்டேரில் 5.52 இலட்சம் கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதன் மூலம் 1477 மக்கள் பயனடைந்துள்ளார்கள். இதேபோல, ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலம் 423 எக்டேரில் 7.11 இலட்சம் கன்றுகள் நடப்பட்டுள்ளன. இதன் மூலம் 1786 மக்கள் பயனடைந்துள்ளனர்.



**திருமதி செகப்பி**

1988-89இல், புதிதாகக் கன்றுகள் நடப்படவிருக்கும் பரப்பு 577 எக்டேர், பராமரிப்புக்காகத் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் பெண்களின் எண்ணிக்கை 1442. இது தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்துக்கானது,

இதேபோல இவ்வாண்டுகளில், ஊரக நிலமற்றோர்வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ், புதிதாகக் கன்றுகள் நடப்படவிருக்கும் பரப்பு 319 எக்டேர். பராமரிப்புக்காகத் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் பயனடைவோர் பெண்களின் எண்ணிக்கை 797.

சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீழக் கண்டனி என்னும் கிராமத்தில், சமூகக் காடுகள் திட்

டத்தின் கீழ், 10 எக்டேர் பரப்பில், 16,000 கருவேலங் கன்றுகள் நடப்பட்டுள்ளதை நேரில் பார்க்கிறோம். இத்திட்டத்தின் மூலம் 25 பேர் பயன்பெறுகிறார்கள். இவர்களில் 50 சதவீதத்தினர் ஆதிதிராவிடர்கள். இந்தப் பெண்கள் அங்கே கன்றுகளைப் பராமரிக்கும் பணிகளில் ஈடுபட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

எதிர்காலத்தில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் இந்த மரங்கள் சொந்தமாகிப் பலனைக் கொடுக்கும் உறுதியும் அவர்களுக்கு இருப்பதையும் அறிகிறோம். ஒருவர் 640 கன்றுகளைப் பராமரிக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அதில் 40 கன்றுகள் பட்டுப் போனால் கூட 600 கன்றுகள் மிச்சமாகின்றன. ஒரு கன்று ரூ. 100க்கு விலைபோகும் என்றால் அவருக்கு 60,000 ரூபாய் கிடைக்கிறது. அந்த ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி அவர்கள் உற்சாகத்துடன் வேலைசெய்து கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து நாம் செல்லுவது சுந்தர நடப்பு என்னும் கிராமத்திற்கு, இங்கு சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 20 பெண்கள் பனை ஓலைப் பொருள்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். கருவிகள், மூலப் பொருள்கள் வாங்குவதற்காக இவர்களுக்கு 5000 ரூபாய் கடனுதவி வழங்கப்படுகிறது. இதில் 1000 ரூபாய் மானியமாகும். பனை ஓலையில் தடுக்குகள், தொப்பிகள் முதலானவை நேர்த்தியாகச் செய்யப் படுகின்றன.


### குடிசையிலும் 'காஸ்' அடுப்பு!

'காஸ்' அடுப்பு பட்டணத்தில் மட்டுந்தானா? நவநாகரிகமாக வாழும் மேட்டுக்குடி மக்களிடந்தான் இது இருக்குமா என்ன? பட்டிக்காட்டில், ஓலைக் குடிசை வீட்டுக்கும் இன்று காஸ் அடுப்பு வந்துவிட்டது!

பச்சேரி கிராமத்தில், திருமதி ராக்கம்மா (வயது 45) வீட்டுக்கு அதாவது குடிசைக்குப் போகிறோம். அங்கே காஸ் அடுப்பில் அவர் சமையல் செய்வதைப் பார்க்கிறோம்.

சாண எரிவாயு மூலம் இவர் சமையலை எளிதாக முடித்து விடுகிறார். வீட்டுக்குப் பின்புறம் காஸ் எரிவாயுக்கலன் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்காக இவருக்கு ரூ. 7000 கடனுதவி கிடைத்திருக்கிறது

''எங்க குடும்பத்துல ஏழு பேர் இருக்கோமுங்க. சாண எரிவாயு மூலமா காஸ் அடுப்பு இருக்கிறதாலே சுலபமா சமையல் செய்ய முடியுது. இதனாலே புகையில்லே. சாணம் சுலபமா கிடைக்கிறதாலே, விறகு வாங்கற செலவும் மிச்சம். சர்க்காரு கடன் தந்ததாலே இந்த சௌகரியம் எங்களுக்குக் கெடைச்சிருக்கு....'' என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் இவர்.



பேப்பர் கோன் தொழிற்சாலை

மானாமதுரை வட்டாரத்தைச் சேர்ந்த இந்தப் பச்சேரி ஆதிதிராவிடர் குடியிருப்பில் 105 குடும்பத்தினர் வசிக்கின்றனர். இங்கு 1986-87இல், 29 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டன. இதனால் 29குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. இதற்கு வேம்பத்தூர் பாரத்ஸ்டேட் வங்கி மூலம் கடனாக ரூ. 1.96,550 வழங்கப்பட்டுள்ளது. அதில் அரசு மானியமாக ரூ. 82,690 வழங்கப்பட்டுள்ளது. இப்போது அதாவது 1987-88இல், இந்தக் குடியிருப்பில்,மேற்கொண்டு 30 பேர்களுக்குச் சாண எரிவாயுக் கலன் அமைக்க, இராமநாதபுரம் மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் ரூ. 2,01,000 கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதில் அரசு மானியமாக ரூ. 85,800 வழங்கப்பட்டுள்ளது. இந்தக் குடியிருப்பில் மட்டும் மொத்தம் 59 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. குடிசைக்கொரு மின் விளக்கு என்பதுபோல, குடிசைக்கொரு சாணஎரிவாயுக் கலன் என்று சொல்லும் அளவுக்கு இக்கிராம மக்கள் வசதி பெற்றுள்ளனர்.

சமூக நலக்காடுகள் — மரக் கன்றுகள் பராமரிப்பில் மகளிர்





சாண எரிவாயுக் கலன் அமைத்திருக்கும் திருமதி ராக்கம்மா

### வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்!

இக்கிராம மக்கள் தங்கள் வீடுகளில், தென்னை, முருங்கை, பப்பாளி, சுபா புல் ஆகிய கன்றுகளை வளர்க்கிறார்கள். கன்றுகள் வளர்க்கும் இத்திட்டத்திற்காக 1986-87ஆம் ஆண்டில் 70 வீடுகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு வீட்டில் 60 கன்றுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்தக் கன்றுகளைப் பராமரித்து வருவதற்காக அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு 4 மனிதச் சக்தி அதாவது ரூ. 40 வீதம் 6 மாதங்களுக்குப் பராமரிப்புத் தொகை பட்டுவாடா (அரிசி, கோதுமை, ரொக்கம்) செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு, வழங்கப்பட்ட ரொக்கப் பணத்தில், ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வாங்கி அதன்மூலம கிராமத்தில் அன்றாட நாட்டு நடப்புகளைத் தெரிந்து கொள்கிறார்கள்.

பச்சேரி கிராமத்தில் மழை நீரைத் தேக்கி வைப்பதற்கு ஊருணி சீர்படுத்தப்பட்டுள்ளது. இந்த வேலையின் மதிப்பு ரூ.18,000. இதுவரை ரூ.14,980க்கு வேலைசெய்து முடிக்கப்பட்டுள்ளது. வேலைசெய்த மக்களுக்கு வழங்கப்பட்ட அரிசி 4002 கிலோவாகும். பணமாகக் கொடுக்கப்பட்டது. ரூ.7,576 ஆகும். மனிதச் சக்தி நாட்கள் 1334 ஆகும்.

### ஆதிதிராவிடர்க்கான அழகிய வீடுகள்

மரத்தடியில், சாலையோரங்களில் வாழ்க்கை நடத்திய ஏழை எளிய மக்களுக்குக் குடியிருக்க நல்ல வீடுகள் கட்டிக் கொடுப்பது அரசின் கடமை. அந்த வகையில் இன்று தமிழ்நாட்டில் கிராமங்கள் தோறும் ஏழை எளியவர்க்கான தரமான வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. குறிப்பாக ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பகுதிகளில் குழும வீடுகள் (Group Houses) கட்டித் தரப்படுகின்றன.

பதினெட்டாம்கோட்டை என்னும் ஒரு கிராமம். இங்கே 22 குழும வீடுகள் உள்ளன. எல்லாம் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் மூலம் கட்டப்பட்டவை. இதன் மதிப்பு ரூ. 1,73,000. இந்தப் பகுதியில் சாலை போடுதல், சாலையில் பாலம் கட்டுதல், சமுதாயக்கூடம் கட்டுதல் ஆகிய வேலைகள் தற்போது துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இதேபோல துத்திக்குளம் கிராமத்தில் 'அன்னை இந்திரா நினைவுக் குடியிருப்பு' என்னும் பெயரில் ஆதிதிராவிடர்க்கான 21 குழும வீடுகள் உள்ளன. இவற்றின் மொத்த மதிப்பீடு ரூ. 1,89,000. இப்பகுதியில் சாலைகள் போடுதல், கழிவுநீர் வடிகால் கட்டுதல், கைப்பம்பு அமைத்தல் முதலான சுகாதாரப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் கீழ் அரிசி, கோதுமை, ரொக்கம் ஆகியவை வேலையில் ஈடுபட்ட மக்களுக்கு வழங்கப்பட்டன.


இதே கிராமத்தில், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று சிறப்பாக இயங்கி வருகிறது. 58 பேர் அங்கத்தினர்களாக உள்ளவர். இவர்களில் ஆண்கள் 16 பேர். பெண்கள் 42 பேர். இவர்களில் ஆதிதிராவிடர் 15 பேர். இடைக்காட்டூர் கிளை, பாண்டியன் கிராம வங்கி இவர்களுக்குக் கடனுதவி வழங்கியுள்ளது.


### தொழில் வளம்

ஒரு நாட்டின் முதுகெலும்பாய் இருப்பது தொழில் வளர்ச்சியாகும். தொழிலே வாழ்க்கை முன்னேற்றத்துக்கு அடிப்படையாக அமைகிறது. அதனால்தான் அமரகவி பாரதியாரும், 'அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரம் தொழில் செய்திடுவீரே!'' என்றார். அந்த வகையில் தமிழ்நாட்டில் பல்வேறு தொழில்கள் பாங்காய் வளர்ந்து வருகின்றன.

முன்னாள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இணைந்து இருந்த பசும்பொன் முத்துராமலிங்கம்

ஆதிதிராவிட மக்களுக்கான குழும வீடுகள்





**பால் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கறவை மாடுகள் பெற்ற மகளிர்**


மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு 15.3.'85முதல் தனி மாவட்டமாகச் செயல்பட்டு வருகிறது. அதன் காரணமாக 'மாவட்டத் தொழில் மையம்' 7.5.86 முதல் தனியாக இயங்கி வருகின்றது.

சிறு நகரங்களிலும், கிராமங்களிலும் சிறு தொழில்களையும், கிராமத் தொழில்களையும் மேம்பாடு அடையச் செய்வது இந்த மையத்தின் நோக்கமாகும். அதுமட்டுமல்ல, இருக்கும் வசதிகளைக் கொண்டு, கிடைக்கும் மூலப் பொருளை உபயோகித்து, சாதாரண மனிதனுக்கும் வேலை வாய்ப்புத் தருவதும் இதன் குறிக்கோளாகும்.


மானாமதுரையில் உள்ள சிப்காட் தொழிற்பேட்டை 382 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இதில் 128 ஏக்கர் பரப்பளவு உள்ள இடம் தொழில்கள் ஆரம்பிக்க முனையும் 38 பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது

சிப்காட் தொழிற்பேட்டையில், தொழிற்சாலைகள் அமைக்க இடம் வழங்கப்பட்டவர்கள் அனைவரையும் அழைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் நான்கு தடவை கூட்டம் நடத்தியுள்ளார். இதனால் 17 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் துவக்கியும், 8 பேர்கள் தொழில்கள் துவக்குவதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளும் எடுத்துள்ளனர். மேலும் 13 பேர் தொழில் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.


1987 டிசம்பர் 1988 ஜனவரிக்கு இடைப்பட்ட காலத்தில் தொழில் செய்ய முனைவோரின் முன்னேற்றக் கூட்டம் இம்மாவட்டத்தில் நடைபெற்றது. 7.2.88 அன்று நடந்த தொழில் துவங்குவோரின் விழாவில் மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப.சிதம்பரம் அவர்கள் கலந்துகொண்டு சான்றிதழ்கள் வழங்கினார். 8 பேர்களுக்கு ரூ. 30 இலட்சம் மதிப்புள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கியினரால்



**மண்வெட்டி தயாரிக்க உதவும் இயந்திரம்**



தவிட்டெண்ணெய் தொழிற்கூடம்



அனுமதிக்கப்பட்ட நிதி உதவிக் கடிதங்களையும் வழங்கினார்.

கூட்டத்தில் பங்கு கொண்டோரில் 8 பேர் அவர்களுடைய தொழில் திட்டங்களை முடிவு செய்து, வங்கிகளும் அவர்களுக்கு நிதியுதவி அளிக்கச் சம்மதித்துள்ளன. அவர்களில் ஒருவருக்கு மிதி வண்டியின் சக்கரத்தின் கம்பிகளை உற்பத்தி செய்வதற்கு ரூ. 9.35 இலட்சம் நிதி உதவி அளிக்க இந்தியன் வங்கி முன்வந்துள்ளது. காகித உற்பத்தித் தொழிற்சாலை, தோல், அட்டைகள், எஃகுத் திருகாணிகள் போன்ற தொழில்கள் ஆரம்பிக்க 63 பேர்களுக்குத் தவணை முறைத் திட்டத்தின் கீழ், சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் இடம் அளிக்கப்பட்டது. தமிழகத் தொழில் முதலீட்டுக் கழகம், தலைமுடித் தைலம் தயாரிப்பதற்காக ஒருவருக்கு ரூ. 38,000 நிதியுதவி அளித்துள்ளது.

மாவட்டத் தொழில் மையத்தினாலும், வங்கிகளாலும் நலிவடைந்த 21 தொழிற்சாலைகள் கண்டுபிடிக்கப்பட்டு, இவை மறுமலர்ச்சி பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறுதொழில் நிறுவனங்களுக்கு உண்டாகும் இடர்ப்பாடுகளைக் களைய ஒருங்கிணைந்த கூட்டம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் நடத்தப்படுகிறது.

**உமறுப் புலவர் பேரனின் உபகரணத் தொழிற்சாலை!**

சிப்காட்டில் ஒரு தொழிற்கூடம்! 'உமர் விலாஸ் இண்டஸ்டிரிஸ் கம்பெனி' என்னும் பெயரில், வேளாண்மைக்கான உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்கூடம் இது. மண்வெட்டி, கடப்பாரை, சுத்தியல் ஆகியவை இங்கு தயாராகின்றன. இந்தக் கருவிகள் தமிழ்நாடு தவிர ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இதன் உரிமையாளர் திரு காஜாமொய்தீன், சீறாப் புராணம் பாடிய உமறுப்புலவரின் பேரன் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் கூறுகிறார்:

''இந்தத் தொழிற்கூடம் தொடங்க அரசு எனக்கு 7 லட்சம் ரூபாய் கடன் தந்துள்ளது. தற்போது 8 பேர் வேலை செய்கிறார்கள். முதலில் நான் விவசாயத் தொழிலில்தான் ஈடுபட்டிருந்தேன். பிறகு விவசாயக் கருவிகளைத் தயாரித்தால் என்ன என்று ஒரு ஆர்வம் வந்தது. அரசும் உதவி செய்தது. தைரியமாக ஆரம்பித்தேன். தொழில் நன்றாக நடந்து கொண்டிருக்கிறது.''

மணலூரில் ஒரு தொழிற்சாலை! வைக்கோல், கந்தைத்துணி, கழிவுக் காகிதங்கள், தேங்காய் நார் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்படும் காகிதத் தொழிற்சாலை அது. இந்தக் காகிதம் 'பேக்கிங்' செய்யப் பயன்படுகிறது. கடந்த ஏழு ஆண்டுகளாக உற்பத்தி செய்து வரும் இது, இடையில் பல பிரச்சினைகளால் மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பிறகு அரசு தந்த உதவியினால் மூடிய ஆலை திறக்கப்பட்டது. ஒரு ஷிப்டுக்கு 1 டன் காகிதம் இங்கே உற்பத்தியாகிறது. 28 பேர் வேலை செய்கிறார்கள்.

திருப்புவனத்திலுள்ள 'ஸ்ரீபாண்டியன் எக்ஸ்ட்ரோ கெமிக்கல்ஸ் பிரைவேட் லிமிடெட்' என்னும் தொழிற்கூடம் அரிசித் தவிட்டிலிருந்து எண்ணெய் தயாரிக்கிறது. ரூ. 42 இலட்சம் முதலீட்டில் துவக்கப்பட்ட இத்தொழிற்சாலையில் 25 பேர் நிரந்தரமாகவும், 100 பேர் தினக் கூலியாகவும், வேலை செய்கிறார்கள். இத்தொழிற்கூடத்துக்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், கனரா வங்கி நிதியுதவி வழங்கியுள்ளன. மத்திய அரசு ரூ. 5 இலட்சம் மானியம் தந்துள்ளது. இங்கு தயாரிக்கப்படும் தவிட்டெண்ணெய் பம்பாய்க்கு அனுப்பப்பட்டு, அங்கு சுத்திகரிக்கப்படுகிறது. இது சோப்பு செய்வதற்கும், வனஸ்பதிக்கும் பயன்படுகிறது.

**வளர்ச்சித் திட்டங்களால் வாழ்க்கைத் தரம் உயர்கிறது!**

மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவும்-சமுதாயத்தில் மற்றவர்களைப் போல ஏழை எளியவர்களும் உயரவும் வகுக்கப்பட்டவை


தான் அரசின் பல்வேறு நலத் திட்டங்கள்.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் தற்போது அரசு செயல்படுத்தி வருகின்ற திட்டங்களைச் செய்தியாளர்கள் நேரில் பார்த்து மனநிறைவு கொண்டார்கள்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினை 1987-88-ஆம் ஆண்டில் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் நடைமுறைப் படுத்துவதற்காக மத்திய அரசு 53.517 இலட்சம் ரூபாயும், மாநில அரசு 50.971 இலட்சம் ரூபாயும் நிதி வழங்கின.

இவை தவிர, இதற்கு முந்திய ஆண்டுகளில் இம்மாவட்டத்தில் செலவு செய்யப்படாமல் இருந்த தொகையான ரூ. 55.815 இலட்சத்தையும் சேர்த்து மொத்தம் 160.303 இலட்சம் ரூபாய் நிதி இருப்பு கிட்டியது.

இந்த நிதியினைப் பயன்படுத்தி, 7105 பேர்களுக்குக் கடனுதவி வழங்க வேண்டும் என்று அரசு குறியீடு நிர்ணயம் செய்திருந்தது. ஆனால் 7907 பேர்களுக்குக் கடனுதவி வழங்கப்பட்டு குறியீட்டை விடக் கூடுதலாக 802 பேர்களுக்குக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டத்தின்கீழ்பயனடைந்த 7907 பேர்களில் 3977 பேர் ஆதி திராவிடமக்கள் என்பதையும், 2772 பேர் பெண்கள் என்பதையும் இங்கே நாம் குறிப்பிட வேண்டும்.



காகிதத் தொழிற்சாலை

கிராமப்புற இளைஞர்களுக்குச் சுயவேலைவாய்ப்பு அளிப்பதற்காக வழங்கப்படும் பயிற்சித் திட்டத்தின் கீழ் 1987-88ஆம் ஆண்டில் அரசு நிறுவனங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்கள் மூலம் 315 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்காக ரூ. 5.92 இலட்சம் செலவாகியுள்ளது.

**சொந்தக்காலில் நிற்கலாம்**

1988-89ஆம் ஆண்டில, கிராமப்புற இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி அளிப்பதற்குக் குறியீடு 388 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கு அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. சுய வேலை வாய்ப்புக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டிய இளைஞர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். அதற்கான பயிற்சியும் சில மையங்களில் தற்போது நடைபெற்று வருகிறது.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காக மத்திய-மாநில அரசுகள் இணைந்து மானியம் வழங்கிச் செயல்படுத்தும் திட்டம் தான், தீவிர வேளாண்மை உற்பத்திப் பெருக்குத் திட்டமாகும்.

**இத்திட்டத்தினால் என்ன நன்மை?**

கிராமப் பகுதிகளில் புதிய பாசனக் கிணறுகள் வெட்டப்படுகின்றன.

பழைய பாசனக் கிணறுகள் ஆழப்படுத்தப்படுகின்றன.

மின்சாரப் பம்புசெட்டுகள், ஆயில் எஞ்சின் பம்புசெட்டுகள் வாங்கப்படுகின்றன. பம்பு அறைகள் கட்டப்படுகின்றன.



கிராம மக்களைப் பத்திரிகை நிருபர்கள் சந்திக்கின்றனர்

இதற்காக அரசு வழங்கிய மானியம் ரூ. ரூ.31.74 இலட்சமும், நில மேம்பாட்டுப் பணிக்கு ரூ.4.35 இலட்சமும் ஆகும். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலம் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சிறு பாசனத்தின் மூலம் பய னடைந்தோர் 788 பேர். இதில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினர் 83 பேர்.

**ஜீவன் உள்ள 'ஜீவன்தாரா'**

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 1987-88-ஆம் ஆண்டிற்கு ரூ. 73.69 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்மூலம் 528 வேலைகள் எடுத் துக்கொள்ளப்பட்டன. ஆதிதிராவிட மக்களுக்கென 367 குழும வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 81 குடிதண்



**திரு இ.எம். சுதர்சன நாச்சியப்பன்**

ணீர் ஊருணிகள் ஆழப்படுத்தப்பட் டுள்ளன. கிராமப் புறங்களில் சுகா தாரக் கழிவறைகள் கட்டுதல், சாலைகள் சீரமைப்பு, சமுதாயக் கூடங்கள் கட்டுதல் போன்ற வேலைகள் செய்து முடிக்கப்பட் டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 1987-88இல் மொத்தம் 99.96 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. குறி யீடான 3.38 இலட்சம் மனிதச் சக்தி நாட்களுக்கெதிராக 6.44 இலட்சம் மனிதச் சக்தி நாட்கள் ஈட்டப்பட்டுள்ளன.

1988-89 நிதியாண்டில் ரூ. 160.6 இலட்சத்திற்கான ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 42.3 இலட்சத்திற்கு ஆதி திராவிடர்களுக்கு 382 இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கவும், ரூ. 6.4 இலட்சத்தில் 9 பள்ளிக் கட்ட டங்கள் கட்டவும், ரூ. 4.4 இலட்



**திரு ஆர். கோபாலன் இ.ஆ.ப.**

சத்தில் 15 சாலைகள் மற்றும் சிறு பாலங்கள் கட்டவும் திட்டமிடப் பட்டுள்ளது.

மேலும், காடுகள் வளர்ப்புக்காக ரூ. 31.6 இலட்சம் ஒதுக்கப்பட்டுள் ளது. நடப்பு ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கும் 'ஜீவன்தாரா' எனும் திட்டத்தின் கீழ், ஆதிதிரா விடர்களுக்கு இலவசமாக 130 பாச னக்கிணறுகள் கட்டிக் கொடுப்பதற் காக ரூ. 67.3 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம்—இதன் மூலம் 1987-88-இல் 769 வேலை கள் எடுத்துக்கொள்ளப்பட்டு 681 வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

இதற்கு ரூ. 164.90 இலட்சம் அரசு மானியம் வழங்கியுள்ளது. ஆதிதிராவிடர்களுக்காகவே ரூ. 71.81 இலட்சம் செலவில் 632 தொகுப்பு வீடுகள் இம்மாவட்டத்



**திரு எஸ். சங்கரநாராயணன்**

தில் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 1988-89ஆம் ஆண்டில், ஆதிதிரா விடர்களுக்கென ரூ. 54.86 இலட் சம் மதிப்பில் 475 தொகுப்பு வீடு களும், ரூ. 46.80 இலட்சம் மதிப் பீட்டில் 90 கிணறுகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கிராமப்புறச் சுகாதார மேம்பாட்டுக்காக 246 சுகாதாரக் கழிப்பிடங்கள், கிராமப் புறக் கல்வி கூடங்களிலும், பொது இடங்களிலும் கட்டப்படும். சமூகக் காடுகளுக்காக ரூ. 16.23 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**வறட்சியிலும் வளமை!**

வறுமையில் செம்மை காண்பது போல, வறட்சியிலும் வளமை காணும் வகையில் அரசு வறட்சி நிவாரணப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றி வருகிறது. இதற்கு வகை செய்கிறது, வறட்சிக்கு



**திரு அ. முருகாண்டி**

ஹுலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் இம்மாவட் டத்தில் 1985-86 மற்றும் 1986-87 ஆகிய ஆண்டுகளுக்கு ரூ. 162 இலட் சங்கள் ஒதுக்கப்பட்டு, பல்வேறு துறைகளின்கீழ் செலவிடப்பட்டுள் ளன. 1987-88ஆம் ஆண்டுக்கு ரூ. 90 இலட்சங்களுக்குத் திட்டங் கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. இத்திட்டங் களுக்கான நிதியை மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து தலா 50 சதவீதம் அளிக்கின்றன.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில், இத்திட்டம் இளை யாங்குடி, காளையார்கோவில், தேவகோட்டை, கண்ணங்குடி, கல் லல், சிங்கம்புணரி ஆகிய ஆறு வட் டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## இருபது அம்சத் திட்டத்தில் இணையிலா மாவட்டம்

வளர்ச்சிப் பணிகளை நேரில் கண்டறிந்துவிட்டு, **மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். கோபாலன்** அவர்களைச் சந்திக்கிறோம். அப்போது அவர் **ஒரு** மகிழ்ச்சிகரமான செய்தியை வெளியிட்டார்:

''பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், மாநிலத்திலேயே மிகவும் பின்தங்கிய மாவட்டம், இந்த மாவட்டத்தில் 1987-88-ஆம் ஆண்டு 100 சதவீதத்திற்கு மேல் செயல்படுத்தப்பட்டது. 20 அம்சத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் சென்னை, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், மதுரை ஆகிய 3 மாவட்டங்கள் முதல் இடம் பெற்றன. மற்ற மாவட்டங்களை விட, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில்தான், 20 அம்சத் திட்டத்தில் கூடுதலாக வறுமை ஒழிப்புத் திட்டம் போன்ற பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இதை அறிந்து, அந்தத் துறையின் ஆணையாளர் மற்றும் செயலாளரான திரு வெங்கடசுப்பிரமணியம் அவர்கள், முதல் இடம் பெற்ற 3 மாவட்டங்களிலும், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்தான், முதல் இடம் என்று கூறி, எனக்குப் பாராட்டுக் கடிதம் எழுதி அனுப்பியுள்ளார்''.

## கிராமங்கள்தோறும் தொழிற்சாலை!

சிவகங்கை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் வழக்கறிஞர் **திரு இ. எம். சுதர்சன நாச்சியப்பன்** அவர்களைச் சந்தித்து உரையாடிய போது:

''மிகவும் இளமையான மாவட்டமான இது, வளர்ச்சியில் முதிர்ச்சியாக உள்ளது.

''படித்த இளைஞர்களுக்கு உதவி, சுயவேலைவாய்ப்பு, புதிய தொழிற்சாலைகள் ஆகியவை மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளுக்கு எடுத்துக்காட்டுகள் ஆகும்.

''மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம் அவர்கள், இம்மாவட்ட வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார். அவர், கிராம மக்களை நேருக்கு நேர் சந்தித்துக் குறைகளைக் கேட்டறிந்து அவற்றைக் களைவதில் தக்க உதவிகள் புரிந்து வருகிறார்.

''இம்மாவட்டத்தை நல்ல சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டும் என்பது **என்** விருப்பம். பிரான்மலை-பாரிமலை, ஏரியூர் குன்னக்குடி, திருக்கோஷ்டியூர், காளையார் கோயில், கொல்லங்குடி, பில்லூர் தர்க்கா இவை முக்கிய சுற்றுலாத் தலங்களாகும். எழுவன்கோட்டை, குருந்தங்குடி பறவைகள் சரணாலயம், வேட்டங்குடி பறவைகள் சரணாலயம் இவையெல்லாம் பயணிகளை ஈர்க்கத் தக்க இடங்களாகும். மண்மலையில் மான்கள் சரணாலயம் அமைக்கலாம். இவையெல்லாம் சுற்றுலா மையமாக ஆக்கவேண்டும். கோயில்கள் அதிகமுள்ள மாவட்டம் இது. சிற்பக் கலையழகை அங்கே கண்டு மகிழலாம். இதற்குச் சுற்றுலாத் துறை ஆவன செய்யவேண்டும். சிவகங்கையிலிருந்து சுற்றுலாப் பேருந்து விடலாம்'' என்று தன் ஆவலை வெளியிடுகிறார் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்.

## குடிநீர்ப் பிரச்சினை இல்லை!

சிவகங்கை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் **திரு அ. முருகாண்டி** அவர்களைச் சந்தித்து, மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்துக் கேட்டபோது அவர் கூறினார்—

''எங்கள் ஒன்றியத்தைப் பொறுத்த வரையில், குடிநீர்ப் பிரச்னை நல்ல முறையில் தீர்க்கப்பட்டு வருகிறது. இதுவரை 340 கைப்பம்புகள் போடப்பட்டிருக்கின்றன. குடிநீர்ப்பிரச்சினை இந்த ஒன்றியத்தில் இல்லை. 46 பம்ப்செட்டு போடப்பட்டிருக்கின்றன. மேல்நிலைத் நீர்த்தேக்கத்தொட்டி மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

''இருபது அம்சத்திட்டத்தின் மூலம் இந்த ஒன்றியத்தில் மொத்தம் 78 சாண எரிவாயுக் கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது மாவட்டத்திலேயே முதலிடம் பெற்றுள்ளது.

## பணிகள் துரிதமாக நடைபெறுகின்றன!

சிவகங்கை வட்டார வளர்ச்சி அலுவலர் (திட்டம்), **திரு எஸ். சங்கரநாராயணன்** அவர்களைச் சந்தித்தபோது, நடப்புத் திட்டங்களையும், நாளைய வளர்ச்சிப் பணிகளையும் விளக்கினார்—

''ஒருங்கிணைந்த ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம், 1987-88-இல் 646 பேர்களுக்கு, ரூபாய் 31 இலட்சத்து 63 ஆயிரத்து 500 கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் ரூபாய் 9 இலட்சத்து 75 ஆயிரம் மானியமாகும். கிராமப்புறச் சுயவேலை வாய்ப்புத் திட்டத்துக்காக 1987-88-இல், 69 பேருக்குப் பயிற்சி தரப்பட்டுள்ளது. ரூபாய் 36 இலட்சத்து 23 ஆயிரம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதில் 50 சதவீதம் ஆதிதிராவிடர்கள் பயனடைந்துள்ளார்கள்.

''விவசாய அமோக விளைச்சல் திட்டத்தின் மூலம் 111 பேருக்கு ரூ.16,44,000 கடனும், ரூ.4,52,361 மானியமும் தரப்பட்டிருக்கிறது. புதிய கிணறுகளை வெட்டுதல், பழைய கிணறுகளை ஆழப்படுத்துதல், மின்சார மோட்டார், ஆயில் இன்ஜின் வாங்கித் தருதல் முதலான பணிகள் இதன் மூலம் நடைபெற்றுள்ளன.

''மத்திய அரசுத் திட்டமான ''ஜீவன்தாரா' திட்டத்தின் மூலம், ஆதிதிராவிடர்களுக்கு இலவசமாக 25 கிணறுகள் ஒரு கிணறு ரூ.14,500 செலவில் வெட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், மக்களின் முழு ஒத்துழைப்புடன், அரசின் திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தி வருகின்றது.

புதிய மாவட்டமான இது, புதுப் பொலிவும் வலிவும் பெற்று வருகிறது என்றால், அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

**—பி. வி. கிரி**



# பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில்

# கதர் கிராமத் தொழில் மையம்

# குடிநீர்த் திட்டங்கள் தொடக்க விழா

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் வளர்ச்சிப் பணிகளும், திட்டங்களும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் கடந்த 29-5-88 அன்று மாண்புமிகு மத்திய உள்துறை இணை அமைச்சர் திரு ப. சிதம்பரம் அவர்கள் சிவகங்கை, தேவகோட்டை, புதுவயல், கண்டனூர் ஆகிய ஊர்களில் பல வளர்ச்சி பணித் திட்டங்களைத் துவக்கி வைத்தார்.

அன்று காலை ரூ. 12.60 இலட்சம் செலவில் இராமநாதபுரம் கூட்டுறவு மத்திய வங்கிக் கிளை



யின் புதியக் கட்டடத்தைத் திறந்து வைத்தார். இந் நிகழ்ச்சிக்குப் பசும்பொன் முத்து ராமலிங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். கோபாலன் தலைமை வகித்தார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, ''அடுத்த ஐந் தாண்டுத்திட்டம் மாவட்ட மற்றும் மாநிலத் திட்டங்களின் தொகுப் பாக இருக்க வேண்டும் என்பது பாரதப் பிரதமரின் விருப்பம். இந்தக் கிராமநிலைத் திட்டமிடுதல் வெற்றி பெற்றால் இது ஒரு நிர் வாகச் சீர்திருத்தச் சாதனையாக அமையும்'' என்று குறிப்பிட்டார். இராமநாதபுரம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தேசியமய வங்கிகளுக்கு இணையாக அடைந்திருக்கும் வளர்ச்சிக்கு அவர் பாராட்டு தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் தனது தலைமையுரையில், இந்த வங்கி மூலம் ரூபாய் 11 கோடி கடன் வழங்கப் பட்டுள்ளது என்றும் கைத்தறி நெசவாளர்களுக்காக ரூ. 40 இலட்சம் கடனாக வழங்கியுள்ளனர் என்றும் கூறினார். பின்பு தேவகோட்டையில் ரூ. 32.56 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகத்தையும், பின்னர் கண்டனூரில் 26 ஏக்கரில் கட்டப்பட்டுள்ள கதர் கிராமத் தொழில் மையத்தையும், புதுவயலில், கண்டனூர் புதுவயல் ஆகிய இரு பேரூராட்சிகளுக்கும் உலகவங்கி உதவியுடன் ரூ. 51.63 இலட்சம் செலவில் அமைக்கப் பட்ட குடிநீர்த் திட்டத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

மையஅமைச்சர்திரு ப. சிதம்பரம் அவர்கள் தனது உரையில் பொது மக்களின் குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்வதற்காகப் பொது மக்கள் குறைதீர்க்கும் இயக்குநர் அகம் என்று ஒரு தனித்துறை, இப்போது மத்திய அரசில் ஏப்ரல் மாதத்திலிருந்து துவக்கப்பட்டிருக் கிறது. இது ரயில்வே, அஞ்சல், தொலைபேசி, வங்கி ஆகிய துறைகளில் உள்ள பொதுமக்கள் குறைகளைக் கேட்டறிந்து நிவர்த்தி செய்யும் 'செயலர்' நிலையில் ஒரு அதிகாரி இதற்குப் பொறுப்பு வகிக் கிறார். முன்னோடித் திட்டமாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த முயற்சி வெற்றி பெற்றால், பிற துறைகளுக்கும், மாநிலங்களுக்கும் விரிவாக்கப்படும் எனக் குறிப்பிட் டார்.


'கதர்கிராமத் தொழில் வாரியம் கண்டனூரில் அமைத்துள்ள தொழில் மையத்தின் மூலம் 197 ஆதிதிராவிடர்கள் உட்பட 286 ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது' என்றார்.

''150 கோடி ரூபாய் மதிப்பில் குடிநீர்த் திட்டம் உலகவங்கி உதவியின் மூலம் மதுரை, கோவை, சேலம் போன்ற 3 பெருந்திட் டங்கள் எடுத்துக்கொண்ட பெரிய தொகை போக, மிஞ்சிய 12 கோடி ரூபாயை 44 சிறிய நகரங்களில் குடிநீர்த் திட்டத்தை அரசு செயல் படுத்தி வருகிறது. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் புதுவயல், கண்டனூரில்தான் இந்தக் குடிநீர்த் திட்டத்தை முதலில் முடித்துள்ளோம் என்றார். ரூ. 50 இலட்சம் செலவில் உள்ள இந்த இரு திட்டங்களும் உலக வங்கி உதவியுடன் குடிநீர் வடிகால் வாரியத்தால் அமைக்கப்பட்டவை. இரு சிறு நகரங்களிலும் சுமார் 13 ஆயிரம் மக்கள் பயனடைவர்'' எனக் குறிப்பிட்டார்.

**எம். அண்ணாமலை**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், சிவகங்கை.**

# தமிழகத்தின் கலங்கரை விளக்கம்



இன்றைக்குச் சற்றேறக்குறைய 65 ஆண்டுகளுக்கு முன் கரந்தைத் தமிழ்ச் சங்க விழாவில் பேசிய பண்டிதமணி கதிரேசனார் அவர்கள்,

''புண்ணிய சீலர்களே!

''இனித் தமிழ் நிலத்தில் உறையும் தமிழ் இனத்தவராகிய நாம் அனைவரும் ஒன்று திரண்டு செய்யவேண்டிய பெரும்பணி ஒன்று இருக்கிறது. அது, தமிழுக்கென்று தனிப் பல்கலைக்கழகம் அமைத்தலேயாகும்''

என்று அறுதியிட்டு உரைத்தார்.

பாரதியார், தமிழவேள் உமா மகேசுவரனார், பாண்டித்துரைத் தேவர், பேரறிஞர் அண்ணா மற்றும் பல தமிழ்ப்பெருமக்கள் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று அமைய வேண்டும் என அவாவினர்.

முத்தமிழ் வளர்த்த மதுரை மூதூரில் நடந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டில், ''தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும்'' என்ற அறிவிப்பினை மறைந்த முதல்வர் திரு எம்.ஜி. ஆர் வெளியிட்டார்.

அந்த அறிவிப்பு பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாளில் (15.9.1981) செயல்வடிவம் பெற்றது. ஆம், அன்றுதான் பழங்கலைகளின் விளைநிலமாகவும், பைந்தமிழின் நிலைக்களனாகவும் திகழும் தஞ்சை மண்ணில் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழில் புதைந்து கிடக்கும் பழமையைப் போற்றுதல், அதனைப் பயன்படுத்தி எதிர்கால வளர்ச்சிக்கு வழிகோலுதல், அறிவுத்துறைகளில் தமிழ் மொழியை வளர்த்துப் பல் துறைப் பயிற்று மொழியாக விளங்கச் செய்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு தமிழ்ப் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப் பட்டது.

கலைப்புலம், சுவடிப்புலம், வளர் தமிழ்ப் புலம், மொழிப்புலம், அறிவியல்புலம் என்ற ஐந்து புலங்களையும் அவற்றின் கீழ், பல துறைகளையும் பெற்றுச் செம்மையாகச் செயல்படும் தமிழ்ப் பல்கலைக் கழகம் எந்த இலட்சியத்திற்காகத் தோற்றுவிக்கப்பட்டதோ அந்த இலக்கு நோக்கி அது வெற்றி நடை போடுவதை நாடு நன்கறியும்.

கடந்த ஆறு ஆண்டுகளில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அடைந்துள்ள வளர்ச்சியும், ஆற்றி உள்ள பணிகளும் அந்த உண்மையை நிலை நிறுத்தும் என்பதில் ஐயமில்லை.

மொழி, வாழ்வியல், அறிவியல் ஆய்வுகளும், ஆராய்ச்சிகளும் மேற்கொண்டு தமிழுக்கு வளம் சேர்க்கும் உயர் மையமாகத் திகழும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்கு அடையாளச் சின்னமாக நூலகம் அமைந்துள்ளது.

சுமார் ரூ. 1½ கோடி செலவில் அமைக்கப்பட்டு, தமிழ்ப்புத்தாண்டு நாளன்று திறந்து வைக்கப்பட்ட நூலகக் கட்டடம் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் புகழ் மகுடத்தில் பதிக்கப்பட்ட வைரமாகும்.

''நவீன செய்தித் தொடர்புச் சாதனங்களைத் தன்னகத்தே கொண்ட மாபெரும் நூலகம்'' என்று ஏடுகள் போற்றும் வகையில் அமைந்துள்ள இந்நூலகம், 50,000 நூல்களையும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலமுறை இதழ்களையும் பெற்று, ஆராய்ச்சியாளர்களின் கருத்துத் தேவையினை நிறைவு செய்யும் வகையில் அமைந்துள்ளது.

இந்தியாவின் முதல் நடமாடும் நூலகமாகக் கருதப்படும் மன்னார்குடி கௌமார மடாலயத்தின் கிராமக் கல்வித் தொண்டுக்கு உதவிய இரட்டைமாட்டு வண்டி நூலகம் தொடர்பான நூல்களும் புகைப் படங்களும் பெறப்பட்டு காட்சிப் படுத்தப்பட்டிருப்பது நூலகத்திற்கு அணிசேர்க்கும் அரும்பணியாகும்.

தமிழர் தம் வாழ்க்கை, கலை, பண்பாடு, தெய்வ வழிபாடு ஆகிய பொருட்களின் கருவூலமாக அருங்காட்சியகம் அமைந்துள்ளது. 300க்கும் மேற்பட்ட கலைப்பொருட்களைக் கொண்டுள்ள இந்த அருங்காட்சியகத்தை இதுவரை 20,000க்

—இரெ. மகாலிங்கம்
மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

கும் மேற்பட்ட மக்கள் கண்டு கருத்து விளக்கம் பெற்றுள்ளார்கள்.

உலக அளவில் ஒரு மொழியைப் பெருமைப்படச் செய்யவும், செம்மைப் படுத்தவும் வேண்டுமானால் அறிவியல் நோக்கிலும், செய்தி விரிவாக்கத்திற்கு ஏற்றமுறையிலும் ஆய்வுகளை மேற்கொள்வது அவசியமாகும். அந்த வகையில் மொழி ஆய்வினை நவீன மயமாக்கவும் புதிய ஆய்வுகளை மேற்கொள்ளவும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தோற்றுவிக்கப்பட்ட கணிப்பு மையம் பல்கலைக் கழகத்தின் பல துறைகளுடன் இணைந்து பல திட்டங்களைச் செயல்படுத்திச் சாதனை படைத்துள்ளது. ஓலைச் சுவடிகள், அரிய கையெழுத்துப் பிரதிகள், அகழாய்வுப் பொருட்கள் போன்றவற்றை ஆவணப்படுத்தவும், ஆய்விற்குப் பயன்படுத்தவும் உதவும் நுண்படக்கருவிப் பிரிவு ஒன்றும் இயங்கி வருகிறது.

நவீன அச்சக வசதியுடன் நிறுவப்பட்டுள்ள பதிப்புத் துறை, பல்கலைக்கழகத்தின் நூல்வெளியீட்டுப் பணிக்கு உந்து சக்தியாகப் பயன்படுகிறது. பதிப்புத்துறையின் மூலம் இதுவரை தமிழ் நூல்கள் 70, ஆங்கில நூல்கள் 14 ஆக, மொத்தம் 84 நூல்கள் பதிப்பாகியுள்ளன. செய்தி மலர், தமிழ்க் கலை எனும் இதழ்கள் தமிழிலும், 'நியூஸ் புல்லெட்டின்' 'தமிழ் சிவிலிசேஷன்' என்ற இதழ்கள் ஆங்கிலத்திலும் பதிப்புத்துறையின் மூலம் வெளியிடப்படுகின்றன.

உலகமெல்லாம் பரந்துகிடக்கும் அறிவுச் செல்வங்களைத் தமிழ் மக்கள் அறிந்திட, கலைக் களஞ்சியங்கள் உதவுகின்றன. இந்திய மொழிகளுக்குள்ளே முதல் முதலில் கலைக் களஞ்சியம் வெளிவந்தது தமிழ் மொழியில்தான். அத்தகைய பெருமைக்குரிய கலைக்களஞ்சியத்தைவெளியிடும் பெரும் பொறுப்பினைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்றுள்ளது. இந்தப் பணியினை ஆற்றக் களஞ்சிய மையம் நிறுவப்பட்டுள்ளது.

வாழ்வியல் களஞ்சியம் 14 தொகுதிகளும், அறிவியல் களஞ்சியம் 20 தொகுதிகளும், சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் 6 தொகுதிகளும் வெளியிடத் திட்டமிட்டுப் பணிகள் முனைப்புடன்நடைபெற்று வருகின்றன. வாழ்வியல் களஞ்சியம் 4 தொகுதிகளும், அறிவியல் களஞ்சியம் 2 தொகுதிகளும், சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் 2 தொகுதிகளும் வெளியிடப்பட்டுள்ளன. இவை போன்று பெரும் சொல்லகராதி 10 தொகுதிகள் வெளியிடத் தனித்துறை செயல்பட்டு வருகிறது.



# பிறரை மதிக்கும் பண்பாடு

**மேதகு ஆளுநர்**
**டாக்டர் பி. சி. அலெக்சாண்டர்**

'தமிழ்மொழி உலகின் தலைசிறந்த செம்மொழிகள் நான்கிலே ஒன்று-இவ்வாறு நான் குறிப்பிடுவதற்கு, அதனுடைய தொன்மையோ, கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வளம்மிக்கஇலக்கியத்தைக்கொண்டு விளங்கியதோ காரணமல்ல; உலகிலுள்ள வளமிக்க மொழிகளிலே அதுவும்ஒன்று என்பதுதான் முக்கிய காரணம்.''

'பழங்காலத்தில் மட்டுமன்றி இடைக் காலத்திலும், இக்காலத்திலும் உலகின் சிறப்புமிக்க மொழிகளில் ஒன்றாகத் தமிழ்மொழி விளங்கி வந்துள்ளது. தமிழ்நாடு மட்டுமன்றி ஒவ்வொரு இந்தியனும் பெருமைப்படக்கூடிய அளவிற்கு அதனுடைய இலக்கிய வளம்சிறப்பு மிக்கதாக இருக்கிறது.

தமிழ்ப் பல்கலைக் கழகம்மொழி, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடும் என்று துணை வேந்தர் குறிப்பிட்டார். பண்பாடு என்றால் என்ன? அது பல வகைகளிலே வெளிப்படுகிறது. அது நாட்டியத்திலும், இசையிலும், சிற்பத்திலும், ஓவியத்திலும், உரைநடையிலும், கவிதையிலும், சிறு கதையிலும், புதினத்திலும் வெளிப்படுகின்றது. நாம் இந்தியப் பண்பாடு என்று கூறும் போது மொழி வளர்ச்சியில், இலக்கியத்தில், நுண்கலைகளில் அடைந்துள்ள உயர்ந்த நிலையை மட்டும் குறிப்பதில்லை. இவை பண்பாட்டின் வடிவங்கள்தாம் என்றாலும், இவற்றிற்கும் மேம்பட்ட ஒன்று உள்ளது.

''நம்முடைய பண்பாடு அல்லது நாகரிகம் 5000 ஆண்டுகளுக்குப் பின்னரும் சிதையாமல் உள்ளது. இந்நாகரிகத்தைப் போன்று எத்தனையோ நாகரிகங்கள் தோன்றி, வளர்ந்து, மறைந்துவிட்டன. பாபிலோனிய நாகரிகம் என்னவாயிற்று? மிகப்பெரிய அசிரிய நாகரிகமும், இரானிய நாகரிகமும் என்னவாயின? எகிப்திய நாகரிகம் என்னவாயிற்று? அவை அனைத்தும் சிறப்புற்று விளங்கின; சிலகாலத்திற்குப்பின் மறைந்துவிட்டன.

''நாம் நல்லவை எங்கிருந்தாலும் வரவேற்கிறோம். அவற்றை ஏற்றுக் கொள்கிறோம். நம்முடைய பண்பாட்டின் சிறப்பினை நாம் நன்கு உணர்ந்திருப்பதால் நாம் புதியவற்றைக் கண்டு அஞ்சவில்லை. நம்முடைய ஒற்றுமை உணர்வு பிறருடைய கருத்தையும் எண்ணங்களையும் மதிக்கும் தன்மை வாய்ந்தது. எனவேதான சாக்ரடீசு போன்று, இந்தியாவில் ஒருவருக்கும் நஞ்சு கொடுக்கப்படவில்லை.''

'பழமையான பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் உறைவிடமாகவும், சிறப்புமிக்க ஆலயங்கள் விளங்குமிடமாகவும், இசைக்கலை போன்ற பல கலைகள் வளர்ந்தோங்கிய இடமாகவும், வாழ்க்கையில் உயரிய கொள்கைகளை விரும்பி போற்றுமிடமாகவும் விளங்கிய தஞ்சை நகருக்கு வந்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.''

'தமிழ்ப் பல்கலைக்கழகம் மேன்மேலும் வளர்ந்து சிறப்படைய என்னால் இயன்ற அனைத்தையும் செய்வேன் எனக் கூறித் தஞ்சை மக்களுக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**[தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ரூ. 14 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ள மகளிர் விடுதி திறப்பு விழாவன்று (27-4-88) ஆற்றிய உரையிலிருந்து]**

மாமன்னன் இராசராசன் பெயரில் தமிழ்ப் பல்கலைக் கழகம் செயல்படுத்தி வரும் படைப்பிலக்கியப் பரிசுத் திட்டம், கவிதை, சிறுகதை, புதினம், அழகுறு உரைநடை என்னும் துறைகளில் படைப்புகள் பெருக ஆக்கம் தருகிறது. 1984ஆம் ஆண்டுக்கான பரிசு கவியோகி சுத்தானந்த பாரதியாருக்கும், 1986ஆம் ஆண்டுக்கான பரிசு டாக்டர் கோவி. மணிசேகரன் அவர்களுக்கும் வழங்கித் தமிழ்ப் பல்கலைக் கழகம் பாராட்டியது.

எதிர்காலத் தலைமுறையின் ஏற்றமும், மொழி வளர்ச்சியும் இன்றைய இளந்தலைமுறையினர் பெறும் ஆற்றல் திறனைப் பொறுத்துத்தான் அமைய முடியும். அதனால்தான் மாணவர்களிடையே பேச்சு வன்மையை வளர்க்கப் பரிசுகள் வழங்கிப் பல்கலைக் கழகம் ஊக்குவித்து வருகிறது.

பேச்சாற்றலுக்கு உரியவரான தமிழ்த்தென்றல் 'திரு. வி. க, பெருந்தகை மறைமலையடிகள் ஆகியோரின் பெயரால் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

தமிழில் சிறந்த நூல்கள் வெளிவர ஆக்கம் தரும் வகையில் ஓவியம், இசை, நாட்டுப்படைப்பு போன்ற பொருள்களில் வெளிவரும் நூல்களுக்கு நூல் ஒன்றுக்கு ரூபாய் 5,000 வீதம் பரிசு அளிக்கும் அரிய திட்டம் ஒன்றைப் பல்கலைக்கழகம் நடைமுறைப்படுத்தி வருகிறது.


பிற நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் தமிழுணர்வு குன்றாமல் காக்கவும், பிற மாநிலங்களிலும் வேறு நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களின் வாழ்க்கைநிலையை அறிந்திடவும், அவர்களின் வழிபாட்டு முறையை ஆய்ந்திடவும் பல்கலைக் கழகம் மிக அரியதோர் பணியினை ஆற்றி வருகிறது.

தமிழில் தரமான ஆய்வு நூல்கள் வெளிவர உதவும் வகையில் தொல்காப்பியத்தின் பெயரால், தகைமை ஒன்றைப் பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ளது. தத்துவம், சமயம், பண்பாடு, கலைகள் குறித்து ஆய்வு செய்ய, காஞ்சி தத்துவ மையம் செயல்பட்டு வருகிறது.

பழங்குடி மலைவாழ் மக்களின் வாழ்க்கை குறித்து அறிவியல்முறையில் ஆய்வு செய்திடவும், அவர்களது தனித்த பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டிடவும், அவர்களின் பேச்சு மொழிக்கு வரிவடிவம் தந்திடவும் உதகையில் தொடங்கப்பட்ட மலையின மக்கள் ஆய்வு மையம் தனது பணியினை முனைப்போடு ஆற்றி வருகிறது. மலையின மக்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வயது வந்தோர் கல்வித்துறையும், உதகை மலையின மக்கள் ஆய்வு மையமும் இணைந்து வயது வந்தோர் கல்வி மையங்களைத் தொடங்கி நடத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் வரலாற்றில் விடுபட்டுப்போன பகுதிகளை அறிந்திடவும், அதற்கு ஆதாரமான சான்றுகளைக் கண்டெடுத்திடவும் அகழாய்வுப் பணிகள் உதவுகின்றன. அத்தகையசீரிய பணியிலும் தமிழ்ப் பல்கலைக் கழகம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. பழம் தமிழர்களின் கடல் வாணிபம் மற்றும் பண்பாடு பற்றிய சரித்திரச் சான்றுகளை அறிந்திடும் நோக்கத்துடன் பல்கலைக் கழகம் 'நீரகழாய்வு மையத்'தை உருவாக்கியுள்ளது. **இந்தியாவில் பல்கலைக் கழகக் கல்வித் திட்டத்தில் நீரகழாய்வுத் துறையை முதன்முதலில் அறிமுகப்படுத்திய பெருமை தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தான் சாரும்.** இந்த மையம் பழங்கால 'நங்கூரம்' ஒன்றைக் கண்டுபிடித்துச் சாதனை புரிந்துள்ளது. இதைப்போன்று கல்வெட்டுத்துறை பல கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியுள்ளது. தஞ்சை மராட்டியரின் 50 செப்பேடுகளைத் தொகுத்துத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்ட நூலுக்கு 1987ஆம் ஆண்டில் சிறந்த வரலாறு நூல் என்ற விருதைத் தமிழக அரசு வழங்கிப் பாராட்டியுள்ளது.

பழந்தமிழ்க் கலைகளை வளர்க்கவும், பிற நாட்டுக் கலைகளோடு



## புகையும் போதையும்

தேவையற்றதும், தீமையானதும் மட்டுமல்ல; புகைபிடிப்பதானது, ஹீராயின் போன்ற போதைப் பொருட்களுக்கு ஈடானது என்று - அமெரிக்க நாட்டில், உலக சுகாதார நிறுவனத்திற்கு வந்துள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகள் நிரூபித்துள்ளன.

## மாதத்தில் ஒருநாளாவது

ஆண்டுதோறும் ஏப்ரல் 7-ஆம் தேதி உலக நல நாளாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.

இதையொட்டி, சென்னையில் உள்ள 'புகை எதிர்ப்பு இயக்கம்' —'No tobacco Day...' 'All for health, Health for all' என்ற வகையில் முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டாடியது.

அதைத் தொடர்ந்து ஒவ்வோர் மாதமும் 7-ஆம் தேதி ஒரு நாளாவது புகைபிடிக்காமலிருங்கள் என்று இந்த இயக்கம் புகைபிடிப்போரை வலியுறுத்தி ஊர்வலம் நடத்த முடிவு செய்திருக்கிறது.

அதன்படி - ஜூன் 7-ஆம் தேதி அன்று சென்னை ராஜாஜி மண்டபத்திலிருந்து-ஸ்பென்சர் வரை ஒரு ஊர்வலம் நடத்தப்பட்டது. ஏராளமான மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், இதர துறையினர், கல்லூரி மாணவ மாணவிகள் அதில் கலந்து கொண்டார்கள்.

'புகை உயிருக்குப் பகை'... 'எதையும் தாங்கும் இதயம் புகையைத் தாங்காது'... 'இழுக்க இழுக்கத் துன்பம் இறுதிவரை'... அரசு அன்று கொல்லும், புகை நின்று கொல்லும், .—போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சிறு பலகைகளை ஊர்வலத்தினர் பிடித்திருந்தார்கள்.

## கனடாவில் தடை

புகைபிடிக்கும் வழக்கத்தைத் தடைசெய்யும் விதத்தில் கனடா நாட்டு நாடாளுமன்றம் 3.6.88 அன்று இரண்டு மசோதாக்களை நிறைவேற்றியிருக்கிறது. இம்மசோதாக்களின் மூலம்-புகைவண்டி, பேருந்து, அலுவலகம், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் புகைபிடிப்பதும், சிகரெட் தொடர்பான விளம்பரங்களும், பல்வேறு போட்டிகளை சிகரெட் நிறுவனங்கள் ஏற்று நடத்துவதும் கனடா நாட்டில் தடை செய்யப்படுகின்றன.

ஒப்பிட்டு அவற்றின் பெருமையை உரைக்கவும் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆற்றிவரும் அரும் பணிகள் அளவிடற்கரியவை தமிழ்நாட்டு ஓவியங்களின் பரிமாணத்தையும், உணர்ச்சிகளையும் எடுத்துரைக்கவும் தஞ்சைப் பெரிய கோயில் ஓவியங்கள், சித்தன்ன வாசல் ஓவியங்கள் ஆகியவற்றைப் படியெடுத்து வைத்துப் பாதுகாக்கவும் தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்கியுள்ள முயற்சி நமது ஓவியக் கலைக்கு ஓர் நற்பேறாகும்.

நாடகம், தெருக்கூத்து, பொய்க்கால் குதிரை ஆட்டம், பொம்மலாட்டம் ஆகியவை குறித்து இப்பல்கலைக் கழகம் மேற்கொண்டுள்ள ஆய்வுகளும், கருத்தரங்குகள் நடத்திக் கண்டறிந்த முடிவுகளும் ''கலைகளுக்கெல்லாம் அரசாகவும், பாமரர்களின் பல்கலைக் கழகமாகவும், நாட்டிற்கு அணிகலனாகவும்'' கருதப்படும் நாடகத் துறையின் வரலாற்றில் தோன்றியுள்ள தேக்க நிலையைப் போக்கிப் புத்துயிர் ஊட்டும் மாமருந்தாகும்.

தமிழிசையை வளர்க்கவும், இசைக் கலைஞர்களை ஊக்குவிக்கவும், இப்பல்கலைக் கழகம் பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகின்றது.

சித்த மருத்துவ முறையை வளர்க்கும் நோக்கத்துடன் நவீன கருவிகள் கொண்ட சோதனைக் கூடம் ஒன்றையும், 400க்கும் மேற்பட்ட மூலிகைச் செடிகள் வளர்க்கும் மூலிகைப் பண்ணை ஒன்றையும் தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ளது.

தமிழ் மொழியில் இலக்கிய, இலக்கண வளர்ச்சிக்குத் தொண்டாற்றுவதுடன், தமிழ்நாட்டின் பழம் பெருமையை நிலைநாட்டுவதுடன் தமிழ்ச் சமூகத்தின் அறிவியல் உணர்வை வளர்க்கவும், பல்கலைக் கழகம் பெரும்பணியாற்றி வருகின்றது.

பல்துறை அறிவியல் செல்வத்தையும், வாழ்வியல் செய்திகளையும் வளரும் மொழியில் கொண்டுவந்து சேர்க்கவும், பொறியியல் மருத்துவப் பாடநூல்களைத் தமிழ் மொழியில் படைக்கவும், பல்கலைக் கழகம் ஆற்றி வரும் ஆக்க பூர்வமான செயல் தமிழ் மொழியை அறிவியல் போதனைக்கு ஏற்றதோர் மொழியாக மாற்றுகின்ற காரியமாகும்.

தமிழிசை வரலாறு பற்றிய நூல்கள் உருவாக்கும் தமிழிசை ஆவணக் காப்பகம் நிறுவி இசை நூல்கள் இசைக்கருவிகளைச் சேகரித்துப் பாதுகாத்து எதிர்காலத் தலைமுறையினருக்கு வழங்க மேற்கொண்டுள்ள முயற்சி தமிழிசையின் மறுமலர்ச்சிக்கு வழிகோலும் அரும்பணியாகும்.

உலக அரங்கில் தமிழ் ஏற்றம் பெறவும், தமிழ்க் கலை, பண்பாடு குறித்து மக்களிடையே விழிப்புணர்ச்சி தோன்றவும், செயலாற்றி வரும் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆற்றலாளர் டாக்டர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்களைத் துணைவேந்தராகப் பெற்றுப் பெரும் வளர்ச்சி கண்டது.

அவருக்குப் பின் துணைவேந்தராகப் பொறுப்பேற்றுள்ள டாக்டர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் மொழி ஆராய்ச்சித் துறையில் அனுபவம் வாய்ந்தவர். அவரது தலைமையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் வளர்ச்சிப் பாதையில் வீறு நடை போடுகின்றது.

'தமிழ் நாட்டுக்கே பெருமை தரும் தஞ்சைப் பெருவுடையார் ஆலயத்தின் இணையில்லாக் கோபுரம் போலத் தமிழ்ப் பல்கலைக் கழகமும் வரலாற்றுப் பெருமையைத் தேடித் தருவது திண்ணம்' என்ற எண்ணத்திற்கு வண்ண வடிவம் தருவதைப் போன்று பல்கலைக் கழகத்தின் பன்முக வளர்ச்சி அமைந்திருப்பதை நாடு நன்கறியும்.

தமிழில் துறைகள் தோறும் எழில் துளிர்க்கப் பாடுபடும் தமிழ் பெற்றுள்ள வளர்ச்சிக்கும் எதிர்காலத்தில் பெறவிருக்கும் வளர்ச்சிக்கும் எடுத்துக்காட்டாகத் திகழும் 'தமிழகத்தின் கலங்கரை விளக்கமாம் தமிழ்ப் பல்கலைக் கழகம் திகழ்கிறது.

# ஆதி திராவிடர் நல்வாழ்வுக்கு...

## ஆலோசகர் அறிவிப்பு

ஆதிதிராவிடர் நலத்துறைப் பணிகளை ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ.பத்மநாபன் அவர்கள் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்களுடன் கடந்த 10.6.88 அன்று மறு பரிசீலனை செய்தார். ஆளுநரின் ஆலோசகர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமுதாயப் பொருளாதார முன்னேற்றத்திற்காக 1988-89ஆம் ஆண்டு ரூபாய் 216 கோடி செலவிடப்படும் என்று குறிப்பிட்டார். இந்தத் திட்டங்களின் பயன்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு விரைவில் கிடைக்கச் செய்யும் வகையில் அலுவலர்கள் தனிக் கவனம் எடுத்துச் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களின் நலனுக்கென எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை, மேலும் துரிதமாகச் செயற்படுத்துவதற்கு ஆளுநர் வெளியிட்ட அறிவுரைகளையும் சுட்டிக்காட்டினார்.

சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினரின் நலனுக்கெனத் தனித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கெனப் பாரதப் பிரதமர் கூடுதலாக ரூபாய் 27 கோடி ஒதுக்கீடு செய்யத் தீர்மானித்திருப்பதை இங்குச் சுட்டிக்காட்டினார். இந்தத் தனி ஒதுக்கீட்டிலிருந்து கூடுதல் பங்கு, கூடுதலாகப் பாதிப்பு ஏற்படும் இடங்களில் காமராஜர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மக்களுக்குத் தீப்பிடிக்காத வீடுகளை 8,000 கட்டிக் கொடுப்பதற்குச் செலவிடப்படும்.

காமராஜர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 8000 வீடுகள் குறிப்பிட்ட காலத்திற்குள் கட்டி முடிப்பதற்கு, அரசுக்கு விரைவில் கருத்துக்களை அனுப்புவதற்கும், தாட்கோவுடன் அலுவலர்கள் நெருங்கி ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இந்தக் குடியிருப்புகளில் குளிப்பதற்கும், கழிப்பிடம் அமைவதற்கும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என்ற ஆளுநரின் ஆலோசகர், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அடுத்த நிலை வகிப்பதால், ஏழைகளாக இருக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு உதவி செய்வதில் ஒரு முக்கியப் பங்கை வகிக்கவேண்டும்.

''அரசால் குறிப்பிடப்பட்டிருக்கும் தீண்டாமை விரவியுள்ள 564 கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளான தெரு விளக்குகள், மயானப் பாதை அமைத்தல், குடிநீர் வசதி, இணைப்புப்பாதை அமைத்தல் போன்றவற்றைச் செய்து கொடுக்க வேண்டும்.

''நோட்டுப்புத்தகம், புத்தகங்கள், எழுதும் பலகை முதலியவற்றை வழங்குவதை ஆலோசகர் குறிப்பிட்டு, இவைகள் எல்லா மாணவர்களுக்கும் உடனடியாக வழங்கப்பட வேண்டும். அறிவை வளர்க்கும் நோக்குடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினக் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களில் சேர்க்கும் திட்டம் தீவிரமாக அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# அறிவின் இமயம் அம்பேத்கார்



சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மட்டுமின்றி ஒடுக்கப்பட்ட,பின்தங்கிய மக்களின் உயர்வுக்காகவும் பாடுபட்டவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று தலைநிமிர்ந்து நடக்க தம் வாழ்க்கையை அவர் அர்ப்பணித்தார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் 98-வது பிறந்தநாள் விழா மாநில அளவில் அம்பத்தூர் நகரிய வளாகத்தில் 14-6-88 அன்று சிறப்புற நடைபெற்றது.

அன்று மாலை பள்ளி மாணவ மாணவியர் வழங்கிய கலை நிகழ்ச்சிகளுடன் விழாத் தொடங்கியது.

விழா வரவேற்புரை ஆற்றிய செய்தி-மக்கள் தொடர்புத்துறை இணை இயக்குநர் (நிர்வாகம்) திரு வி.டி. வீரப்பன் அவர்கள், 'இது போன்ற விழாக்கள் சென்னை மாநகரில்தான் நடைபெறுவது வழக்கம். ஆனால் அண்மைக்காலமாக, பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள், விழாக்களில் கலந்து கொள்ள வசதியாக மாவட்டங்களிலும் நடத்தப்படுகிறது' என்று தெரிவித்து அனைவரையும் வரவேற்றார்.


செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சமீர் வியாஸ், இ.ஆ.ப அவர்கள் விழாத் தலைமை ஏற்க, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி அவர்கள் டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தமது தலைமை உரையில், 'டாக்டர் அம்பேத்கார் அவர்கள் மிகச் சிறந்த மேதை. நம் நாட்டில் மட்டுமல்ல, அகில உலக அளவிலும் குறிப்பிடத்தக்க மேதைகளில் ஒருவர். உலகில் மிக நவீனமான அரசியல் சட்டங்களில் ஒன்று நமது இந்திய அரசியல் சட்டம். இந்திய அரசியல் சட்டத்தை நமக்கு அளித்த உத்தமர்களில் டாக்டர் அம்பேத்கார் அவர்களும் ஒருவர். நமக்கு இருக்கும் பொறுப்பை நாம் மறந்தோம். உரிமைகளைத்தான் நினைவில் வைத்துள்ளோம். முதலில் நமது கடமையை நாம் செய்ய வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களை முன்னேற்ற தம் இறுதிநாள் வரை பாடுபட்ட டாக்டர் அம்பேத்கார் அவர்களின் கொள்கைகள் தொடர்ந்து செயல்பட நாம் பாடுபட வேண்டும்' என்று கூறினார்.

தொடர்ந்து, நலிந்தோர்க்கான வீட்டுமனைப்பட்டாக்களை திருமதி மரகதம் சந்திரசேகர், எம். பி. அவர்கள் வழங்கினார். சைதாப்பேட்டை வட்டத்தின் சார்பில் 32 பேருக்கும், பொன்னேரி வட்டத்தின் சார்பில் 94 பேருக்கும், கும்மிடிப்பூண்டி வட்டத்தின் சார்பில் 110 பேருக்கும் பட்டாக்கள் வழங்கப்பட்டன. பயன்பெற்றோரில் 120 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அடங்குவர்.

திருமதி மரகதம் சந்திரசேகர், எம். பி. அவர்கள் தமது வாழ்த்துரையில் தெரிவித்ததாவது :

'பொறுமை, சகிப்புத்தன்மை, இப்படி எல்லாவற்றையும் ஏற்று, சிறு வருவாய் வந்தாலும் அதில் ஒரு பகுதியை ஏழை எளியவர்களுக்குச் செலவிடும் பழக்கத்தைக் கொண்டவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள். வாழ்க்கையில் பல கஷ்டங்களை ஏற்றார். டாக்டர் அம்பேத்கார் பள்ளியில் படிக்கும் போது மற்ற சாதிப் பிள்ளைகள் தங்கள் சாப்பாட்டுப் பாத்திரத்தில் அம்பேத்காரின் கைபட்டுவிட்டால் அசுத்தமாகும் என்று பாத்திரத்தை கரும் பலகையின் பின்புறம் வைத்து



# உங்கள் வளர்ச்சிக்கு எங்கள் பாதுகாப்பான திட்டங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சிறந்த பல சேமிப்புத் திட்டங்களை வகுத்துள்ளது.

இன்றே வருவீர்—உங்கள் வாழ்க்கை வளம்பெற செய்திடுவீர்.

உங்கள் சேமிப்பிற்கு $\frac{1}{4}$% கூடுதல் வட்டி உண்டு.

- சேமிப்புத் திட்டம்
- நிரந்தர வைப்புத் திட்டம்.
- தொடர் வைப்புத் திட்டம்.
- ரொக்க சான்றிதழ்.
- சிறப்பு வைப்பீட்டுத் திட்டம்.

TNSC BANK

தமிழ்நாடு மாநிலத்
தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001.

*TNSC வங்கி—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி*

விடுவார்களாம். அம்பேத்கார் கரும்பலகை அருகே வந்தால், சாப் பாட்டை மிக தூரத்தில் கொண்டு போய் வைத்து விடுவார்களாம். அப்படிப்பட்ட கேவலத்தை எல் லாம் சகித்துக் கொண்டு, படித்து வெளிநாடு சென்றார்.

'டாக்டர் அம்பேத்கார் உழைப் பவர்கள் பற்றியே நினைத்தார். உழைக்கப் படிப்பு வேண்டும் என் றார். தாழ்த்தப்பட்ட சமூகத்தில் தோன்றிய அந்த மேதையின் புகழ் நிலைக்கக் கூட்டங்கள் நடத்துவது மட்டுமல்லாமல் அவர் செய்த நன்மைகளை மாநில அரசு புத்தக மாக வெளியிட்டு மாணவர்கள் படிக்கச் செய்ய வேண்டும். அவரைப் பற்றி மற்றவர்கள் எழுதிய புத்த கங்களைச் சிறுபிள்ளைகள், மாண வர்கள் படிக்குமாறு செய்து, அவர் களை ஊக்குவிக்க வேண்டும். அப் போதுதான் அவர்கள் ஜாதி வித்தி யாசம் இல்லாமல் வளர்வார்கள்' என்று கூறினார்.

திரு ஜீவரத்தினம், எம். பி. அவர்கள் தமது உரையில், "சுதந் திரம் பெறுவதில், ஏழை எளிய மக்களைக் கைதூக்கி விடுவதில் அவர் பெரு விருப்புக் கொண்டிருந் தார். சுதந்திரம் பெற்ற பின் இந்திய அரசியல் சட்ட வரைவுக் குழுவிற்குத் தலைவராக நியமிக்கப் பட்டார். ஒரு பலம் வாய்ந்த அர சியல் சட்டத்தை அவர் உருவாக்கிய தன் மூலம் மிக பலம் பொருந்திய தாக இந்தியாவை நிர்மாணித்தார்." என்று கூறினார்.

சென்னைத் துறைமுகத் தொழிற் சங்கத் தலைவர் திரு எம்.குப்புசாமி அவர்கள், உரையாற்றுகையில் "டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாளைத் தாழ்த்தப்பட்டவர்கள் மேடைபோட்டு அதில் தாழ்த்தப் பட்டவர்கள் மட்டுமே பேசும் நிலை இதுவரை இருந்து வந்தது. ஆனால் தற்போது மற்றவர்கள் மேடையில் நாங்கள் பேசுகிறோம். தொழிலாளி களுக்கு எட்டு மணி நேர வேலை என்பதை டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இந்திய அரசியல் சட்டத் தில் குறிப்பிட்ட பிறகுதான், நமது நாட்டில் நடைமுறைக்கு வந்தது. அதற்கு முன் எட்டு மணி நேர வேலை என்பது வெறும் பேச்சள வில்தான் இருந்து வந்தது' என்று கூறினார்.

களவிளம்பரத்துறையின் இணை இயக்குநர் திரு ஏ. கருப்பசாமி அவர்கள் தமது உரையில், 'நன்மை அடைந்த, நன்மை அடையும் தாழ்த்தப்பட்டோர் குறித்து இரண்டு கோரிக்கைகளைத் தெரி விக்க விரும்புகிறேன்' என்று கூறி, அந்த நன்மைகள் முழுமையாக அவர்களை அடைய வேண்டும். அரசு அளித்துள்ள சலுகைகளை தாழ்த்தப்பட்ட மக்கள் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என்று தெரிவித்தார்

செங்கற்பட்டு மாவட்ட முதன் மைக்கல்வி அலுவலர், திரு அருண. நடராசன் அவர்கள் அரசியல் சட் டத்தை உருவாக்குவதில் டாக்டர் அம்பேத்கார் பெற்ற பங்கை விளக்கிக் கூறினார். தொடர்ந்து பேசுகையில், "சிறுவயதில் டாக்டர் அம்பேத்கார் பட்ட இன்னல்கள் அவரைச் சிந்திக்க வைத்தன. நாம் பட்ட கஷ்டத்தைப் பின்வரும் சமு தாயம் படக்கூடாது என்று உணர்ந் தார். அனைவருக்கும் கல்வி கொடுத்தாக வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கார் அன்புக் கட்டளையிட்டுச் சென்றார். அதற்குமுன் கல்விக்காக 150கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டு வந்தது. ஆனால் சுதந்திரம்பெற்ற பிறகு கல்விக்காக இன்று 6,000 கோடி ரூபாய் செலவிடுகிறோம்," என்று தெரிவித்தார்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப., அவர்கள் தமது பேருரை யில் குறிப்பிட்டதாவது:

'நாம் மனிதர்களாக மாற வேண் டும். மனிதனாகப் பிறந்தோம்; வளர்ந்தோம், வாழ்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் செய்கிற செயல்கள் மனிதத் தன்மை வாய்ந்தவை தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி சிந் தித்துப் பார்க்கத்தான் மொழிக் காகவும், நாட்டுக்காகவும், மக் களுக்காகவும் பாடுபட்ட தலை வர்கள், கவிஞர்களின் பிறந்த நாட் களை அரசு கொண்டாடிவருகிறது. அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை, கடைபிடித்த நெறிகளை மக்கள் அறியச் செய்கிறது. அந்த வழியிலே நம்மைச் சிறிதளவாவது தயார் படுத்திக் கொள்ள வேண்டும். விழாக்களில் பெரியோர்கள் கூறும் அறிவுரைகளை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என்றுகேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து, திருக்குறள் நெறி பரப்பு மைய இயக்குநர் திருக் குறளார் திரு வீ. முனிசாமி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். திருக்குறளார் தமது உரையில், 'படித்தவர்களை, மேதைகளை நாம் விரல் விட்டு எண்ணி விடலாம். பர்ஷியன், ஆங்கிலம், சமஸ்கிருதம் இப்படி ஏழெட்டு மொழிகள் அவ ருக்குத் தெரியும். அவ்வளவு பெரிய ஜீனியஸ் அவர். இந்தியாவிலுள்ள மூன்று நூல் நிலையங்களாக நான் மதிப்பது, ஒன்று டி. டி. கிருஷ்ண மாச்சாரி, இரண்டாவது ஆர். கே. சண்முகம் செட்டியார். அதைவிடப் பெரிய நூல் நிலையம் டாக்டர் அம்பேத்கார் அவர்கள்தான்.

'அறிவை மதிக்கக்கூடிய, கல்வியை மதிக்கக் கூடிய, அனைவரது வீட்டி லும் அம்பேத்கார் படம் இருக்க வேண்டும். ஜாதி நாட்டில் அறிவைக் கொல்கிறது. அறிவைக் கொல்லும் விஷப்பூச்சியால் நாடு முன்னேறாது. அறிவுலகமேதை, அறிவின் கடல், அறிவின் இமயம், அறிவின் அட் லாண்டிக் சமுத்திரம் டாக்டர் அம்பேத்காரின் படம் நம் வீட்டில் இல்லையென்றால், ஜாதி என்ற விஷப்பூச்சி மலிந்துவிட்டது என்று பொருள். அறிவாளிகளின் படத்தை மாட்டாததால்தான் நாம் இன்று சிரமப்படுகிறோம்' என்று கூறி நூல் நிலையங்களுக்கு டாக்டர் அம்பேத்கார் அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

சாண எரிவாயுத் திட்டத்தில் சேர்ந்தவர்களுக்கு ஊக்கப் பணத் தையும் குடும்பநலத் திட்டத்தில் ஊக்கமுடன் பாடுபட்டவர்களுக்கு ஊக்கப்பரிசுகளையும் சிறுசேமிப் பாளர்களுக்கு அடையாள அட்டை களையும் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

செங்கற்பட்டு மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு ஜீ. மணிக்குமார் நன்றி நவின்றார்.

—நமது செய்தியாளர்


# தமிழரசு

## தமிழ் — மாதம் இருமுறை

## சந்தா விவரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 24.00 |
| 6 மாதச் சந்தா | ரூ. 12.00 |

**'தமிழரசு' — ஆங்கிலம்**

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூ. 12.00 |


6 மாதச் சந்தா ஏற்பதில்லை.

சந்தாத் தொகையை மணியார்டராகவோ, பாங்க் டிரா:ப்ட் மூலமோ செலுத்தலாம்.

அனுப்பவேண்டிய முகவரி :

**உதவி இயக்குநர்**
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.





# மருதமலையில் மலைவாழ் மக்களுக்குக் கூட்டுக் குடியிருப்பு

**கோ**வை மாவட்டம் மருதமலையில், மருதமலை மலைவாழ் மக்களுக்காக முதன் முதலாக ரூ. 4 லட்சம் செலவில் 37 கான்கிரீட் கூட்டுக் குடியிருப்பு வீடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. என். கோவிந்தன் தலைமையில், மாண்புமிகு மத்திய உரம் மற்றும் இரசாயன இணை அமைச்சர் திரு ஆர்.பிரபு திறந்து வைத்தார்.

மருதமலையில் நீண்ட நெடுங் காலமாகக் குடிசைகளாக இருந்தவை தற்போது கான்கிரீட் வீடுகளாகக் காட்சியளிக்கின்றன.

ஒரு வீட்டிற்கு ரூ. 10,500 வீதம் 37 வீடுகள் ரூ. 4 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளன. மேலும் 9 வீடுகள் ரூ.1 இலட்சம் மதிப்பீட்டில் விரைவில் கட்டப் படத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏழை எளிய மக்களுக்கு வாழ் வளிக்கும் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு 225 வீடுகள் ரூ. 26 இலட்சம் செலவில் கட்டப்படும். 1987-88இல் வளர்ச்சிப் பணிகளுக்காக ரூ. 47 இலட்சம் செலவிடப்படும். மற்றப் பகுதிகளில் ரூ.11.56 இலட்சத்தில் 137 வீடுகள் கட்டப்படவுள்ளன. இவ்வாண்டு ரூ. 13 இலட்சத்தில் 175 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ஏழை எளிய மக்களுக்குக் கடனாக இவ்வாண்டு ரூ. 5.58 கோடி வழங்கப்பட்டது. இதில் மானியம் மட்டும் ரூ. 184 கோடியாகும். இவ்வாண்டு ரூ. 6 கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மானியமாக ரூ.2 கோடி வழங்கப்படும். வடவள்ளியிலுள்ள அருள்மிகு மருதமலை சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் உயர்நிலைப் பள்ளி 3 மாதக் காலத்திற்குள் ரூ. 37 இலட்சம் செலவில் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்டத்தின் திட்டப்பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. 9 வட்டாரங்களில் வறட்சியைப் போக்கிட ரூ. 10 கோடிக்குத் திட்டமிட்டு மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு மத்திய உரம் மற்றும் இரசாயன இணை அமைச்சர் திரு ஆர்.பிரபு அவர்கள் மலைவாழ் மக்களுக்காகக் கூட்டுக் குடியிருப்புகளைத் திறந்து வைத்து உரையாற்றும்போது, 'மலைவாழ் மக்களின் முன்னேற்றத்திற்காக அரசு வழங்கி வரும் பல்வேறு சலுகைகளை மலைவாழ்மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மலைவாழ் மக்களுக்காக அரசு வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு செய்யப்பட்ட சதவீத இடங்கள் முழுமையாக நிரப்பப்படாமல் உள்ளன. எனவே மலைவாழ்மக்கள் தங்கள் குழந்தைகளுக்கு முறையாகக் கல்வி பயிலச் செய்ய வேண்டும். அப்போதுதான் முன்னேற முடியும்'' என்று குறிப்பிட்டார்.


**எஸ். நாகராஜன்**

**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**

# கயிறு தயாரிக்கும் தொழிலுக்குக் கடனுதவி

தென்னை நாரிலிருந்து கயிறு தயாரிக்கும் தொழில் மிகவும் லாபகரமானது என்று உணரப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தின் காசங்காடு கிராமத்தில் உள்ள இருபது குடும்பத்தினர் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். குடும்பத்தில் உள்ள அனைத்து நபர்களும் இந்தத் தொழிலைச் செய்கின்றனர்

சமீபகாலம்வரை வட்டிக்கடைக்காரர்களிடம் மிக அதிக வட்டிக்குக் கடன் வாங்கி,





இத்தொழிலை மேற்கொண்டிருந்த இம்மக்களுக்கு இப்போது வங்கிக்கடன் கிடைத்துள்ளது.

கிராமப்புறத் தொழிற்சாலைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 3000, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 5000, இந்தியன் வங்கி இந்த மக்களுக்குக் கடனாக வழங்கியுள்ளது. எட்டுக் குடும்பத்தினர் தற்போது நான்காவது முறையாகக் கடன் உதவி பெறுகின்றனர்.

நான்கு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஒரு குழுவாக இணைந்து, கயிறு திரிக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். ஒவ்வொரு குழுவினரும் நாளொன்றுக்கு ரூ. 300க்கும் குறையாமல் ஈட்டுகின்றனர். தங்கள் வருவாயின் சேமிப்பிலிருந்து தற்போது இம்மக்கள் அருகில் உள்ள பகுதிகளில் நிலம் போன்ற நிரந்தரச் சொத்துக்களையும் வாங்கியுள்ளனர்.

இங்குள்ள தென்னை நார் ஆலையும் இந்தியன் வங்கியால் நிதியுதவி பெறுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

# தமிழ்நாடு கனிம நிறுவனம்

## சென்னை-600 005.

( தமிழ் நாடு அரசு நிறுவனம் )

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப்பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்துக்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்திய தர மணல் | : | ஐ.எஸ். 650/1966 |
| 2. | சுண்ணாம்புக் கல் | : | கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCo_3$ |
| 3. | வெங்கக் கல் (குவார்ட்ஸ்) | : | +99.8% $Sio_2$ |
| 4. | பெல்ட்ஸ்பார் | : | +12% $K_2o$ |
| 5. | ரோஸ் குவார்ட்ஸ் | | ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது |
| 6. | சிலிகா மணல் | : | +99.7% $Sio_2$ |
| 7. | வெப்பத்தாங்கும் களிமண் | : | ரிப்ராக்டரி கிரேடு 32.1% $Al_2$ $O_3$ |
| 8. | வெர்மிகுலைட் | : | சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது. |
| 9. | விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட் | : | பொன் நிறமானது |
| 10. | சுண்ணாம்புச் சிப்பி | : | சராசரியாக $CaCo_3$ +94% |


தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:

தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்.
TWAD House 31 காமராஜர் சாலை
தபால் பெட்டி எண். 2961
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண். 848932
டெலக்ஸ் — 41 6081 TNMLIN
டிஐபிஆர்/17735/363/86/எஸ்ஏஎஸ்.

தொழிற்சாலை

டாமின் கிரானைட்ஸ்
மணலி - பொன்னேரி ரோடு
மணலி,
சென்னை - 600 068.
தந்தி - MINESALITE

## மாணவர் பக்கம்




### வகுப்பறையில் கம்ப்யூட்டர்கள்

அமெரிக்காவிலே வகுப்பறைகளிலும் கம்ப்யூட்டர்கள் வந்து விட்டன; வர்ஜினியாவில் உள்ள பள்ளி ஒன்றில் இந்தச் சின்னஞ்சிறுமி தனது பிஞ்சுக்கரங்களால் கம்ப்யூட்டர் ஒன்றை இயக்குவதைப் பாருங்கள்.

## மழைபோல் பயன்படு தம்பி!

—இரா. கங்கைமணிமாறன்



பூவைப் போலப் புன்னகை சிந்திப்
பொலிவை ஏந்திடு தம்பி! — உன்
நாவை அடக்கி நடத்தையில் தூய்மை
நாளும் வளர்த்திடு தம்பி!

அகலப் பார்வை ஆயிரம் கொண்டு
அவனி அளந்திடு தம்பி!—உன்
'நகமும் சதையும் நாடும் மொழியும்'
அதைமறக் காதே, தம்பி!

உழைக்கும் ஆர்வம், ஊக்கம், முயற்சி
உனக்குப் புகழ்தரும் தம்பி! — நீ
மழையைப் போல மாநிலத் துக்குப்
பயன்பட வேண்டும் தம்பி!

பேதம் வளர்த்திடும் சாதி மதங்களைப்
பின்னே தள்ளிடு தம்பி! — உனை
மோத நினைத்திடும் பகைகளை வீழ்த்தி
முன்னே வந்திடு தம்பி!




'டிரான்ஸ்பார்மர்' என்றால் என்ன?
—மின்சக்தியைக் கூட்டவும் குறைக்கவும் பயன்படும் கருவி யாகும் இது.

ஆக்ஸிஜனைக் கண்டறிந்தவர் யார்?
—ஜோசப் பிரீஸ்டிலி.

மின்தூக்கியை ( Lift ) உலகிற்குக் கண்டறிந்து காட்டிய விஞ்ஞானி யார்?
—ஓடிஸ் என்ற அமெரிக்க விஞ்ஞானி, 1852-ஆம் ஆண்டு கண்டுபிடித்தார்.

கப்பலில் செல்லும்போது, மாலுமிக்குத் திசைகாட்டியாகப் பயன்படும் கருவியின் பெயர் என்ன?
—ஜைரோகாம்பஸ்.

கண்ணாடிகளுக்கு இரசம் பூசப் பயன்படுவது எது?
—வெள்ளீய இரசக் கலவை.

கலங்கரை விளக்குகளில் எவ்வகை லென்சு பயன்படுகிறது?
—குவிலென்சு.

தமிழ்நாட்டில் உப்புத் தயாரிக்கும் இடங்கள் யாவை?
—தூத்துக்குடி, வேதாரணியம், அதிராம்பட்டினம், எண்ணூர்.

அட்லாண்டிக் கடலையும், பசிபிக் கடலையும், இணைக்கும் கால்வாய் எது?
—பனாமா கால்வாய்.

உலகின் மிகப்பெரிய ஓட்டல் எங்குள்ளது?
—பீக்கிங்கில்.

தரையில் அதிக வேகமாக ஓடக்கூடிய மிருகம் எது?
—சிறுத்தைப் புலி.

தமிழ்நாட்டில், ஏரி மாவட்டம் என அழைக்கப்படுவது எது?
—செங்கற்பட்டு.

ஜப்பான் நாட்டின் வேறு பெயர் என்ன?
—நிப்பன்.

## "நாக்குப் பூச்சிகளை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசியிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பன்மின்த்* தான் பலிச்சுது... பால் நஷ்டம் தராமலே!"



கறவைப் பிராணி உலகுக்கு நல்ல சேதி!

தன்னிகரற்ற

# பன்மின்த்*

(மொரண்ட்டெல் ஸிட்ரேட்)

### நாக்குப் பூச்சிகளை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

''பாழும் நாக்குப் பூச்சிகளால்—அம்மம்ம, நான் பட்டபாடு: பலவீனம் பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பன்மின்த் தான் பலிச்சுது—அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!''

**பால் இழப்பே இல்லை.**

''அருமையான சேதி—எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும், சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பன்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பன்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால், மனிதருக்குக் கெடுதலே இல்லை—நூற்றுக்கு 100 பத்திரமானது.''

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

''என் தங்கச்சி—பிள்ளைத் தாய்ச்சி—அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பன்மின்த் சினைக் காலம் முழுக்க எந்தக் கெடுதலும் செய்யலை, ஏன், பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலை. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆறுதலான சுகம்!''

**வசதி மிக்கதும் கூட.**

''சாப்பிட வெகு இலகு பன்மின்த். சுண்டிவிடுங்க ஒரு குளிகை (எங்க மாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு), உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!''

பால் இழப்பே இராது
பன்மின்த்
விலையை ஈடு செய்வது

LINTAS BMT 2 2217 TM

கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் சிறந்த மருந்து.

**பன்மின்த்***

புழுக்களைக் கொல்லும்! ஆரோக்கியத்தை வெல்லும்!

*யூ.எஸ்.ஏ. ஃபைஸர் இன்க்.கிறவன டிரேடு மார்க்.

**pfizer**

மேலும் விவரமறிய, எழுதுவீர் இம் முகவரிக்கு: ஃபைஸர் லிட்., பி.ஓ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400021.

**தலைமைச் செயலாளர் அறிவிப்பு**

# அரசு அலுவலர்கள் அலுவலகங்களுக்குள் புகை பிடிக்கத் தடை

**1988** ஜூலை 1-ந்தேதி முதல் தமிழ்நாடு முழுவதிலுமுள்ள அரசு அலுவலகங்களில் சிகரெட், பீடி, சுருட்டு பிடிப்பது அறவே தடை செய்யப்படுகிறது. மாநில அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள், வாரியங்கள் ஆகியவற்றிலும் புகை பிடிக்கக்கூடாது.

மாநில புற்றுநோய்த் தடுப்பு ஆலோசனைக்குழு, புகை பிடிப்பதால் நுரையீரலில் புற்றுநோய் ஏற்படும் என்றும், இதைத் தடுப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குமாறு மாநில அரசுக்கு அறிவுரை வழங்கியிருந்தது. உலகச் சுகாதார நிறுவனமும், ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன்பு உலகின் பல்வேறு நாடுகளின் அரசு அலுவலகங்களில் புகை பிடிப்பதைத் தடுத்து நிறுத்தியுள்ளது. ஐ. நா. சபையிலும் இம்மாதிரியான தடை அமலில் இருந்து வருகிறது. சென்னைக் கோட்டையிலும் மற்றுமுள்ள எல்லா அரசு அலுவலகங்களிலும் புகை பிடிப்பது தடை செய்யப்படுகிறது.

இந்த தகவலை, தலைமைச் செயலாளர் திரு எம். எம். ராஜேந்திரன் தெரிவித்தார். கடந்த 13-6-88 அன்று செய்தியாளர்களிடம் மேலும் அவர் தெரிவித்த கருத்துக்கள்:

நகரில் ஓடும் பஸ்களில் புகைபிடிக்கத்தடை இருக்கிறது; தொலைதூரம் பயணம் செய்யும் புகை பிடிக்காத பயணிகளுக்காகத் தனிப்பெட்டியை விட, ரெயில்வே நிர்வாகம் திட்டமிட்டிருப்பதும், உள்நாட்டு விமானங்களில் புகை பிடிக்கதடை விதிக்கப்பட்டிருப்பதும் நினைவிருக்கலாம்.

## ரூ. 11 கோடியே 62 இலட்சம் செலவில் புதிய பாசனத் திட்டங்கள்

தமிழ்நாட்டில் உணவு உற்பத்திக்கான தீவிர திட்டங்களை மேற்கொள்ளும் வகையில் தீவிர பாசனத் திட்டங்களை அரசு அமல்படுத்த உள்ளது. 8 மாவட்டங்களில் பாசனக் குளங்களைச் சீர்படுத்துவது, கரைகளைப் பலப்படுத்துவது, தண்ணீரின் கொள்ளளவை அதிகப்படுத்துவது, பாசன கால்வாய்களை மேம்படுத்துவது ஆகிய வேலைகளுக்கு ரூபாய் 11 கோடியே 62 லட்சம் ரூபாய் செலவிடப்படும். செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு, வடார்க்காடு, புதுக்கோட்டை, திருச்சி, மதுரை, அண்ணா, சிதம்பரனார், நெல்லை, கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் கூடுதலாக 6050 எக்டேர் நிலம் பாசன வசதி பெறும்.

உணவு உற்பத்தி தீவிரத் திட்டத்தில் உழவர்களுக்குத் தேவையான கடன் வசதி செய்து தர வழி முறைகளைப் பற்றி தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுடன் மாநில அரசு ஆராய்ந்து ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளது. அதன்படி விவசாயிகளின் கடன் தேவை ரூபாய் 52 கோடியே 45 லட்சமாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த வங்கிகள் 30 கோடி வரை விவசாயிகளுக்குக் கடனுதவி அளிக்கும்.

**வறுமையை அகற்றிட பெண்களுக்கு வேலை வாய்ப்பு**

வறுமை ஒழிப்புத் திட்டத்தில் அதிகமாகப் பயன் பெறுபவர்களில் பெண்களின் பங்கு தேசிய அளவில் தமிழகத்தில் அதிகமாக உள்ளது.

மத்திய அரசு 30 சதவீதம் இலக்கு நிர்ணயித்துள்ளது. ஆனால் தமிழகத்தில் 33 சதம் அளவுக்கு வறுமை ஒழிப்பில் பெண்கள் பலன் பெற்றிருக்கிறார்கள். மேலும் பெண்கள் பயனடைய தமிழக அரசு புதிய யுக்திகளைக் கையாள உள்ளது.

குடும்பப் பொறுப்பாளர் பெண்ணாக உள்ள குடும்பங்களைக் கணக்கெடுத்து வட்டார வளர்ச்சி அலுவலர் பட்டியலைத் தயாரித்து அரசுக்கு அனுப்புவார். விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், விவாகரத்து செய்துவிட்டவர்கள் ஆகிய பெண்கள் நிர்வகிக்கும் குடும்பங்களும் பயன்பெறும். இந்தியாவிலேயே இத்திட்டம் தமிழகத்தில் முதல் தடவையாக அமல்படுத்தப்பட உள்ளது.

**உடனடியாக ஓய்வூதியம்**

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் ஓய்வூதியத் தொகை தாமதமாகக் கிடைக்கிறது என்ற புகார் வந்தது. இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அரசு ஊழியர் ஒருவர் பணி முடிந்து ஓய்வு பெறும் நாளுக்கு முந்தைய நாள் பென்ஷனுக்கான தஸ்தாவேஜுகள் அனைத்தும் அவருக்குக் கிடைக்கச் செய்யப்படும். முதல் கட்டமாக, தலைமைச் செயலகத்தில் இந்தப் புதிய முறை அமலுக்கு வரும். பின் படிப்படியாக அரசு அலுவலகங்கள் எல்லாவற்றிலும் அமல்படுத்தப்படும்.

# அரசின் அறிவிப்புகள்

நியாயவிலைக் கடைகளில் விநியோகிக்கப்படும் அத்தியாவசிய உணவுப் பொருட்களைத் தவிர, மற்ற உணவுப் பண்டங்கள் பொது மக்களுக்கு நியாய விலையில் தட்டுப்பாடின்றி கிடைக்கச் செய்யப்படும். இதற்காக சென்னை மாநகரில் மேலும் நான்கு இடங்களில் 'அமுதம் பல்பொருள் சிறப்பங்காடி' களைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விரைவில் திறக்க உத்தேசித்துள்ளது.

சத்துணவுக் கூடங்களுக்குக் காய்கறி, சாகுபடியாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் வாங்கப்படுகிறது. காய்கறிகளின் விலை-வெளிச்சந்தை விற்பனை விலையைவிட அதிகமாக இருந்தால், அன்றாடத் தேவை அடிப்படையில் வெளிச் சந்தையிலிருந்து அவற்றை வாங்கிக்கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ்நாட்டில், மூடப்பட்டுள்ள ஆலைகளைத் திறந்து, முன்போல் செயல்படச் செய்வதுபற்றி பரிசீலிக்கப்படுகிறது. ஆலை நிர்வாகிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், நிதிநிறுவனங்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் கலந்துபேசி அனைவரும் ஏற்கக்கூடிய வகையில் ஒரு செயல்திட்டம் உருவாக்கப்படுகிறது. இந்தப் பணி விரைவில் முடிவடையும் என்று மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. ஏ.பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

பொதுப்பள்ளிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியைச் சேர்ந்த மாணவமாணவியருக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள தனிப்பள்ளிகள் அல்லாமல் ஆறிலிருந்து பத்தாம் வகுப்பு வரை படிக்கும் பத்துலட்சம் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடி வகுப்புகளைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு இலவசமாக நோட்டுப் புத்தகம் வழங்கப்படும். இதற்காக அரசு ஒருகோடியே இருபத்தெட்டு லட்சம் ரூபாய் செலவிடும்

ஜப்பானியத் தொழில் நுட்பத்துடனும், நிதியுதவியுடனும் தமிழ்நாட்டில் ஐந்து இடங்களில் ரூ. 60 கோடி செலவில் உயர் தொழில் நுட்பத் தொழிற்பேட்டைகள் அமைக்கப்படவுள்ளன.

பொதுநலன் கருதியும், சென்னை நகரின் நிலத்தடி நீர் வளத்தைப் பாதுகாப்பதுபற்றியும் ஆராயப்பட்டது. சென்னையிலும் செங்கற்பட்டு மாவட்டத்தின் சில கிராமங்களிலும் நிலத்தடி நீரை அதிகமாக எடுப்பதையும், பயன்படுத்துவதையும், வெளியே கொண்டுபோவதையும் கட்டுப்படுத்துவதற்குரிய ஒழுங்குமுறைகள் அரசால் வகுக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றுவாரியம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

சாலை விபத்துகளைத் தவிர்ப்பதற்காக மோட்டார் ஓட்டிகளுக்கு லைசன்ஸ் வழங்குவதற்கான விதிகளை கடுமையாக அமல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

சுற்றுப்புறச் சுகாதாரத்தைப் பாதுகாக்கவும், கால்நடைகளால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதைத் தவிர்க்கவும், சென்னை நகரில் உள்ள கால்நடைகளை நகருக்கு வெளியே அப்புறப்படுத்தவும் வகை செய்யும் சட்டம் ஒன்று அரசால் விரைவில் கொண்டுவரப்படவிருக்கிறது.

இந்த ஆண்டில், சென்னையில் அம்பத்தூர், ஆவடி, மாதவரம் உட்படச் சில பகுதிகளில் 15 ஆயிரத்து நானூறு வீடுகள் கட்ட அரசு திட்டமிட்டிருக்கிறது. சென்னை நகரக் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 14 ஆயிரத்து 369 குடிசை வாழ் மக்களுக்கு இந்த ஆண்டில் வீட்டுவசதி செய்து தரப்படும் என்று மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி.அலெக்சாண்டர் தெரிவித்தார்.

தொழில் துறையில் சில முக்கியப் பிரச்னைகளுக்கு வழிகாண்பதற்காக ஆறு நிலைக் குழுக்களைத் தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. இக்குழுக்கள் அடிக்கடி கூடி, தமது பரிந்துரைகளை மாநிலத் தொழில் ஆலோசனைக் குழுவிடம் அளிக்கும். மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு ஜி.வி.ராமகிருஷ்ணா தலைமையில் மாநிலத் தொழில் கொள்கையை வகுப்பதற்கான மேல்நிலைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு சமூக நலத்துறை வாயிலாகச் சென்னை நகரில் உள்ள ஆதரவற்ற ஏழை விதவைப் பெண்களின் திருமணத்திற்கு ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னைக்கும் திருப்பதிக்கும் இடையே குளுமை வசதிகொண்ட சொகுசு பஸ், இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஜூன் 11-ஆம் தேதி முதல் விடப்படுகிறது.

பாம்பன் சாலைப் பாலம் இந்த ஆண்டு செப்டம்பர் மாத இறுதிக்குள் போக்குவரத்திற்குத் தயாராகிவிடும் என்று ஆளுநரின் ஆலோசகர் டாக்டர் எஸ்.எஸ்.சித்து தெரிவித்தார்.

சமுதாயத்தில் உள்ள நலிவுற்ற பிரிவினரின் நலனுக்காகத் தமிழகத்தில் தனித் திட்டங்களைச் செயல்படுத்த இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி 27 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கீடு செய்யத் தீர்மானித்திருப்பதாக ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ.பத்மநாபன் கூறினார்.

தமிழகத்தில் உள்ள ஓதுவார்களுக்கு மாதம் ரூ.250 ஓய்வூதியம் வழங்க அரசு முடிவு செய்திருக்கிறது.

தமிழ்நாட்டில் சேலத்திலும் தூத்துக்குடியிலும் புதிய விமான நிலையங்களை அமைப்பதற்குத் தேவையான நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

லஞ்ச ஊழலுக்கு இடமளிக்கக்கூடிய துறைகள், அரசுத்துறை நிறுவனங்கள், வாரி

யங்கள் ஆகியவற்றில் லஞ்ச ஊழலை அடியோடு தடுப்பதற்கான தனிப்பிரிவுகள் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

• வீடுகள் அல்லது குடியிருப்புகளில் நியாய வாடகை வசூலிக்கச் செய்யும் வகையிலும், வீட்டுவரி மூலமாகச் சென்னை மாநகராட்சிக்குக் கிடைக்கவேண்டிய சொத்துவரி முறையாகக் கிடைக்கச் செய்யும் வகையிலும் சென்னை மாநகராட்சியின் சொத்து வரி விதிப்புச் சட்டத்தில் தேவையான மாற்றங்களைச் செய்வது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

• அரசாங்கத்தின் ஆக்கபூர்வமான திட்டங்கள், அதன் மூலம் தமக்குக் கிடைக்கும் பலன்கள் ஆகியவற்றை மக்களுக்கு விளக்கி அறிந்து கொள்ளச் செய்யும் பயிற்சி மையம் ஒன்றை கிண்டியிலுள்ள திரைப்படத் தொழில் நுட்பக் கல்வி வளாகத்தில் துவக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாகச் செய்தி-மக்கள் தொடர்புத்துறையைச் சேர்ந்த இருபது பேருக்கு இப் பயிற்சியளிக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாக அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம்.ராஜேந்திரன் அறிவித்தார்.

• தமிழ்நாட்டில் சிறுதொழில்கள் வளர்ச்சிக்கான திட்ட வரைவுகளைத் தயாரிக்க நிபுணர்கள் அடங்கிய குழு ஒன்றை அரசு அமைக்கும்.

• சென்னை நகரில் உள்ள 100 பொதுக் கழிவறைகளின் உபயோகத்திற்காகத் தமிழ்நாடு குழாய்க்கிணறு வாரியம் ஆழ்துளைக் கிணறுகளை அமைக்கிறது. ஒவ்வொரு கிணறுக்கும் தலா பத்தாயிரம் ரூபாய் செலவிடப்படும்.

• தமிழகத்தில், அரிசித் தட்டுப்பாடு நீங்க தாய் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியில் ஒரு கணிசமான அளவைத் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கித்தர மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

• இந்த ஆண்டு, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக 16 விடுதிகளைக் கட்ட, தமிழக அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

• தமிழ்நாட்டின் நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்துக்கு உலகவங்கி ரூ. 602.54 கோடி ஒதுக்கி இருக்கிறது. சென்னை உள்ளிட்ட பத்து நகரங்களின் வளர்ச்சிக்கு இத்தொகை செலவு செய்யப்படும். உலக வங்கி இதுவரை எந்த ஒரு நகர்ப்புறவளர்ச்சித் திட்டத்துக்கும் இவ்வளவு பெருந்தொகையை ஒதுக்கியதில்லை.

• 1988-89ல் 24 இலட்சம் எக்டேரில் நெல் பயிரிடப்பட்டு 57 லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

• தமிழ்நாட்டில், ஆதிதிராவிடர்கள் வகுப்பினர் நலன் காக்க எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள், அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம்.ராஜேந்திரன் கூட்டிய கூட்டத்தில் ஆராயப்பட்டன. சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைப் பயனுள்ள வகையில் செயல்படுத்துவதென்று அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இந்தக் கல்வியாண்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர்க்கு எலக்ட்ரீஷியன் மெகானிக் விசேஷ பயிற்சிக் கழகம் சிதம்பரத்தில் துவக்கப்படவிருக்கிறது.

• சென்னை பொது மருத்துவமனையில் ஏழைகளுக்கு இலவச இதய அறுவைச் சிகிச்சை செய்யப்படுகிறது. இந்தத் துறையில் எவ்வளவு செலவானாலும் தருவதற்கு மாநில அரசு தயாராக இருக்கிறது.

• ஜப்பான் நாட்டு உதவியுடன் தமிழகத்தில் ஐந்து புதிய தொழிற்பேட்டைகள் நிறுவப்படவிருக்கின்றன.

• அனைவருக்கும் கல்வி வழங்க மத்திய அரசு வகுத்துள்ள திட்டம் மூன்று கட்டங்களில், நடப்புக் கல்வி ஆண்டில் தமிழ்நாட்டில் அமல் செய்யப்படும்.

## புதிய விமான நிலையங்கள்

சேலம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் விமான நிலையங்கள் நிறுவ அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. சேலத்திலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள ‘கமலாபுரம்’ என்ற இடத்தில் 130 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தி தேசிய விமானப்போக்குவரத்து ஆணைக் குழுமத்திடம் ஒப்படைக்க உள்ளது. நில ஆர்ஜிதம் செய்ய ரூபாய் 78 லட்சமும், நிலத்தை மேம்படுத்த ரூபாய் 48 லட்சமும் செலவாகும்.

தூத்துக்குடி அருகில் உள்ள வாகைக்குளத்தில் விமான தளம் அமைக்க 7 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் 180 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படும். இந்த இரு இடங்களிலும் விமானதளம் தலா ரூபாய் 82 லட்சம் செலவில் அமையும். இதற்கான கட்டுமானப் பணிகள் 18 மாதங்களுக்குள் முடிவடையும்.

• நவீன கட்டடத் தொழில் நுட்பத்தை அறிந்து கொள்ளும் வகையில் கொத்தனார்களுக்குப் பயிற்சி நிலையம் அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

• நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டத்தை விரிவாக்கப் புதிதாக 20 கோடி டாலர் (சுமார் 260 கோடி ரூபாய்) கடனுதவி அளிக்க அங்கேரி முன்வந்துள்ளது.

• தென்னார்க்காடு மாவட்டம் புவனகிரியில் 3.3 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட மின் நிலையம் ஒன்று ஐந்து கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்று மேதகு தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு ஏ.பத்மநாபன் அறிவித்தார்.

**தொகுப்பு: பி.எல்.ஆர்.**

# ஆக்கப் பணிகள்

# பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாமலிருக்க

# புதியவர்களுக்கு வேலைவாய்ப்பு

10-ஆம் பக்கத் தொடர்ச்சி

இலட்ச ரூபாயாக அவர்களுக்குக் கிடைக்கும் என்றும் தலைமைச் செயலாளர் திரு. ராஜேந்திரன் சொன்னார்.

பல்கலைக் கழக மானியக் குழுவின் பரிந்துரையை ஏற்று தங்களுக்குக் கூடுதல் புதிய ஊதிய விகிதங்களை அளிக்க வேண்டுமென்று பல்கலைக் கழக, கல்லூரி ஆசிரியர்கள் நீண்ட நாள்களாக அரசுக்கு வேண்டுகோள் விடுத்து வந்தனர். இந்தக் கோரிக்கையை அரசு ஏற்று விரைவில் நல்ல முடிவை அறிவிக்கும் என்று ஆளுநர் உறுதிமொழி அளித்திருந்தார். பல்கலைக் கழக மானிய ஊதியக் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் கூடுதல் சம்பளம் கொடுப்பதற்கு மத்திய அரசு அனுமதியும் நிதி உதவியும் தேவை, இந்த அனுமதி மூன்று தினங்களுக்கு முன்புதான் தமிழக அரசுக்குக் கிடைத்தது.

புதிய ஊதிய விகித அமலுக்கான ஆணை 29-6-'88-ல் பிறப்பிக்கப்படுகிறது.

வேளாண்மை மற்றும் தொழில்நுட்பபல்கலைக் கழகங்களில் பணியாற்றும் பேராசிரியர்களுக்கு இந்த ஊதிய விகிதம் பொருந்தாது. மற்றபடி கல்லூரி, சட்டக் கல்லூரி பல்கலைக்கழகப்பேராசிரியர்களுக்கு இந்தப் புதிய ஊதிய விகிதம் பொருந்தும். இதன் மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ஆறு கோடியே நாற்பது இலட்ச ரூபாய் கூடுதலாகச் செலவாகும். இதன் மூலம் 15 ஆயிரத்து 385 பேர் பயன்பெறுவர் என்றும் அரசு தலைமைச் செயலாளர் தெரிவித்தார்.

---

**வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டதற்காக 'உங்கள்மேல் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது?' என நோட்டீஸ் மூலம் விளக்கம் கேட்கப்பட்ட அலுவலர்கள், தங்கள் செயலுக்கு வருந்தி மீண்டும் பணிக்கு வர அனுமதி கேட்டால், மறுபடியும் வேலையில் சேர அனுமதிக்கலாம். ஆனால் வேலைக்கு வராத நாட்கள் தற்செயல் விடுப்பாகக் (கேஷுவல் லீவ்) கருதப்படமாட்டாது.**

**வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட நாட்களைப் பொறுத்தவரை, அவர்கள் வேலைக்கு வராத நாட்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படமாட்டாது.**

**நாளை அரையாண்டு இறுதிநாள் (30.6,88) என்பதால் வங்கிகளுக்கு விடுமுறை. எனவே, இன்று (29.6.88) அரசு அலுவலர்களுக்குச் சம்பளப் பட்டுவாடா செய்யப்பட்டது. வேலைக்கு வராத நாட்களுக்குச் சம்பளம் பிடித்துக்கொண்டு ஊதியம் வழங்கப்பட்டது.**

**[தலைமைச் செயலாளர், 29.6.88 அன்று பத்திரிகையாளர் சந்திப்பில் கூறியது.]**

---

## பார்த்தோம் படித்தோம்!

16.6.88 இதழில் ''புகைக்காதீர் உயிரைப் பகைக்காதீர்'' என்ற கட்டுரை தக்க வேளையில் வெளிவந்துள்ளது. தமிழக அரசின் புதிய ஆணைப்படி 1.7.88 லிருந்து அரசு அலுவலகங்களிலும் புகைப்பிடிக்கத் தடை செய்யப்பட்டுள்ளது. எங்கள் நன்றி.

—செ.நெ.தெய்வநாயகம்
நுரையீரல் மருத்துவப் பேராசிரியர்,
சென்னை மருத்துவக் கல்லூரி,
சென்னை-17

உப்பு யாத்திரை குறித்து வெளிவந்திருக்கும் செய்திகள் யாவும் தேச விடுதலைக்குக் காங்கிரஸ் போராடியதை, இன்றைய தலைமுறைக்கு இளைஞர்களுக்கு நினைவூட்டுகிறது. தமிழக அரசு வெளியிடும் செய்திகள் மக்களுக்குத் தேச பக்தி உணர்வை ஊட்டுகிறது. பாராட்டுகிறோம்.

—நா.அருணாசலம்
கண்டவராயன்பட்டி

நூல்நயம் பகுதி, மாணவர் பக்கம் சிறப்பாக இருக்கின்றன. செய்திகள் அனைத்தும் தேன் துளிகள்.

எஸ்.செல்வராஜ்
இரகுநாதசமுத்திரம்.

நெஞ்சையள்ளும் தஞ்சைக் கோயில்-கட்டுரை படித்தேன். கட்டுரையின் மூலம் தஞ்சைக்கோயிலின் தனிச் சிறப்பைப் புரிந்துகொண்டேன். பின்பக்க அட்டை - கொடைக்கானல் ஏரிக்காட்சி குளுமையாக இருந்தது.

—ப.ஷேக்அலாவுதீன்
திருநெல்லிக்காவல்.




# கிராமப்புற விவசாயிகளுக்கு தொழில் நுட்ப உதவிகள்

தஞ்சை மாவட்டம், தமிழகத்தின் நெற்களஞ்சியம் என்று சிறப்பிக்கப்படுகிறது. ஆகவே, இங்கு விவசாயப் பெருங்குடி மக்களும், விவசாயப் பண்ணைகளும் ஏராளம்.

அண்மையில் (27-5-88) அன்று தஞ்சைக்கு வருகை புரிந்த மாண்புமிகு மத்திய அரசின் இணை நிதி அமைச்சர் திரு எட்வர்டோ பெலைரோ அவர்கள், மருங்குளம் விவசாயப் பண்ணைக்குச் சென்று விவசாயப் பெருங்குடி மக்களைச் சந்தித்தார்.

விவசாயிகளின் குறைகளைத் தீர்ப்பதற்காக இனிமேல் வங்கி அலுவலர்கள் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை கிராமங்களுக்குச் செல்லவேண்டுமென்று உத்தரவிட்டார். மேலும், கால்நடை காப்பீட்டு இழப்புத் தொகையாக ஆறு விவசாயிகளுக்கு ரூ. 18,000 வழங்கினார்.

''கிராமங்கள் முன்னேறவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டே அரசு திட்டங்களை வகுத்துச் செயல்படுகிறது. உங்களுக்கு அளிக்கப்படும் திட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும். அதனைப் பயன்படுத்தி வருவாயில், பெற்ற கடனைத் திரும்பச் செலுத்தவேண்டும். அப்பொழுதுதான் அரசின் பிற திட்டங்களையும் செயல்படுத்த முடியும்'' என்று கூறினார்.

தமிழ்நாட்டில் மத்திய அரசின் யுனைடெட் இன்சூரன்ஸ் கம்பெனி மூலம் பதினைந்து மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் தனி நபர் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தினை தஞ்சை மாவட்டத்திலும் செயல்படுத்த உத்தரவிடும்படி, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர், மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டார். தஞ்சை மாவட்டத்தில் நிலமற்ற விவசாயிகள் அதிக அளவில் இருப்பதைக் கருத்திற் கொண்ட அமைச்சர், இத்திட்டம், தஞ்சை மாவட்டத்திலும் செயல்படுத்தப்படும் என்று உறுதி கூறினார்.


இத்திட்டத்தின்படி ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் 7,200 ரூபாயோ அல்லது அதற்குக் குறைவாகவோ இருக்கும் நிலையில், சம்பாதிக்கும் நபர் ஏதாவது விபத்து காரணமாக இறக்க நேரிட்டால் அந்தக் குடும்பத்திற்கு ரூ. 3,000 உதவித்தொகை தரப்படும். இத்திட்டத்திற்குக் கட்டணம் எதுவும் செலுத்த தேவையில்லை. சம்பந்தப்பட்டவர் இறந்த 180 நாட்களுக்குள் உதவித் தொகைக்காக மனுச் செய்தால் போதுமானது. இத்திட்டம் யுனைட்டெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

பிறகு, செய்தியாளர்களிடம் பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ''பாரதப் பிரதமர் அவர்களின் ஆலோசனையின் பேரிலேயே கிராமப்புறங்களில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கடனுதவியும், தொழில் நுட்ப உதவியும் அளிக்கும் வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. வங்கி அதிகாரிகளே கிராமங்களுக்குச் சென்று விவசாயிகளைச் சந்தித்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. நம் நாட்டில் வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட - 1969ஆம் ஆண்டு மொத்தம் 8,262 வங்கிகளே இருந்தன. ஆனால் தற்போது 54,000 வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 31,000 வங்கிகள் கிராமப்புறங்களிலும், 11,000 வங்கிகள் சிறுநகர்ப் பகுதிகளிலும் இயங்கி வருகின்றன. இவ்வாண்டு தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் 154 புதிய வங்கிகள் திறக்கப்படும்.

''கால தாமதத்தைத் தவிர்ப்பதற்காகவும், விவசாயிகளுக்கு ஏற்படும் அலைச்சலையும், சிரமத்தையும் தவிர்ப்பதற்காகவும், விவசாயக் கார்டுகள் வழங்கப்படும். இத்திட்டத்தின்படி வங்கிகள் ஒவ்வொரு விவசாயிக்கும் உரிய கடன் தொகையை நிர்ணயித்து அவருக்கு ஒரு விவசாய கார்டு வழங்கும். விவசாயி எந்த உர விநியோகக் கடையில் வேண்டுமானாலும் சென்று அந்த உரக் கார்டைக் காட்டி குறிப்பிட்ட தொகைக்கான உரத்தையும், பூச்சி மருந்தையும் கடனாகப் பெற முடியும்.

''கிராமப்புற விவசாயிகள், நவீன விவசாய முறையைக் கையாள வேண்டுமென்பதற்காக, கிராமங்களைக் குழுக்கள் வாரியாகப் பிரித்து ஒவ்வொரு குழுவையும் ஒவ்வொரு வங்கி கண்காணிக்கும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி வங்கிகளே விவசாய சர்வீஸ் சென்டர்களை அமைக்கும். டிராக்டர்கள், பூச்சி மருந்து அடிக்கும் இயந்திரங்கள் முதலிய விவசாயக் கருவிகளை இந்த சர்வீஸ் சென்டர்கள் சரி பார்த்துக் கொடுக்கும். விவசாயம் பற்றிய தொழில் நுட்ப உதவிகளையும் இந்த மையங்கள் அளிக்கும்'' என்றார்.

**சி. நடராஜன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**தஞ்சை மாவட்டம்.**



# சென்னை வானொலி
## புதிய தொடர் நிகழ்ச்சிகள்

ஜூலைத் திங்கள் முதலாக, சென்னை-1 அலைவரிசைகளில் இரண்டு புதிய தொடர் நிகழ்ச்சிகளை, சென்னை வானொலி நிலையம் அறிமுகப்படுத்துகிறது.

1. மாறட்டும் மனோபாவம்

எழுதி வழங்குபவர் :டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி
நிகழ்ச்சி அமைப்பு: 'சேயோன்'

இத்தொடர் ஒவ்வொரு புதன் கிழமையிலும் காலை 8 மணிக்கு ஒலிபரப்பாகும்.

2. நல்ல தமிழ் பேசுவோம்-எழுதுவோம்.

எழுதி வழங்குபவர்; டாக்டர் முத்துக்கண்ணப்பர்

இந்நிகழ்ச்சி வெள்ளிக் கிழமை தோறும் காலை 8 மணிக்கு ஒலி பரப்பாகும்.

சென்னை -1 அலைவரிசைகளில் 1.7.88 முதல் 15.7.88 வரை ஒலி பரப்பாகும் முக்கிய நிகழ்ச்சிகள்:

1.7.88

இரவு 8.30 திரைப்பட நடிகர் எம்.என். நம்பியார் வழங்கும் 'நெஞ்சில் நிலைத்த இனிய நினைவுகள்'.

இரவு 10 மணிக்கு எம்.ஜோகுலம்மா வீணை இசை.

2.7.88

இரவு 8.15 'எல்லோருக்கும் வீட்டுவசதி' கருத்தரங்கம்.

4.7.88

காலை 8 மணிக்கு, தணிகை உலகநாதனின் 'எழுத்துலகில்' 11.40க்கு கல்வி ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் தொடக்கிவைக்கிறார். அதைத் தொடர்ந்து, 8.7.88 கல்வியாண்டில் 'கேட்டல்' குறித்த அறிக்கைகளை அனுப்பிய பள்ளிகளுக்கான பரிசுகளை நிலைய இயக்குநர் கோ.செல்வம் அறிவிப்பார். பிற்பகல் 3.30 மணிக்கு 'எல்லோருக்கும் கல்வி' நிகழ்ச்சியில் டாக்டர் விக்கிரமன் எழுதி வழங்கும் சிறுகதை.

7.7.88

மாலை 5 மணிக்கு 'அழகுமிகு சென்னை' உரைச்சித்திரம் -எழுதியவர் சரோஜினிதேவி.

8.7.88

இரவு 10 மணி திருக்கருகாவூர் ஜி.சீனிவாச ராகவன் இசை

10.7..88

பிற்பகல் 3.30க்கு 'நாய்க்குடை' புனர்வசு எழுதிய நாடகம்.

11.7.88

பிற்பகல் 3.30 மணி 'எல்லோருக்கும் கல்வி நிகழ்ச்சியில் 'கோமகள்' எழுதி வழங்கும் சிறுகதை. 5 மணிக்கு குன்றத்தூர் முருகன் கோயில் பற்றி கே.ஆர். சுரேந்திரன் உரைச்சித்திரம்.

13.7.88 இரவு 8.30க்கு டாக்டர் எம்.ஆர். செயராமன் வழங்கும் இலக்கிய வினா-விடை.'

8.45க்கு 'உரையரங்'கில் டாக்டர் சோ.பரமசிவம் வழங்கும் 'பேச்சுத்தமிழின் இன்றைய நிலைப்பாடுகள்.'

15.7.88

மாலை 7 மணிக்கு மு.நமச்சிவாயம் உரை-'கர்மவீரர் காமராஜ்'. 8.30க்கு 'கவிதைப் பூங்காவில்' தமிழழகன். 10 மணிக்கு சேஷம்பட்டி சிவலிங்கம் நாதசுரம்.

பழம்பெரும் இசைக்கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள்:

சென்னை வானொலி நிலையத்தின் பொன்விழா ஆண்டைக் குறிக்கும்வகையில் பழம்பெரும் கலைஞர்களின் இசைநிகழ்ச்சிகளின் ஒலிப்பதிவுகளை வானொலி களஞ்சியத்திலிருந்து நாள்தோறும் காலை 8.30க்கு சென்னை-1 'அரங்கிசை' நிகழ்ச்சியில் கேட்கலாம்.

1.7.'88

டி.ஆர்.மகாலிங்கம்-புல்லாங்குழல்

2.7.'88—

முசிறி சுப்பிரமணிய ஐயர்-பாட்டு

3.7.'88

காருகுறிச்சி அருணாசலம்-நாதஸ்வரம்

4.7.'88

பூதலூர்கிருஷ்ணமூர்த்திசாஸ்திரி கோட்டுவாத்தியம்.

5.7.'88

திருமதி எம்.எஸ்.சுப்புலட்சுமி - பாட்டு

6.7.'88

தேவகோட்டை ஏ.நாராயண ஐயங்கார்-வீணை

7.7.'88

முடிகொண்டான் வெங்கட்ராம ஐயர்-பாட்டு

8.7.'88

எச்.ராமச்சந்திரசாஸ்திரி புல்லாங்குழல்

9.7.'88

சித்தூர் சுப்பிரமணியபிள்ளை - பாட்டு

10.7. '88

கரூர் சுந்தரம்ஐயர்-வயலின்

11.7.'88

குன்னக்குடி வெங்கட்ராம ஐயர்-பாட்டு

12.7.'88

ஏ.நாராயணஐயர் கோட்டுவாத்தியம்

13.7.'88

எம்.எம்.தண்டபாணிதேசிகர் - பாட்டு

14.7.'88

டி.வி.நமச்சிவாயம்-பாட்டு

15.7.'88

மாயூரம் எஸ்.ராஜம்-பாட்டு



# ஒருமைப்பாட்டு உணர்வில் உருகிநின்ற கவியரசர் கண்ணதாசன்

**கவியரசு கண்ணதாசன் அவர்களின் 62-வது பிறந்த நாளை (24-6-88) யொட்டி இக்கட்டுரைத் தொடர் வெளியிடப்படுகிறது.**

1965ல் இந்தியத் திருநாட்டின் மீது பாகிஸ்தான் படையெடுத்து வந்தபோது கவியரசரின் உள்ளம் போர்க்களத்தைச் சந்தித்தது. வீறு கொண்டெழுந்தது. கவிதைத் தோட்டாக்கள் பலவற்றை வெடித்தது. சான்றுக்கு ஒன்று.

காளையர் வருக கன்னியர் வருக
கைவாள் மறவர் களம்புக வருக
வேளை இதுவே வேறொன்று மில்லை
வீரம் புலப்பட விரைந்து புறப்படு
கோடி அகதிகள் கொட்டிய கண்ணீர்
நீதி கேட்கின்ற நேரம் இதுதான்.
பதினே_ழாண்டு பட்டபாட்டுக்கு

பதிலடி கொடுக்க பாரதம் எழுந்தது
புகைவன் சேனை பஞ்சாப்ப் பறந்தது
பஞ்சாய்ப் பறக்கவே பகைகொண்ட மூடன்
பஞ்சாப் எல்லையில் படைகொண்டு வந்தான்
பாரத மக்களே பாரத மக்களே
நீரெதிர் பார்த்த நேரம் பிறந்தது
இந்துஸ் தானம் ஓங்கி எழுந்தால்
எந்தஸ் தானம் மிஞ்சும்! எழுக!
இந்துஸ் தானத்தை இரண்டாய்ப்பிரித்து
ஏகாதி பத்தியம் எல்லை வகுத்தது
எல்லை உடைப்போம் ஈரே ழாண்டுத்
தொல்லைப் பகையைத் தூள் தூளாக்குவோம்.
வானில் பகைவன் விமானம் பறந்தால்
வந்தது பகையென வருந்தா தேநீ
சாவை அவனே சந்திக்க வருகிறான்
சபாஷ் எனநீ தலைதூக்கி ஆடு
நமது ராணுவம் நாட்டின் பெருமை!
பகைவன் டாங்கியை பழுது படாமல்
பரிசாய்ப் பெற்றது பாரத ராணுவம்
எழுக பாரதம் எழுக பாரதம்
இந்துஸ் தானம் எழுக ! எழுக!
பகைவன் ஒழிக! பாரதம் வாழ்க!

கவிதை எழுதியதுடன், ஊரெல்லாம் அலைந்து. போர் நிவாரண நிதி திரட்டித்தந்தார். தாமும் நிதி அளித்தார்.

இந்திய-பாகிஸ்தான் போரில் - இந்தியப்படைகள் லாகூரை நோக்கி முன்னேறின; நூற்றுக் கணக்கான டாங்கிகளை நமது வீரர்கள் பிடித்தார்கள். அந்தச்சேதி கவியரசரின் உள்ளத்தில் கிளர்ச்சியை உருவாக்கி, கவிதைச் சரத்தைத் தொடுக்கச் செய்தது. அக்கவிதையின் சில பகுதிகள்:

எட்டு லட்சத்தினை எட்டிய வீரர்கள்
கட்டுப் பாடும் கடமை உணர்ச்சியும்
கொட்டும் பனியில் குளிர்ந்தெழும் மேனியும்
கொண்டு நிற்பதைக் குளிர்ந்த சிந்தையால்
வாழ்த்த மறந்தோர் மரத்தின் பட்டைகள்.

யாரே ஆயினும் அன்னை பூமியில்
காலடி வைத்தால் கருவை யறுப்போம்
என்னும் பாடலே எங்கும் முழங்குக!

மற்றவை மறந்து மானம் ஒன்றையே
சற்றே நினைக! சரிதம் நம்வசம்!

போர்க்களத்தையும் நமது போர்வீரர்களையும் குறித்துப் பாடி மகிழ்ந்ததுடன் கவியரசர் நிற்க வில்லை; போர் முடிந்தபின்னர் போர் வீரர்களைப் பாராட்டிப் போற்றுவதற்காக தமிழகக் கலைக்குழுவினரை அழைத்துக்கொண்டு ஆதம்பூர், அல்வாரா, ஜலந்தர் முதலிய இராணுவ முகாம்களுக்குச் சென்று கலை நிகழ்ச்சிகளை நடத்திக் காண்பித்தார்

அவருடைய ஒருமைப்பாட்டு உணர்வுக்கெல்லாம் மகுடம் வைத்ததுபோல்-1969ஆம் ஆண்டின் சிறந்த இந்தியத் திரைப்படப் பாடலாசிரியர் என்ற விருது அவருக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்டது. ஒரு

புலவர் தமிழ்ப்பித்தன்

மைப்பாட்டை வலியுறுத்தும் வகையில்-'குழந்தைக்காக' என்ற படத்திற்கு எழுதிய விருது பெற்ற அந்தப் பாடல் இதுதான்:

ராமன் என்பது கங்கை நதி
அல்லா என்பது சிந்து நதி
ஏசு என்பது பொன்னி நதி
நதிகள் பிறக்குமிடம் பலவாகும்
எல்லா நதியும் கலக்குமிடம் கடலாகும்.

'`பாதைகள் பல; எனினும் பயணம் செய்யும் நோக்கம் ஒன்றே' என்ற கொள்கையை இந்தப் பாடலிலே வெளியிட்டார்.

'மதங்கள் பலவாயினும் அவற்றின் உயிர்க் கொள்கை ஒன்றுதான்' என்னும் கருத்தை இந்தப் பாடலில் வலியுறுத்தினார்.

' வடிவங்கள் பலவாக இருக்கலாம். ஆனால் வணக்கத்திற்குரிய தெய்வம் ஒன்றுதான் 'என்ற தத்துவத்தை இந்தப் பாடலின் வாயிலாக உணர்த்தினார்.

பிரிவினை வாதியாக ஒரு காலத்தில் காட்சி தந்த கவியரசர் கண்ணதாசன், மனம் மாறி குறுகிய நோக்கச் சங்கிலியை அறுத்தெறிந்து ஒருமைப்பாட்டு உபாசகராக மாறி, உபதேசியாகவும் திகழ்ந்து, புதிய வரலாற்றை அமைத்துக்கொண்டார்.

தேசிய நீரோட்டத்தில் கலந்த கவியரசர் கண்ணதாசனின் உள்ளம், இந்தியப் பிரதமர் பண்டித ஜவகர்லால் நேருவின் மீது பற்றுக்கொள்ளத் தொடங்கியது. நேரு மீது அடிக்கடி பாமாலை சாற்றினார். 1962ல் சென்னையில் நடைபெற்ற பாரதி விழாக் கவியரங்கில் நேருவைக் குறித்துக் கவியரசர் பாடிய கவிதையின் ஒரு பகுதி:

போதிமரப் புத்தன் போய்விட்டான் என்றிருந்தோம்
பாதிவழி போனஅவன் பண்டிதனாய்த் திரும்பி வந்தான்.
ஆதிமகன் ஏசுபிரான் அடங்கிவிட்டான் என்றிருந்தோம்
தாவியவன் பாரதத்தில் ஜவகர்லால் ஆக வந்தான்.

1963ல் இந்தியப் பிரதமர் நேரு, சென்னைக்கு வருகை புரிந்தபோது, ஆபட்ஸ்பரி மாளிகையில் நடைபெற்ற விழாவில் அவரைச் சந்தித்து, கால்தொட்டு வணங்கி, தாம் எழுதிய பாராட்டுக் கவிதையை அவரிடம் வழங்கி மகிழ்ந்தார் கவியரசர்.

''எங்கள் தலைவனே! இதயமே வருக!'' எனத் தொடங்கும் அந்தக் கவிதையின் ஒரு பகுதி வருமாறு:

ஒருவர் போலவே ஒருவர் வாழ்ந்திடும்
தருமம் நாட்டிய சமத்துவச் சித்தனே
இல்லை என்பதே இல்லை எனுமாறு
அள்ளி வைத்தஎம் அண்ணலே வருக!
... ... ... ...
பசி படர்ந்த பாரத பூமியில்
தொழில் வளர்த்தசெந் தோள்களே வருக!

1964ல் நேரு மறைவெய்தியபோது கண்ணதாசன் பாடிய கையறுநிலைக் கவிதைகளில் அவலச்சுவை பெருக்கெடுத்தது. தலைவனை இழந்த தலைவியின் புலம்பல் அந்தக் கவிதைகளிலே இழையோடியது.

சீரிய நெற்றி எங்கே?
சிவந்தநல் இதழ்கள் எங்கே?

எனத் தொடங்கி,

சாவே உனக்கொருநாள்
சாவு வந்து சேராதோ?
சஞ்சலமே நீயுமொரு
சஞ்சலத்தைக் காணாயோ?
தீயே உனக்கொருநாள்
தீமூட்டிப் பாரோமோ?
தெய்வமே உன்னையும்நாம்
தேம்பியழ வையோமோ?

என்று பாடி, கேட்போரின் உள்ளத்தை எல்லாம் கண்ணீர்க் குளத்தில் ஆழ்த்தி எடுத்து விட்டார்.


அடுத்தொரு பாடல்,

ரோஜா மலரே ஏன் மலர்ந்தாய்-எங்கள்
ராஜா இல்லையே மார்பினில் சூட

என்று, 'முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே' என்ற புறநானூற்றுப் பாணியில் பாடினார்.

மற்றொரு கவிதை:

கங்கைத் தனிநதியே-உனக்கோர்
கருணை வாய்த்ததடி
பொங்கும் கடலலையே-உனக்கோர்
புகழும் வாய்த்ததடி.



பச்சை வயலழகே— உனக்கவன்
பாசம் கிடைத்ததடி
இச்சைக் கினியமகன்— உடலை
எடுத்துத் தூவிவிட்டார்.
மண்ணிற் கலந்துவிட்டான்-அவனோர்
மந்திரமாகி விட்டான்.
விண்ணிற் பறந்துவிட்டான்-புதிய
வேதம் சமைத்துவிட்டான்.

தமது சாம்பலை வயல்வெளிகளில் தூவவேண்டும் என்று நேரு சொல்லியபடி, நிறைவேற்றப்பட்டது. அந்தச் செய்தியை இந்தக் கவிதையில் எடுத்துச் சொல்லி இதயத்தை நனைத்து விடுகிறார்.

அடுத்தொரு பாடல்:

தனியே எனக்கோர் இடம்வேண்டும்-தலை
சாயும் மட்டும்நான் அழவேண்டும்
வானகம் போய்வர வழிவேண்டும்-எங்கள்
மன்னனை நான்பார்த்து வரவேண்டும்.

துயரத்தின் உச்சக்கட்டம் இது. வாய்விட்டு அழுதால் துன்பம் தீரும் என்பது நடைமுறை. அதனால் தான் கவியரசர் தனது தலைசாயும் மட்டும் தான் அழவேண்டும் என்று அவாவுகிறார்.

1964 நவம்பரில் நடைபெற்ற நேரு பிறந்தநாள் கவியரங்கில் நேருவைக் குறித்துப் பாடிய கவியரசர் இந்தியத் திருநாடு நேருவின் தலைமையில் எய்திய நன்மையை எடுத்துச் சொன்னார். அதன் ஒரு பகுதி வருமாறு;

எங்கள் தலைவா! இனிய கரும்பின்
சாறெமக் காக்கி சக்கையில் வாழ்ந்த
திங்களே! தெய்வத் திருவின் நிழலே!
தேவன் தோட்டத் திராட்சைக் கொடியெனப்
பாவம் நீக்கிய பழியி லிருந்து
தேசம் காத்த தெளிநீர்ச் சுனையே
இறைவன் பற்றித் தமிழன் பாடிய
எல்லாப் பாட்டும் உன்புகழ் பாடும்
கண்ணிய மனிதர் காலடிச் சுவட்டில்
புண்ணியம் பெற்றது பூமி யென்பதை
என்றும் நினைவர்! எங்கள் நாயக!

—தொடரும்



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
100 சதவிகிதம் அசல் பட்டு
மற்றும் தங்க சரிகைகளைக்
கொண்டு நெசவு செய்யப்பட்ட
புதுமையான
பட்டுச்சேலைகளை
கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.
இந்தியாவின் மிகப்பெரிய
கைத்தறி கூட்டுறவு விற்பனை
நிறுவனம் கோ-ஆப்டெக்ஸ்.
அதற்குச் சொந்தமான
560 விற்பனைக்கூடங்கள்
மூலமாக கோடிக்கணக்கான
வாடிக்கையாளர்களின்
தேவைகளை பூர்த்தி செய்கிறது
DIPR: Efficient

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23



